மனித உரிமைகளுக்கான

# குழந்தைகளின் குரல்




http://www.coe.int/t/dghl/standardsetting/children/Default_en-childabuse2-1.jpg

# குழந்தைகளை பாலியல் வன்முறைகளிலிருந்து பாதுகாக்கும் சட்டம் 2012 (PCSOA)

## இப்புதிய சட்டத்தில் தண்டனை - ஒரு உந்துதல் கிடைக்கிறது

**– V. கங்காதரன்**

*சமீபத்தில் இயற்றப்பட்டுள்ள சட்டமான குழந்தைகளை பாலியல் குற்றங்களிலிருந்து பாதுகாக்கும் சட்டம் 2012 ஒரு சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த சட்டமாகும். குழந்தைகளை குறி வைத்து பாலியல் குற்றம் புரியும் மனிதர்களை தண்டிப்பதற்கான அருமையான சட்டம் இதுவென்று நுணுக்கமாக அலசுகிறார் திரு. V. கங்காதரன் அவர்கள்.*

மூன்று வயதேயான குமார் பாலியல் பலாத்காரத்தால் சமீபத்தில் இறந்துவிட்டான். காவல் நிலைய விசாரணைக் குறிப்பு கூறுவதென்னவென்னவென்றால் 25 வயதான ரமேஷ் என்பவனால் அவனைப் பார்க்க வந்தபோது குழந்தையான குமார் (பக்கத்து வீட்டில் வசித்ததால்) பாலியல் பலாத்காரத்துக்கு உள்ளாகி மூச்சுத் திணறல் ஏற்பட்டு இறந்திருக்கிறான். திருப்பூர் அருகிலுள்ள கிராமத்தில் நடந்து முடிந்த அக்கிரமம் இது.

கடந்த வருடம் ஆரோக்கியசாமி என்னும் தலைமை ஆசிரியர் மதுரைக்கு அருகில் உள்ள பொதும்பு என்னும் ஊரில் அரசுப் பள்ளிதனில் படிக்கும் பெண் குழந்தைகளை பாலியல் துன்புறுத்தல் செய்தமைக்காக கைது செய்யப்பட்டார். இது போலவே 65 வயதான பிரிட்டிஷ்காரர் ஜொனாத்தன் ராபின்சன் என்பவர் பதின்பருவ பையன் ஒருவனை பாலியல் பலாத்காரம் செய்ததற்காகவும் மற்றும் விழுப்புரம் அருகிலுள்ள கள்ளக்குறிச்சியிலுள்ள மெட்ரிக் பள்ளியில் பணிபுரியும் ஆசிரியர்கள் இருவர் 4 வயதுக் குழந்தையை பாலியல் துன்புறுத்தல் செய்தமைக்காக கைது செய்யப்பட்டனர். பிரிட்டிஷ் குடியுரிமை உள்ள பாட்ரிக் மேத்யூஸ் என்பவன் சென்னையில் பிரபலமான பள்ளி ஒன்றில் பயின்ற ஒன்பது பெண் குழந்தைகளை பாலியல் துன்புறுத்தல் செய்த குற்றத்திற்காக கைது செய்யப்பட்டான்.

இது போன்ற குற்றங்களை கவனிப்பதற்காக இரு நாடாளு–மன்றங்களிலும் குழந்தைகளை பாலியல் குற்றங்களிலிருந்து பாதுகாக்கும் சட்டம் 2012 சமீபத்தில் இயற்றப்பட்டுள்ளது. இந்தச் சட்டம் குழந்தைகளை பாலியல் பலாத்காரத்துக்குட்படுத்துவதினின்று காப்பாற்றும் தற்போது பாலியல் குற்றங்கள் இந்திய தண்டனைச் சட்டம் வழியாக பார்க்கப்பட்டு வருகின்றன. இந்தச் சட்டம் 1860ல் காலனியாதிக்கத்தின்போது இயற்றப்பட்டு பயன்படுத்தப்படுகின்றது. குழந்தைகளின் மீதான பாலியல் கொடுமைப்பற்றி இச்சட்டத்தில் எதுவும் சொல்லப்படவில்லை.

முக்கியமாக கவனிக்கப்பட வேண்டியது ஒன்று. அது என்னவென்றால் இந்திய தண்டனை சட்டத்தில் (IPC) பாலியல் குற்றத்தைப் பொறுத்தவரை குழந்தைகள், பெரியவர்கள் என்று பாகுபாடுபடுத்திப் பார்க்கப்படவில்லை குழந்தைகள் மீது பாலியல் குற்றங்களை செய்யும் மனிதர்கள் மீது தண்டனை கொடுக்க ஏற்படுத்தப்பட்டுள்ள இந்த சட்டமானது குழந்தைகளை பாலியல் குற்றங்களான பாலியல் கொடுமை மற்றும் பாலியல் சுரண்டல், பாலியல் குறித்த புத்தகங்களை குழந்தைகளுக்கு அறிமுகப்படுத்துதல் போன்றவற்றிலிருந்து பாதுகாக்கும் பொருட்டு மிகக் குறிப்பாக கொண்டுவரப்பட்டுள்ளது. இன்னொரு முக்கிய விசயம் என்னவென்றால் பெண் மற்றும் ஆண் குழந்தை என்று பாகுபாடு காட்டவில்லை.

குற்றங்களின் தன்மையை பொறுத்து தண்டனை பற்றிச் சொல்கிறது. இச்சட்டம் தண்டனைகள்

| செயல்பாடு | எதிர் செயல்பாடு |
|---|---|
| “உள் செலுத்தும்” பாலியல் கொடுமை எனில் | 7 வருடத்திற்கு குறையாத சிறை தண்டனை அல்லது ஆயுள் தண்டனை வரை கூட செல்லலாம் மேலும் அபராதம் (பிரிவு 3,4) |
| கடுமையான ’உள்செலுத்தும்’ பாலியல் கொடுமை எனில் | 10 வருட சிறை தண்டனை அது அயுள் தண்டனை என நீளும். மேலும், அபராதம் விதித்தல் (பிரிவு 5,6) |
| பாலியல் கொடுமை | மூன்று வருடத்திற்கு குறையாத சிறை அது ஐந்து வருடமாக நீளும் & அபராதம் பிரிவு (728) |
| கடுமையான பாலியல் கொடுமை | 5 வருடம் முதல் 7 வருடம் வரை மற்றும் அபராதம் (பிரிவு 9,10) |
| பாலியல் தொந்தரவு அல்லது மிரட்டல் | மூன்று வருடம் மற்றும் அபராதம் (பிரிவு 12) |

சாதாரணமானதிலிருந்து மிகக் கடுமையான தண்டனை வரை குற்றங்களைப் பொறுத்துச் சொல்கிறது. அபராதம் பற்றியும் விலாவரியாகச் சொல்கிறது இச்சட்டம்.

பாலியல் கொடுமைபற்றி இச்சட்டம் விரிவாகச் சொல்கிறது. பாலியல் நோக்கத்துடன் தொடுவது, பிறப்புறுப்புகளான யோனி, ஆண்குறிகள், மலத்துவாரம், பெண்ணின் மார்பகங்கள் இவைகளை தொடுவது மட்டுமில்லாமல் குழந்தைகளை தொடச் சொல்வதும் குற்றமாகும். உடலுறுப்புகள் சம்மந்தப்பட்டது பற்றி பாலியல் கொடுமைகள் என்றாலும் 'உள் செலுத்துதல்' பற்றிச் சொல்லப்படவில்லை. 'உள் செலுத்தும்' குற்றம்பற்றிச் சொல்லும்போது இச்சட்டம் (Panetratic Sexual Assault) பெண்ணின் பிறப்புறுப்பில் ஆணின் உறுப்பை செலுத்துவது அல்லது வாயில் செலுத்துவது அல்லது சிறுநீர்த்தாரை அல்லது மலத்துவாரத்தில் செலுத்துவது என்பது பற்றி சொல்கிறது. அது மேற்சொன்னவாறு குழந்தையிடம் செய்யச் சொல்லுவது அல்லது குழந்தையிடம் நடந்து கொள்வது அல்லது நடந்து கொள்ளுமாறு வேறொருவருடன் சொல்வது ஆகிய அனைத்தும் அடங்கும். ஆண் உறுப்பை என்றில்லாது எந்த ஒரு பொருளையும் செலுத்துவது என்பதுவும் வாய் தன்னை பெண் உறுப்பு, ஆண் உறுப்புகளில் அல்லது பிற உறுப்புகளில் வைப்பதுவும் இச்சட்டத்தின்கீழ் தண்டனைக்குரிய குற்றமாகும். இக்குற்றத்திற்கு ஏற்ற தண்டனையாக 7 வருடம் குறைந்தபட்சமாகவும் சில குற்றங்கள் ஆயுள் தண்டனை மற்றும் அபராதத் தொகையுடன் கூடியதாகவும் இருக்கலாம்.

ஒரு குற்றமானது "மிகக் கடுமையானதாக" எப்போது கருதப்படும் என்றால், அக்குற்றத்தைச் செய்பவர் குழந்தையின் நம்பிக்கைக்கு உரியவராகவோ, குழந்தையின் மீது அதிகாரம் செலுத்த உரிமை உடையவராகவோ அல்லது பாதுகாப்புப்படை மற்றும் காவல்துறையை சார்ந்தவராகவோ அல்லது அரசுப் பணிபுரிவராகவோ இருந்தால் அது மிகக் கடுமையானதாகக் கருதப்படும். இது கல்வி நிலையங்களில் பணிபுரிவராகவோ அல்லது மதச்சார்பு நிலையங்களில் மற்றும் மருத்துவமனைகளில் பணிபுரிபவரையும் குழந்தையின் உறவினராக இருந்தால் அவரையும் உள்ளடக்கியதாகும். "உள் செலுத்துதல்" என்னும் கடுமையான பாலியல் கொடுமைக்கான தண்டனை 10 வருடங்கள் சிறை தண்டனை என்பதோடு சில வழக்குகளில் ஆயுள் தண்டனையோடு கூடிய அபராத விதிப்புமாகவும் இருக்கும். "உள் செலுத்துதல்" அல்லாத பிற பாலியல் குற்றங்களுக்கான தண்டனை 5 வருடங்கள் சிறை தண்டனையிலிருந்து 7 வருடங்கள் வரை சிறை தண்டனை தருவதாகவோ அபராத விதிப்பு உடன் கூடியதாகவோ இருக்கலாம்.

பாலியல் தொந்தரவு அல்லது பாலியல் ரீதியான மிரட்டல்களைப் பற்றியும் இச்சட்டத்தில் பேசப்பட்டுள்ளது. பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் இச்சட்டமானது (PCSOA) பாலியல் தொந்தரவு அல்லது பாலியல் மிரட்டல் என்பது பற்றி என்ன விளக்கம் தருகிறதென்றால், ஏதேனும் ஒரு வார்த்தையை சொல்வது அல்லது ஒலி எழுப்புவது அல்லது ஜாடை காட்டுவது உடம்பின் ஒரு பகுதியையோ அல்லது உறுப்புகளையோ வெளியே தெரியுமாறு காட்டுவது அல்லது காட்சிப் பொருளாக்குவது அனைத்தும் இதனில் அடங்கும். குழந்தையை பார்க்குமாறு அல்லது கேட்குமாறு செய்யும் நோக்கத்துடனான அனைத்துவித செயல்களோ அல்லது ஒரு செயலோ அது பாலியல் தொந்தரவு அல்லது பாலியல் மிரட்டல் என்று இச்சட்டம் விளக்கம் தருகிறது. இதற்கான தண்டனை மூன்று வருட சிறைவாசமாகும்.

### குற்றத்தை நிரூபிக்கும் பொறுப்பு

PCSOA சட்டத்தின் மிக முக்கியமான தொரு அம்சம் என்னவென்றால் குற்றம்சாட்டப்படும் போது குற்றம்சாட்டப்பட்டவர்தான் குற்றம் புரிந்தவரல்ல என்பதை அவரேதான் நிரூபிக்க வேண்டும். இதுபோன்ற அம்சம் வரதட்சணைச் சட்டத்திலும் மற்றும் சில குற்றப்பிரிவுச் சட்டங்களிலும் இருக்கிறது. 'உள் செலுத்தும்' பாலியல் கொடுமை மற்றும் 'உள் செலுத்தும் கடுமையான பாலியல் கொடுமை என்பதிலும் இந்த அம்சமே ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. பிரிவு 29 இவ்வாறு சொல்கின்றது.

இச்சசட்டத்திற்கான பிரத்தியேக நீதிமன்றம் பாலியல் குற்றம் இழைத்ததாக ஒருவர் மீது குற்றம் சாட்டப்பட்டிருக்குமேயானால் அது அவரை அப்படியே கருதக்கூடும். தான் குற்றமிழைக்காதவர் நிரபராதி என்பதை குற்றம்சாட்டப்பட்டவரேதான் நிரூபித்தாக வேண்டும். அப்படி நிரூபிக்க முடியாதபட்சத்தில் குற்றம் இழைத்ததாக கருதப்பட்டு, அவர்மீது தண்டனை விதிக்கப்படும் அல்லது குற்றம் செய்ய முனைந்ததாகவோ, குற்றம் புரியத்துணை புரிந்ததாகவோ கருதப்பட்டு தண்டனை விதிக்கப்படும். (பிரிவுகள் 3,5,7 மற்றும் 9ம் பிரிவுகளின் அடிப்படையின் கீழ்)" குற்றமிழைக்காதவரென நிரூபிப்பது குற்றச்சாட்டப்பட்டுள்ளவரின் பொறுப்பாகும். இச்சட்டம் தவறாகப் பயன்படுத்தப்படாமலிருப்பதற்காக தவறான பயன்பாட்டிற்கும் தண்டனை விதிக்கும், அதாவது பொய்யான புகார் அளிக்கும்போது அது நிரூபனமானால் அதற்கும் தண்டனை விதிக்கப்படும்.

* பெயர் மாற்றப்பட்டுள்ளது.

## பாதிக்கப்பட்டவரின்

## அடையாளம் கட்டாயமாக மறைக்கப்பட வேண்டும்

பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளை பாதுகாக்கும் சட்டம் 2012 மிகக்குறிப்பாக வலியுறுத்திச் சொல்வதென்னவென்றால் ஊடகங்கள் பாதிக்கப்பட்டவர்களை வெளியே தெரிந்துகொள்ளுமாறு அடையாளங்காட்டக் கூடாதென்கின்றது. குழந்தைகள் நீதிச் சட்டம் 2000மும் இதையேதான் சொல்கிறது. குழந்தையின் பெயர், முகவரி, புகைப்படம், குடும்ப விவரங்கள், படிக்கும் பள்ளி அல்லது அருகாமையில் உள்ள இடம் போன்ற எந்த விவரங்களும் வெளியே வந்து இன்னாரென்று இனங்கண்டு கொள்ளக்கூடாது என்று சொல்கிறது.

இதற்கும் மேலே ஒருபடி சென்று இச்சட்டம் என்ன சொல்கிறதென்றால் இத்தனை விதிகளை மீறி ஒருவர் அடையாளம் தெரியச் செய்கிறார் என்றால் அவருக்கு மூன்று மாதம் முதல் ஆறு மாதம் வரை சிறை தண்டனை மற்றும் அபராதமோ இரண்டும் சேர்ந்தோ விதிக்கப்படும். சிறப்பு நீதிமன்றம் அது குழந்தையின் நலம் கருதி வெளியிடப்படுகிறது என்று கருதுமேயானால் அதற்கு தண்டனை விலக்கும் அனுமதியும் தரும்.

இச்சட்டம் PCSOA மேலும் ஒரு பொறுப்பு அல்லது கடமையை சில நபர்களுக்கு விதிக்கின்றது. அதாவது மருத்துவமனை, ஊடகப் பணிபுரிவோர் மற்றும் உணவு விடுதிகளில் பணிபுரிவோர் குழந்தை மீதான பாலியல் சுரண்டல் சம்மந்தமான பொருட்கள் ஏதேனும் காணநேர்ந்தால் உடனடியாக காவல்துறைக்கு செய்தி அனுப்ப வேண்டும். அப்படிப்பார்க்க நேர்ந்தும் கண்டு கொள்ளாமல் போகும் நபர் அல்லது நபர்கள் ஆறுமாதம் சிறை தண்டனை பெற்று அதை அனுபவித்தாக வேண்டும் என்று இச்சட்டம் சொல்கிறது.

**குழந்தைகளை பாலியல் துன்புறுத்தல்களிலிருந்து பாதுகாக்கும் சட்டம் 2012 (PCSOA) விரைவில் நடைமுறைக்கு வரவிருக்கிறது. தேதி குறித்து இந்திய ஒன்றிய அரசு விரைவில் வெளியிடவிருக்கிறது. இது ஜம்மு மற்றும் காஷ்மீர் தவிர இந்தியாவில் உள்ள எல்லா மாநிலங்களிலும் இச்சட்டம் அமலுக்கு வரப்போகின்றது.**

## இணையதளம், பாலினம் மற்றும் பாலுறவுக்கு இணங்குவதற்கான வயது மற்றும் அதுபற்றி ஏதும் தெரியாததற்கான வயது

ஒரே ஒரு அம்சம் 'PCSOA' சட்டத்தில் விமர்சனத்துக்கு உள்ளாகி இருக்கிறதென்னவென்றால் அது வயது குறித்தாகும். இந்தச் சட்டம் 18 வயது எட்டாத எவரையும் குழந்தை என்று குறிப்பிடுகின்றது. இவ்வாறு 18 வயதுக்கு கீழ் உள்ள ஆண், பெண் அனைவரும் 'குழந்தை' என்னும்

### நுண்ணிய நடவடிக்கைகள்:

சாட்சியங்களை பதிவு செய்வதிலும் விசாரித்ததில் அறிக்கை தயார் செய்வதிலும் குழந்தைகளுக்கு இணக்கமான நடவடிக்கைகள் கொண்டதாய் PCSOA இருக்கிறது. சிலவற்றை கீழே காண்போம்.

- காவல் அதிகாரி குழந்தையின் வாக்குமூலம் பெறும்போது காவல் சீருடை அணிந்து இருக்கக்கூடாது.
- குழந்தையிடம் வாக்குமூலம் பெற்று பதிவு செய்யும்போது முடிந்தவரை பெண் போலீஸ் அதிகாரி உதவி ஆய்வாளர் பதவிக்கு குறையாத அளவில் இருக்க வேண்டும்.
- வாக்குமூலம் பதிவு செய்யும் இடம் குழந்தையின் வீடாகவோ அல்லது குழந்தைக்கு விருப்பமான இடமாகவோ இருக்க வேண்டும்.
- எந்தவித காரணங்களுக்காகவும் குழந்தைகளை காவல் நிலையத்தில் தங்க வைக்கக் கூடாது.
- மருத்துவப் பரிசோதனை செய்யும்போது குழந்தை அருகில் குழந்தையின் பெற்றோர் அல்லது குழந்தையின் நம்பிக்கைக்கு உரியவர்கள் உடனிருக்க வேண்டும்.
- பாதிக்கப்பட்ட நபர் பெண் குழந்தையாக இருந்தால் மருத்துவப் பரிசோதனை செய்பவர் பெண் மருத்துவராக இருக்க வேண்டும்.

**நடைமுறைப்படுத்துதல்:**

குழந்தைகளின் பாதுகாப்புக்காக ஏற்படுத்தப்பட்டுள்ள தேசிய குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையம் மற்றும் மாநில குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையம் போன்ற அமைப்புகள் அதிகாரப்பூர்வமாக மேற்பார்வையிட மற்றும் சட்டம் நடைமுறைப்படுத்துவதை கண்காணிக்கப் பணிக்கப்பட்டிருக்கிறது. அதேபோல் மத்திய, மாநில அரசுகள் இச்சிறப்புச் சட்டம் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்த கடமை கொண்டிருக்கின்றன.

**சிறப்பு நீதிமன்றங்கள்:**

இந்த சட்டத்தின்கீழ் விசாரணை மேற்கொள்ள சிறப்பு நீதிமன்றங்கள் அமைக்கப்பட வேண்டும். எனவே, ஒவ்வொரு மாநில அரசுகளும் மாவட்ட அளவில் ஒரு செசன்ஸ் நீதிபதி நியமிக்கப்பட்டு குற்றங்களை விசாரிக்க ஏற்பாடு செய்தல் வேண்டும்.

**துரித விசாரணை:**

நீதிமன்ற விசாரணை விரைவாக முடிக்க வேண்டும் என்பதற்காக இந்த சட்டம் குழந்தையின் சாட்சியங்களை ஒரு மாதத்திற்குள் (30 நாள்) முடிக்க வேண்டும் என்று சொல்கிறது. மேலும் சிறப்பு நீதிமன்றம் விசாரணையை ஒரு வருடத்திற்குள் முடிந்தவரை முடிக்க வேண்டும் என இச்சட்டம் சொல்கிறது. காவல்துறை உடனடியாக நிவாரணமும் மறுவாழ்வுக்கான வழியும் செய்திட வேண்டும். புகார் வந்த 24 மணி நேரத்திற்குள் குழந்தைகள் நலகுழுவினரிடம் காவல்துறை புகார்—ஐ செய்திட வேண்டும்.

## பின்நோக்கி ஒரு கண்ணோட்டம்

இந்தச் சட்டமானது குழந்தைகளுக்கு பாதுகாப்பானதொரு நாட்டினை கொடுப்பதற்கான ஒரு சிறப்புச் சட்டமாகும், இருந்தபோதிலும் இந்தச் சட்டம் உருவாக்கப்பட செய்த பயணம் என்பது மிக நீண்ட பயணமாகும். இதனுடைய ஆரம்பப் பயணம் பெண்கள் குழுக்கள் 1970களில் எழுப்பிய சில மெல்லிய குரல்களோடு ஆரம்பமானது இந்தப் பயணம் என்று கூறலாம். ஒரு சட்டம் உருவாகும் முன்பு பலவித முன்முயற்சிகள் உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் உருவாகும் அழுத்தங்கள் போன்றவை மொத்தமாகி இறுதிக் கட்டத்தை அடைந்து சட்டமாகிறது.

1974 இந்தியாவில் குழந்தைகளுக்கான கொள்கை உருவாக்கம் தொடங்கி குழந்தைகளுக்கான கொள்கை மற்றும் திட்டமிடல் துவங்க ஆரம்பித்தது.

1990 குழந்தைகள் பற்றிய உலகலாவிய கூட்டம். இக்கூட்ட முடிவுகளில் உருவான உலக உடன்படிக்கையான குழந்தைகள் உயிர் வாழ்தல், பாதுகாப்பு மற்றும் மேம்பாடு குறித்தானவற்றை இந்தியா ஏற்றுக் கொண்டது.

1992 ஐக்கிய நாடுகள் சபை குழந்தைகள் ...ளை நிலைநாட்ட எடுக்க வேண்டிய நலம் சார்ந்த நடவடிக்கைகளை எடுக்க கோரியமைக்கு இந்தியா ஒப்புக் கொண்டது.

2004 குழந்தைகளின் உரிமைகள் குறித்த ஒப்பந்தம் இதன்படி மாநில மற்றும் மக்கள் அமைப்புகளின் கடமைகள் பற்றி விவாதமேற்கொள்ளப்பட்டது.

2005 தேசிய குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ...ம் உருவாக்கப்பட்டு அதன் வழி குழந்தை உரிமைகள் பாதுகாப்புச் சட்டம் இயற்றப்பட்டது.

2006 குழந்தைகள் மீதான வன்முறை பற்றிய ...நாடுகள் சபையின் ஆய்வு.

2007 குழந்தைகள் மற்றும் பெண்கள் மேம்பாடு அமைச்சகம் யுனிசெப் நிறுவனம் மற்றும் ...றாடு இணைந்து இந்தியாவின் 13 மாநிலங்களில் ஓர் ஆய்வு நடத்தியது. இந்த ஆய்வின் மூலம் 53.22 சதவீத இந்தியக் குழந்தைகள் ஏதேனும் ஒரு வகையில் அல்லது பலவகையில் பாலியல் ரீதியான தவறான பயன்பாட்டுக்கு உள்ளாகிறார்கள் என்று தெரியவந்துள்ளது.

கணக்கீட்டில் வருவதால் சமூக செயல்பாட்டாளர்கள் மற்றும் வழக்கறிஞர்கள் அனைவரும் இது குறித்து கவலை தெரிவிக்கின்றனர். நம் இந்தியக் கலாச்சாரத்தில் 18 வயதுக் கீழான எவரும் திருமணம் செய்வது என்பது நடைமுறைக்கு ஊர்ஜிதமானதாகத்தான் கருதப்பட்டு வருகிறது. எனவே, திருமணத்திற்குப் பின்புதான் ஒரு உறவு திருமண உறவாகக் கருதுவதா இல்லையா எனக் கேள்வி எழுகின்றது. இந்தச் சட்டம் 18 வயதிற்கு உட்பட்ட எவரும் குழந்தை என்று கூறிவிட்டு மௌனமாயிருப்பதோடு என்னென்ன செயல்கள் தண்டனைக்குரியது என்று பட்டியலிடத் துவங்கிவிடுகின்றது.

வித்யாரெட்டி, துளிர் என்றும் நிறுவனத்தைச் சேர்ந்த இவர் "PCSOA" மூலம் பொதுவான துன்புறுத்தல் செய்வதற்கு வாய்ப்பு இருப்பதாகக் கூறுகிறார். இவர் மேலும் கூறுவதென்னவென்றால் உடல் வளர்ச்சி என்பதை மட்டும் தனித்து பார்க்க முடியாது. மனரீதியான உடலுறவு பற்றி எண்ணங்களையும் சேர்த்துப் பார்க்க வேண்டும் என்று கூறுவதோடு மேலும் கூறுவதென்னவென்றால் இப்போதைய தொழில்நுட்ப வளர்ச்சி பாலியல் உறவு பற்றிய அடையாளங்களை அறிந்து கொள்ள தூண்டுகிறது என்கிறார். அந்த ரீதியாக பார்க்கும்போது PCSOA மிரட்டல்களுக்கான வாய்ப்பை மிகுதியும் தருகிறது என்கிறார்.

குழந்தைகள் மீதான பாலியல் துன்புறுத்தல்கள் அவற்றிலிருந்து விடுபடும் சிகிச்சை மற்றும் தடுப்புகள் ஆகியவற்றில் பணிபுரிந்து வரும் துளிர் நிறுவனத்தில் பணிபுரியும் இவர் மேலும் கூறுவதாவது, இந்தச் சட்ட மசோதாவானது நாடாளுமன்றத்துக்குச் செல்லும்போது 16 முதல் 18 வயது வரையில் நிகழும் செக்ஸ் நடவடிக்கைகளுக்கு தண்டனை தருவதாக மசோதாவில் சொல்லப்படவில்லை. ஆனால், நாடாளுமன்றத்தில் சட்டமாக்கப்பட்டபோது பாராளுமன்ற நிலைக் குழுவால் அது இணைக்கப்பட்டிருக்கிறது. 16 முதல் 18 வரையிலான பாலியல் உறவு குற்றமுறு நடவடிக்கையாக மாற்றப்பட்டிருக்கிறது என்கிறார். PCSOA சட்டம் தனிமனித சட்டங்களுக்கும் முரண்பட்டுப்போயிருக்கிறது. இஸ்லாமியச் சட்டத்தின்படி ஒரு பெண் பூப்பெய்தியவுடனேயே திருமணத்துக்குத் தகுதியானவளாகக் கருதப்படுகிறாள். இந்தச் சட்டத்தின்படி அது முரண்பட்டதாகத் தெரியவில்லையா என்பது இவர்வாதம்.

பிரபல சமூக செயல்பாட்டாளரும் வழக்கறிஞருமான சுதா இராமலிங்கம் சொல்வது என்னவெனில் தற்போது பெண் குழந்தைகள் சீக்கிரமே பூப்பெய்துவிடுகிறார்கள். மேலும் சீக்கிரமே வாழ்க்கையின் நிதர்சனங்களுக்கும் அறிமுகமாகி வருகிறார்கள். இந்திய தண்டனைச் சட்டத்தில் உள்ளது போலவே பாலியல் உறவுக்கு சம்மதம் தெரிவிப்பதற்கான வயது 16–ஆகவே இருந்திருக்கலாம். வழக்கறிஞரான கீதா ராமசேஷன் சொல்வதாவது, "இந்திய தண்டனைச் சட்டத்தின்படி (IPC) பாலியல் உறவுக்கான சம்மதம் தெரிவிக்க வயது நிர்ணயம் என்பது பெரிய விசயமில்லை. சட்டத்தின் வழி பார்க்கப்படும் "Rape" என்று வரும்போது 16 வயது என்பது சட்டப்பூர்வமானது என்பது மட்டுமல்ல அது

பெண்ணுக்கு மட்டும்தான் இப்போது அந்தப்பிரிவு போய்விடும். வயதை 18க்கு உயர்த்துவதின் காரணமாக புதிய சட்டச் சிக்கல்கள் தோன்ற வாய்ப்பிருக்கிறது என்று கூறுகிறார். ஏற்கெனவே இந்திய தண்டனைச் சட்டத்தில் IPC–ல் சட்டப்பூர்வமான பாதுகாப்பாளரிடமிருந்து கடத்தப்படுதல் என்னும் பிரிவு தவறாகப் பயன்படுத்தப்படுகிறது குடும்பங்களில், இளவயது காதலர்கள் வீட்டை விட்டு ஓடிவிடும்போது ஜாதி மற்றும் சமயங்கள் வேறுபாடு இதற்கு காரணமாக அமைந்துவிடுகின்றது என்று சமூக ஆர்வலர்கள் நினைக்கிறார்கள். ஒரு சிலர் இதை ஒத்துக் கொள்வதில்லை. ‘‘சட்டத்திலுள்ள எந்தப் பிரிவுதான் தவறாகப் பயன்படுத்தப்படாமலிருக்கிறது சொல்லுங்கள் பார்க்கலாம். குழந்தைகள் பாதுகாப்பு கருதி இது செய்யப்பட்டிருக்கிறது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும் என்கிறார் வழக்கறிஞரான நீதி துரை.

‘‘குழந்தை என்பது பற்றிய வயது என்ன’’ என்பதுபற்றி நிரந்தர சட்ட வரம்பு என்று எதுவும் இல்லை. ஒவ்வொரு சட்டமும் ஒவ்வொன்றை கூறி வயது நிர்ணயம் செய்கின்றன. இந்திய தண்டனை சட்டத்தின் IPCன் படி பாலியல் உறவுக்கு இணக்கம் தெரிவிப்பதற்கான வயது 16. இந்திய வயது வந்தமைச் சட்டம் 187ன்படி ஒரு நபர் வயது வந்தவராகக் கருதப்படுவதே அவன்/அவள் 18 வயதை எட்டும்போதுதான். குழந்தை திருமணச் சட்டம் 2006 திருமணத்துக்கு நிர்ணயிப்பது என்னவென்றால் ஆணாக இருக்கும்போது 21 வயது பெண்ணாக இருந்தால் 18 வயது என்பதாகும். குழந்தை உழைப்பு தடுப்புச் சட்டம் 1986 குழந்தை என்றால் அவனோ அவளோ 14 வயது பூர்த்தி ஆகாமல் இருக்க வேண்டும் என்று சொல்கின்றது. தேர்தலில் ஓட்டுப்போட நிர்ணயிக்கப்பட்டுள்ள வயது அரசியலமைப்புச் சட்டத்திருத்தத்தின்படி 18 வயது ஆகும். குழந்தைகளை பாலியல் தொந்தரவுகளிலிருந்து பாதுகாக்கும் சட்டம் 2012 (PCSOA) பெரும்பாலானவர்களால் பெரிதும் வரவேற்கப்பட்டாலும் வயது குறித்தான பிரிவு அதில் முள் போன்று குத்துவதாக சமூகச் செயல்பாட்டாளர்கள் கருதுகிறார்கள்.

### பாலியல் புத்தகங்கள், விற்பனை செய்பவர்கள் மற்றும் துணை போகிறவர்களுக்கும் தண்டனை:

பாலியல் உறவு சம்மந்தமான புத்தகங்கள் மற்றும் ஊடகங்கள் விற்பனை நோக்கத்துடன் வைக்கப்பட்டிருந்தாலும் அதில் குழந்தைகள் சம்மந்தப்பட்டிருந்தால் அதை தண்டனைக்குரிய குற்றமாக இந்தச் சட்டம் கருதுவதுடன் தண்டனையாக மூன்று வருடச்சிறை வாசம் என்கிறது. இந்தச் சட்டம் அத்தோடு அபராதமும் விதிக்கப்படலாம். இரண்டுமே சேர்த்து விதிக்கப்படவும் வழியுண்டு.

இந்தக் காரியங்களுக்காக குழந்தைகளை பயன்படுத்தி இருந்தால் அதற்குக் கடுமையான தண்டனை உண்டு. உதாரணமாக ஒரு குழந்தை இதற்காகப் பயன்படுத்தபட்டிருந்தால் பயன்படுத்தியவருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்படும் அல்லது அபராதத் தொகை விதிக்கப்படும் அல்லது இரண்டும் சேர்த்தே அனுபவிக்க நேரிடும். மேலும் இக்குற்றத்துக்கு எவரேனும் உதவி செய்திருந்தால் அந்த செயலின் தன்மையைப் பொறுத்து தண்டனை விதிக்கப்படலாம். இந்த சட்டத்தின்படி அந்த செயல் முழுமையாக முடிவு பெறவில்லை என்றாலும் அதுபோன்ற ஒரு நோக்கம் இருந்தது என்பது நிரூபிக்கப்பட்டாலே அதற்கும் தண்டனை உண்டு. அந்த தண்டனையானது அந்த குற்றம் முடிவு பெற்றிருந்தால் என்ன தண்டனை வழங்கப்படுமோ அதில் பாதி தண்டனை வழங்கப்படும்.

**– ஆதாரம் :**
THE NEW INDIAN EXPRESS, 28 MAY 2012

## தனியார் பள்ளிகளுக்கான பொதுச் சட்டம் வல்லுநர் குழு கூட்டம் இன்று கூடுகிறது

தனியார் பள்ளிகளுக்குப் பொதுவான சட்டம் மற்றும் விதிமுறைகளை உருவாக்குவதற்காக அமைக்கப்பட்ட வல்லுநர் குழுவின் முதல் கூட்டம், தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது. மெட்ரிக் குலேஷன் பள்ளிகளுக்கென தனி சட்டம், விதிமுறைகள்: ஆங்கிலோ இந்தியப் பள்ளிகளுக்கென தனிச் சட்டம், விதிமுறைகள் மற்றும் தனியார் பள்ளிகளுக்கென தனி சட்ட விதிமுறைகள் ஏற்கெனவே இருக்கின்றன. தற்போது, சமச்சீர் கல்வி திட்டம் அமல்படுத்தப்பட்டதன் மூலம், ஒரே வகையான கல்வித் திட்டம் நடைமுறைக்கு வந்துள்ளது. எனவே, ஏற்கெனவே உள்ள பல வகையான சட்டங்கள் மற்றும் விதிமுறைகளை ஆய்வு செய்து, ஒரே சீரான சட்டம் மற்றும் விதிமுறைகளை உருவாக்குவதற்காக, ஓய்வுபெற்ற ஐ.ஏ.எஸ் அதிகாரி பழனியாண்டி தலைமையில், 15 பேர் கொண்ட வல்லுநர் குழுவை அமைத்து, தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது. இதுதொடர்பாக, பள்ளிக் கல்வித்துறை செயலர் சபிதா வெளியிட்ட அரசாணை:

அனைத்து வகை அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகளுக்கும் பொருந்தும் வகையில், சட்டம் மற்றும் விதிமுறைகளை உருவாக்குவது குறித்து, ஆலோசனை வழங்கவும், அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் சார்பில் கொள்கை முடிவுகள் மேற்கொள்ள ஆலோசனை வழங்கவும், வல்லுநர் குழுவை அமைக்கலாம் என, பள்ளிக்கல்வி இயக்குநர் தெரிவித்தார். இதை ஏற்று வல்லுநர் குழு அமைக்கப்படுகிறது. இக்குழு, தனியார் பள்ளிகளுக்கான, பொதுச் சட்டம் குறித்து ஆய்வு செய்து, ஆறு மாதங்களுக்குள் என, செயலர் சபிதா தெரிவித்துள்ளார். வல்லுநர் குழுவின் முதல் கூட்டம் தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது.

**ஆதாரம்:** தினமலர், 19.7.2012

# கொல்லும் மருந்து

– ஸ்வாகதா யாதவ்

## ‘பார்லி’யில் வாழும் மக்கள் அந்த இடத்தைக் கசாப்பு கடை என்று கூறுகிறார்கள்.

இரண்டு மாடிக் கட்டிடத்தில் உள்ள அந்த மருத்துவமனை 10 படுக்கை அறை வசதிக்குரியது மட்டும்தான். ஆனால், அதில் தற்போது 110 படுக்கைகள் கொண்டிருக்கிறது. அறைகள் தீப்பெட்டி போன்ற தோற்றத்திலும் கழிப்பறைகள் காலங்காலமாக கழுவப்படாமலும் காட்சி அளிக்கின்றன. படுக்கைகள் வராண்டாக்களிலும் சில மாடிப்படிகளுக்கு கீழேயும் சில இங்கிடுக்களிலும் போடப்பட்டிருக்கின்றன. உபயோகப்படுத்தப்பட்ட ஊசிகள் அப்படியே வராண்டாவில் ஆங்காங்கே கிடந்தன. அந்த முண்டே மருத்துவமனையில் சுவர் மட்டும் உள்ள அலமாரிகளில் மருந்துகள் அடைத்து வைக்கப்பட்டிருந்தன. இந்த முண்டே மருத்துவமனை மகாராஷ்டிராவிலுள்ள பீடு என்னும் மாவட்டத்தில் அமைந்துள்ளது.

காவல்துறை, சட்டத்துக்குப் புறம்பான முறையில் செய்யப்படும் கருக்கலைப்பு மற்றும் கருவிலுள்ள குழந்தைகளை அழிப்பது என்னும் தவறான வழிகள் மூலம் பணம் சம்பாதித்தலின் மூலம் செழித்து வளர்ந்து வருகின்ற அந்த மருத்துவமனை கதவுகளை இழுத்து மூடி சீல் வைத்து இருக்கின்றது. அந்த மருத்துவமனையை நடத்தும் மருத்துவ தம்பதிகளான மருத்துவர் சூடம் முண்டே மற்றும் அவர் மனைவி மருத்துவர் சரஸ்வதி முண்டே இருவரும் எங்கே போயிருக்கிறார்கள் அல்லது ஒளிந்து கொண்டிருக்கிறார்கள் என்பது பற்றி எவருக்கும் சொல்லத் தெரியவில்லை. அந்த மருத்துவமனை அந்த மாவட்ட ஆட்சியரின் ஆணைப்படி குற்ற நடவடிக்கை சட்டப்பிரிவு 133ம் படி (அமைதியை கெடுப்பது மற்றும் தொந்தரவு நடவடிக்கையில் ஈடுபட்ட குற்றத்திற்காக) மூடப்பட்டு முத்திரை (Sealed) வைக்கப்பட்டிருக்கிறது.

மருத்துவர் சூடம் அறைக் கதவின் மீது மஞ்சள் நிற காகிதமென்று ஒட்டப்பட்டிருக்கிறது. அது முதல் மற்றும் இரண்டாம் பருவத்தில் இருக்கும் கர்ப்பத்தைக் கலைப்பதற்கான ஆகும். கட்டணங்கள் மற்றும் கருத்தடை செய்வதற்கு ஆகும் கட்டணங்கள் என்று விலாவாரியாக குறிக்கப்பட்டிருந்தன. அவர் அறையில் தொங்கும் படங்களை வைத்து அவர் மிகவும் கடவுள் பக்தி உள்ளவர் என்று நினைக்கத் தோன்றும். அந்த பகுதியில் வசிக்கும் ஒருவர் கூறுகிறார், முன்கோபத்துக்கும் எரிச்சலடைவதற்கும் புகழ்பெற்ற இந்த அறுவை சிகிச்சை நிபுணருக்கும் வாடகை தாதாக்களின் தொடர்புக்கும் சம்மதம் இருக்கின்றது என்று. ஒரு தொலைக்காட்சி நிருபர் ஒருவர் அவரிடம் பெண் சிசுக்களின் கருவை அழித்துக் கொல்பவரா என்று கேட்டதற்கு “ஒரு கசாப்புக் கடைக்காரருக்கு கொல்லப்பட்டு கடைக்கு வரவிருப்பது காளையா அல்லது பெண் மாடா என்பது பற்றி என்ன வித்தியாசம் இருக்கிறது” என்று பதில் அளிக்கிறார்.

உள்ளூர் மக்கள் சொல்கிறார்கள், சரஸ்வதியின் கண்களில் எந்த உணர்ச்சியும் தெரியாதென்று இருக்கலாம். பல கருச்சிதைவுகளை நடத்தியது. அவருடைய மென்மையான மற்றும் பெண்மை உணர்வுகளை கொன்று இருக்கலாம்” என்று உள்ளூரிலுள்ள தேசியக் காங்கிரஸ் கட்சியின் தலைவரான சித்ரா லுங்கரே கூறுகிறார்.

அந்தத் தம்பதியர் சட்டங்களைப் பற்றி கண்டுகொண்டதாகவே தெரியவில்லை. ஏற்கெனவே இருந்த பழைய கட்டிடத்துக்குப் பக்கத்தில் புதிய இரண்டு மாடிக் கட்டிடம் எழுப்ப கட்டிட அனுமதியே பெறவில்லை என்று உள்ளூர் அதிகாரிகள் சொல்கின்றார்கள். அதேபோல் நர்சிங் ஹோம் நடத்துவதற்கான உரிமம் கடந்த 20 ஆண்டுகளாகப் புதுப்பிக்கப்படவேயில்லை என்றும் கூறுகிறார்கள்.

கருச்சிதைவுக்கு உபயோகப்படும் மருந்துகள் தயாராக அச்சிடப்பட்டு இருந்தவை மருத்துவர் சூடத்தின் அறையில் கிடந்தன. இது அந்த தம்பதிகள் தங்கள் நோயாளிகளின் நலன்பற்றி கொஞ்சமும் அக்கறை கொள்ளவில்லை என்பதைக் காட்டியது.

28 வயதான விஜயமாலா படேகர் என்னும் பெண் கடந்த மே மாதம் 18ம் தேதி இறந்ததுதான் முண்டே தம்பதிகளின் அதிர்ஷ்டத்தை புரட்டிப்போட்டுவிட்டது. 4 பெண் குழந்தைகளுக்குத் தாயும், விவசாயக் கூலி வேலை செய்பவருமான விஜயமாலா அவருடைய கணவர் மகாதேவோ வால் மருத்துவமனைக்கு கொண்டு வரப்பட்டார். அடுத்ததும் பெண் குழந்தையாக பிறந்துவிடக்கூடாதே என்ற பயத்தின் காரணமாக சேர்க்கப்பட்டிருக்கலாம். “வயிறு வலிக்கிறது என்று என் மனைவி முறையிட்டதால் இங்கு கொண்டு வந்து

சேர்த்தோம். பொறுப்பில்லாத இந்த மருத்துவர் (டாக்டர்) அவளைக் கொன்று போட்டுவிட்டார்'' என்று சொன்னார் அவர் (மகாதேவோ) இப்போது போலீஸ் காவலில் வைக்கப்பட்டுள்ளார். முண்டே மருத்துவமனையில் சந்தேகத்துக்குரிய முறையில் அவர் மனைவி இறந்ததின் பின்பு மகாதேவோ கைது செய்யப்பட்டுள்ளார்.

## சரஸ்வதி தம்மிடம் உள்ள தாள்களில் 16 அல்லது 19 என்று எழுதுவார். எண் 16, என்பது ஆண் குழந்தை (boy) என்பதற்கான குறியீடு எண். 19 என்பது பெண் குழந்தை (girl) என்பதற்கான குறியீடு ஆகும்.

பீடு மாவட்ட காவல்துறைக் கண்காணிப்பாளரான தாத்தாச்சாரியா மண்ட்லிக் கூறுகிறார். ''விஜயமாலாவின் குடும்பத்தாரும் சுற்றத்தாரும் டாக்டரை குறித்து எவ்விதப் புகாரும் பதிவு செய்ய விரும்பவில்லை. மேலும் விஜயமாலாவின் பிரேதத்தை மரணத்துக்குப் பின்னான பரிசோதனைக்கும் எடுத்துச் செல்ல அனுமதிக்கவில்லை'' பிரேத பரிசோதனை அறிக்கையின்படி விஜயமாலா இரண்டாவது முறையாக இரண்டாம் பருவக் கருக்கலைப்பின் காரணமாக நிகழ்ந்த இரத்தக் குழாய் வெடிப்பு அதன் அதிர்ச்சி காரணமாக சாவு நிகழ்ந்திருக்கிறது. தன்னை பாதுகாத்துக் கொள்வதற்காக சூடம் பார்லி காவல்துறை நிலையத்துக்கு அனுப்பிய கடிதத்தில் விஜயமாலாவை மருத்துவமனையில் அனுமதிக்கும் போதே அதிகப்படியான இரத்தப் போக்கு இருந்தது என்று எழுதி இருக்கிறார்.

குடும்ப அங்கத்தினர்களுக்கே புகார் அளிக்க விருப்பம் இல்லாத நிலையில் போலீசே தாமாக முதல் தகவல் அறிக்கை (FIR) மற்றும் முண்டே தம்பதியரின் மீது குற்றப்பத்திரிகையை பதிவு செய்தனர். இருவரும் கைது செய்யப்பட்டனர். முன் பிணையில் (ஜாமீனில்) வெளி வருவதற்காகவே கைது செய்யப்பட்டது போலிருந்தது. பிரேதப் பரிசோதனை அறிக்கையின்படி கருவிலிருந்த குழந்தையின் வயது 24 வாரங்கள் ஆகும். ''அது கரு என்ற நிலையில் இல்லை. முழுமையான வளர்ச்சி அடைந்த குழந்தை. எனவே, போலீஸ் அவர்களை கடுமையான சட்டப்பிரிவுகளின்கீழ் குற்றப்பதிவு செய்துள்ளது'' என்று மாவட்ட ஆட்சியரான சதானந்த கோச்சே கூறினார்.இந்திய தண்டனைச்சட்டப் பிரிவுகளான 304, 305, 312, 314, 315, 316 பிரிவுகளின் அடிப்படையில் பதிவுசெய்யப்பட்டுள்ளனர் (IPC – Sections)

முண்டே மருத்துவமனையில் நடந்துவரும் தவறான நடவடிக்கை குறித்து 2010ம் வருடத்திலேயே மே மாதத்தில் சமூக செயல்பாட்டாளரான வர்ஷா தேஷ்பாண்டேயால் வெளியே கொண்டு வரப்பட்டிருக்கிறது. ''சட்டத்துக்குப் புறம்பான கருக்கலைப்புகள் சூடம் நடத்திய மருத்துவமனையில் நடக்கிறதென்று வெகுவாகக் கேள்விப்பட்டோம். மாநில அரசின் சுகாதாரத்துறைக்கு எடுத்துச் சென்றோம். எங்களின் முறையீடுகள் யாவும் செவிடன் காதில் ஊதிய சங்காக இருந்தது. எனவே, நாங்களே விசாரித்தறிந்து வெளிப்படுத்திட முடிவெடுத்தோம் என்று கூறும் தேஷ் பாண்டே ''லெக் லாட்கி அபியான்'' என்னும் அரசுசாரா தொண்டு நிறுவனமொன்றை (NGO) நடத்தி வருகிறார். இவர் நினைவு கூர்ந்து சொல்கிறார். காலையில் 9 மணிக்கே கிட்டத்தட்ட 90 நோயாளிகள், மருத்துவமனையில் காத்துக் கிடப்பதைப் பார்க்கலாம்.

''என்னுடன் பணிபுரியும் ஒருவரின் கர்ப்பிணி மனைவி எங்களுடைய அறுவை சிகிச்சை பற்றி அறியும் பணிக்கு ஒத்துழைக்க தாமே முன் வந்தார் என்று கூறுகின்றார்.

தேஷ்பாண்டேயுடனான குழுவிலிருந்த ஒரு வழக்கறிஞரான சைலஜா யாதவ் கூறுகிறார் ''மருத்துவமனையின் அறுவை சிகிச்சைப் பிரிவு மிகவும் விரிந்த அளவிலானது மட்டுமல்ல. பெருமளவு திட்டமிட்டு ஏற்பாடுகள் செய்வதாயிருந்தது. நாங்கள் பயணித்த வண்டியை பார்லியிலுள்ள வைஜ்நாத் கோவிலில் சாமி தரிசனத்துக்கான நிறுத்தப்பட்டிருப்பது போல் நிறுத்தி வைத்துவிட்டு அங்கிருந்து உள்ளூர் ரிக்ஷாவில் மருத்துவமனைக்கு வருமாறு கேட்டுக் கொள்ளப்பட்டோம். எங்களுடைய முறை (twin) வருவதற்கு எப்படியும் 3 மணி நேரமாகும் என்று எங்களுக்குச் சொல்லப்பட்டது.

சமூக செயல்பாட்டாளர்களின் கூற்றுப்படி நோயாளிகள் ஏதும் வீடியோ கேமரா வைத்திருக்கிறார்களா என்று சோதனை செய்தபிறகுதான் உள்ளே அனுமதிக்கிறார்கள். செல்பேசிகளை கூட அவர்கள் உள்ளே அனுமதிப்பதில்லை. அதற்குப் பின்னர் பணியாளர்கள் நோயாளிகளை மேல் மாடிக்குச் செல்ல சொல்கிறார்கள். மேல்மாடியிலிருந்து புதிய கட்டிடம் செல்ல வழி இருக்கிறது. அவர்கள் கேட்கும் ஒரே கேள்வி என்னவென்றால் அவர்கள் கர்ப்பம் இரண்டாம் பருவத்தில் இருக்கின்றதா கருக்கலைப்புக்கு தேவையான பணம் அவர்களிடம் இருக்கின்றதா என்பது பற்றிதான். மரத்துவாடா பகுதியைச் சேர்ந்த மக்களுக்கு கருவிலிருக்கும் குழந்தை ஆணா அல்லது பெண்ணா என்று கண்டறியக் கட்டணம் ரூ.5000ல் இருந்து ரூ.10,000

## இங்கு எந்த வரைமுறையும் பின்பற்றப்படுவதில்லை

ஒவ்வொரு முறையும் டாக்டர் முண்டேவும் டாக்டர் சரஸ்வதியும் சட்டத்தின் பிடியிலிருந்து மிக எளிதாக தப்பித்து வந்திருக்கிறார்கள் என்பதிலிருந்து டாக்டர்களுக்கும் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் அதிகாரிகளுக்கும் உள்ள உறவு பீடு (Beed) மாவட்டத்தில் எப்படி இருந்திருக்கிறது என்பது தெரிகிறது. தேசிய காங்கிரஸ் கட்சியின் சட்டமன்ற உறுப்பினராய் இருக்கும் வித்யா சவான் கையில் ஒரு கடிதம் இருக்கிறது. அக்கடிதம் பார்லியிலுள்ள போலீஸ் ஆய்வாளராகிய ராம்ராவ் கடேகரால் மே 19ம் தேதி அன்று முதல் வகுப்பு நீதிமன்ற நீதிபதிக்கு எழுதப்பட்டிருக்கிறது. அக்கடிதத்தில் டாக்டர்களின் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றங்களில் இருந்து அக்குற்றங்கள் கருவிலுள்ள குழந்தை என்னவென்று தொழில்நுட்ப அடிப்படையில் கண்டறிவதை தடை செய்யும் சட்டத்தின் அடிப்படையில் (Pre-Conception and Pre- Natal Diagnostic Techniques Act) சாட்டப்பட்டுள்ளது மற்றும் கருவைக் கலைக்கும் (மருத்துவ ரீதியாக) உரிமைச் சட்டத்தின் அடிப்படையிலும் குற்றம் பதிவாகியுள்ளது.

“இந்தக் குற்றச் சாட்டுகளுக்கு சாட்சியங்களாக எழுத்துப்பூர்வமான ஆதாரங்கள் எதுவுமில்லை. எனவே, அவர்களை இந்த குற்றச்சாட்டுகளிலிருந்து விடுவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்” என்று காடேகர் தன் கடிதத்தில் முறையிட்டுக் கேட்கிறார். விசித்திரமான முறையீடு, டாக்டர்கள் தங்களின் மருத்துவமனை உரிமம் தடை செய்யப்பட்ட பின்பும் கூட அவர்கள் தங்கள் வேலையை நிறுத்தவில்லை. அதன்படி டாக்டர்கள் இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 304A–ன்படி கைது செய்யப்பட்டு பின்பு ஜாமீனில் விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்கள். சவான் சொல்கிறார் டாக்டர் தம்பதிகளுக்கு கோபி நாத் முண்டே ஆதரவு இருந்ததால் அது அவர்களுக்கு பாதுகாப்பு கவசமாக இருந்திருக்கிறதென்று கோபிநாத் முண்டே பாரதீய ஜனதா கட்சியின் உபதலைவராவார். “சரஸ்வதி கோபிநாத் முண்டேவை தன் சகோதரராகப் பாவிக்கிறார். அவர்தான் அந்த மருத்துவமனையை திறந்து துவக்கி வைத்தவர். சரஸ்வதி வைஜ்நாத் வங்கியின் இயக்குநர்களில் ஒருவர். இந்த வங்கியின் நிறுவனர் கோபிநாத் முண்டே ஆவார்” என்று முதல் மந்திரிக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

மாநில சுகாதாரத் துறையும் இந்த விசயத்தில் அக்கறை எடுத்துக்கொள்ளவோ நடவடிக்கை எடுக்கவோ இல்லை. பெண்கள் உரிமைகள் செயல்பாட்டாளரான வித்யா பால் கேட்கிறார், “கடந்த மூன்று ஆண்டுகளாக வர்ஷா தேஷ்பாண்டே இந்த வழக்கு பற்றி போராடியும் ஏன் சுகாதாரத்துறை எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை”. மருத்துவ தம்பதிகள் செசன்ஸ் நீதிமன்றத்தில் இருந்து எப்படி எளிதாக ஜாமீனில் வெளி வருகின்றார்கள் என்பதை நினைவுகூர்ந்தார் தேஷ்பாண்டே. “அரசு வழக்கறிஞர் அன்று விடுமுறை எடுத்துக் கொள்வார். இந்த தம்பதிகள் ஜாமீனில் வெளி வந்துவிடுவார்கள்” என்கிறார்.

முண்டேக்களின் மருத்துவமனையாகிய சோனா கிராபிகிளினிக் ஆனது அரசு மருத்துவமனையில் பணிபுரியும் ஒரு ரேடியால ஜிஸ்ட்–ன் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ளதாக சொல்லப்படுகிறது. சூடம் அதனை ஊரக துணை மருத்துவமனையில் பணிபுரியும் மருத்துவர் ஆனந்த் கிட்டியின் பெயரில் பதிவு செய்துள்ளார். இந்த மருத்துவமனை பார்லியில் உள்ளது. இந்த கிட்டிதான் 2010ல் பதிவு செய்யப்பட்ட வழக்கில் முதல் குற்றவாளி. இவர் பார்லியில் செயல்படும் வேறு 12 கிளினிக்குகளுக்கும் ஒப்புதல் கடிதத்தில் கையெழுத்திட்டு கொடுத்திருக்கிறார். ஆனால், கிட்டி இந்த கிளினிக்குகள் எவற்றுக்குமே தான் சென்றதில்லை என்று சொல்லிக்கொண்டிருக்கிறார் என்று வழக்கறிஞர் அதுல் தண்டே கூறகிறார்.

---

வரை. மற்றவர்களிடமிருந்தெல்லாம் ரூ.25,000 முதல் ரூ.30,000 வரை கட்டணம் வசூலிக்கப்படுகிறது.

சோனாகிராபி நடத்தப்படும் அறை மிகச் சிறியதாய் இருக்கிறது. நர்சுகள் உடைமாற்றம் செய்யும் அறைபோல சிறிய அளவிலும் சோனாகிராம் கருவியும் டாக்டரும் வெளியே தெரிவதில்லை. ஜாதவ் கூறினார்” ஒரு இடத்திலிருந்து வருபவர்களை ஐந்து பேருக்கு மேல் ஒரு அறையில் உட்கார அனுமதிப்பது இல்லை. அவர்களும் தங்களுக்குள் பேசக்கூடாது என்று சொல்லப்–படுகிறார்கள். கர்ப்பிணி பெண்கள் கருவைக் கண்டறியும் கருவி உள்ள அறைக்கு ஐந்தைந்து பேர்களாகத்தான் அனுமதிக்கப்படுகிறார்கள். சரஸ்வதி தம்மிடம் உள்ள தாள்களில் 16 அல்லது 19 என்று எழுதுவார். எண் 16, என்பது ஒரு பையன் எனக் குறிக்கும் அதாவது ஆண் குழந்தை (boy) என்பதற்கான குறியீடு எண். 19 என்பது பெண் குழந்தை (girl) என்பதற்கான குறியீடு ஆகும். எங்களுடைய முறை வந்தபோது என் நண்பரின் மனைவி அமர்ந்தபோது அவருடைய தாளில் 16 என்ற எண் குறிக்கப்பட்டது. எங்களை போகுமாறு மருத்துவர் கூறிவிட்டார். நாங்கள் விளக்கம் கேட்டபோது அவரின் உதவியாளர்கள் கூறினார்கள். நாங்கள் வருத்தப்பட வேண்டியதில்லை என்றும் வீட்டுக்குச் சென்றதும் இனிப்புகளை வாங்கி கோவிலில் கொடுக்கத் தவறிவிடக்கூடாது. ஏனென்றால் நாங்கள் விரும்பியது கிடைத்திருக்கிறதல்லவா என்று கூறினர்.

19 என்று எழுதப்பட்ட தாள் உடைய எல்லா பெண்களும் சூடம் இருந்த அறைக்கு அனுப்பப்பட்டனர். அவர்கள் பணம் கட்டியதும் மருத்துவமனையில் சேர்க்கப்படுவார்கள் என்று ஜாதவ் கூறினார். “ஒரு பெண் கூறியதை நான் கேட்டேன். தான் அந்த குழந்தையை

(கருவை) வீட்டிற்கு எடுத்துச் செல்ல விரும்பவில்லை என்று. சூடம் அந்தப் பிரச்சனைக்கு ஒரு வழி வைத்திருப்பதாகக் கூறினார். அந்தப் பெண் கீழே அழைத்துச் செல்லப்பட்டு இரண்டு நாய்களை காட்டினார். அவைகளுக்கு அந்த கரு உணவாகும் என்று தெரிந்தது. அடுத்த அறையில் அதிக நாய்களின் சத்தமும் கேட்டது. இவையாவும் நீதிமன்றத்தில் கூறியதாகும்.

லூங்கெரெ என்பவர் மருத்துவமனைக்குச் சென்று நேரடியாய் செய்தி சேகரிக்க எண்ணினார். தான் செல்லும்போது 5 மாத கர்ப்பிணியான ஒரு முஸ்லீம் பெண்ணையும் உடன் அழைத்துச் சென்றார். சோனோகிராபி முடிந்ததும் பெண்களிடம் (கர்ப்பிணி) திங்கட்கிழமை அல்லது வெள்ளிக்கிழமை என்று திரும்ப திரும்ப கூறப்படும் திங்கட்கிழமை என்பது சிவனுக்குரிய தினம். எனவே, அது ஆண் குழந்தையைக் குறிக்கும் வெள்ளிக்கிழமை என்பது தேவிக்கு உரியதினம். எனவே, அது பெண் குழந்தையைக் குறிக்கும். லூங்கெரெ உடன் வந்த பெண்ணுக்கு கருக்கலைப்பு செய்ய மருத்துவர் சூடம் தயாராய் இருந்தார். கரு இரண்டாவது பருவமெய்திருந்தபோதிலும் இதற்குப் பிறகு தேஷ்பாண்டே ஒரு புகாரை காவல்துறையிடம் கொடுத்தார். ஆனால், ஒன்றும் நடக்கவில்லை. மாநிலத்தின் தலைமைச் செயலரிடம் தேஷ்பாண்டே பேசிய பிறகுதான் காவல்துறை செயல்படத் துவங்கியது. ''அதிகாரிகள் சோனாகிராபி கருவிகளை மூடி முத்திரை வைத்தனர். மருத்துவமனையின் அங்கீகாரத்தை ரத்து செய்தனர். கருவுற்றவுடன் சோதித்தறியும் முறையை தடை செய்யும் சட்டத்தின்கீழ் PCPNDT (Pre-conception and Pre-Natal Diagnostic Technique) மற்றும் கருக்கலைப்பு சட்டத்தின் (Medical Termination of Pregnancy) சட்டத்தின் அடிப்படையில் ஆனால் குற்றத்தை பதிவு செய்ததும் 7 மாதங்களுக்கு பின்புதான். அந்த சமயத்தில் என் நண்பரின் மனைவிக்கு ஆண் குழந்தை பிறந்துவிட்டது. உள்ளூர் அதிகாரிகளுக்கு அந்த டாக்டர் தம்பதிகளின் மீது நடவடிக்கை எடுக்க தயங்குகிறார்கள் என்று எங்களுக்குப் புரிந்துவிட்டது. டாக்டருக்கு ஜாமீன் கிடைத்துவிட்டது. ஆனால், ஜாமீனில் வெளியில் வந்ததும் தங்கள் கட்டணத்தை மேலும் அதிகமாக்கிவிட்டார்கள். எங்களுடைய பணி காரணமாக அவர்களுக்கு 'ரிஸ்க்' அதிகமாகிவிட்டது தானே'' என்றார் தேஷ்பாண்டே.

**எங்கே போனார்கள் பெண் குழந்தைகள் ?**

- 2011ம் வருட தேசிய புள்ளிவிவர கணக்கெடுப்பின்படி பெண் ஆண் விகிதாச்சாரம் 933 பெண்கள் 1000 ஆண்கள் என்றிருந்தது.
- மாநிலங்களிடையே கேரளாவில் உயர்ந்த பெண் / ஆண் விகிதாச்சாரம் அதாவது 1058 பெண்கள் 1000 ஆண்களுக்கும் யூனியன் பிரதேசங்களிடையே பாண்டிச்சேரி உயர்ந்த ஆண் பெண் விகிதாச்சாரம் 1001 பெண்களுக்கு 1000 ஆண்கள் என்றவாறு இருந்தது.
- மிகக் குறைந்த விகிதாச்சாரமாக அதாவது 861 பெண்களுக்கு 1000 ஆண்கள் என்ற விகிதத்திலும் யூனியன் பிரதேசங்களிடையேடையும் மற்றும் டாமன்–ல் 710 பெண்களுக்கு 1000 ஆண்கள் என்ற விகிதாச்சாரமாகவும் இருந்துள்ளது.

கடந்த ஜூன் 9ம் தேதி கருவில் அழிந்த பெண் சிசுக்கள் சங்கம் நல்லா என்னும் சாக்கடையில் கிடந்ததாக சில பெண்கள் கூறினார்கள். இந்த கழிவுநீர் வாய்க்கால்கள் பார்லி தெர்மல் பவர் ஸ்டேசனுக்கு அருகில் உள்ளது. இப்படிக் கண்டுபிடிக்கப்பட்டது. மாநிலம் முழுவதும் அதிர்ச்சி அலைகளை உருவாக்கினாலும் நடவடிக்கைகள் ஏதும் மேற்கொள்ளப்படவில்லை. மறுநாள் இன்னும் அதிக அளவில் இறந்த பெண் சிசுக்கள் அந்த வாய்க்காலில் கிடந்தன. உள்ளூர் மக்கள் இதுகுறித்து மிகவும் அதிருப்தி உற்றிருக்கிறார்கள்.

பிரகாஷ் சவான் என்னும் உள்ளூர் பத்திரிகை நிருபர் கூறியதாவது, ''அந்த இடத்தில் இருந்து இதுபற்றிய செய்திகளை சேகரித்துக் கொண்டிருந்தபோது ஒரு வேன் வேகமாக வாய்க்காலுக்கு அருகில் வந்து மேலும் ஒரு குழந்தைக் கருவை வீசிவிட்டு சென்றது. நாய்களால் எல்லாவற்றையும் தின்று தீர்க்க முடியவில்லை போலிருக்கிறது''. தேஷ்பாண்டே வேறு விதமாகக் கூறினார். தேஷ்பாண்டே உடன் சென்ற குழு மருத்துவமனையை சோதனையிட்ட பின்பு அந்த நாய்களை அங்கிருந்து துரத்தியிருக்கலாம். கருக்கலைப்பு செய்தபின் குழந்தை கருக்களை தன் நோயாளிக் குடும்பத்தினரிடமே கொடுத்துவிட அவர்கள் ஊரைவிட்டுப் போகும்போது தூக்கி எறிந்திருக்கலாம் என்று கூறுகிறார்.

இதுபற்றி வதந்திகள் பரவ தொடங்கின. சூடம் தம் தோட்டத்தில் சிசுக்களைக் கொட்டி குவிப்பதாகவும் அங்கும் வேட்டை நாய்கள் திரிகின்றன. ''இரண்டு கிணறுகள் மூடப்பட்டுள்ளன. சாட்சியங்களை அழிக்கும் நோக்கத்தில்'' என்று சொல்கிறார் ''இந்த தோட்டங்களையும் கிணறுகளையும் தோண்டிப் பார்த்தால் இன்னும் நிறையக் கிடைக்கக் கூடும்'' என்று கூறகிறார் வித்தியா சவான் என்னும் சட்டமன்ற உறுப்பினர்.

உள்ளூர் மக்கள் புகார் அளித்தும் போலீஸ் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. தோட்டம் பற்றிய செய்தி அறிந்த முதலில் நடவடிக்கை எடுத்தது உதவி காவல் ஆய்வாளர் மிர்சா பைக் நான் அவ்விடத்தை ரெய்டு செய்ய சென்றபோது ஐந்து அல்லது ஆறுமாத பெண் கரு ஒரு

## நலிந்த சட்டம்

இந்தியாவில் ஆண் குழந்தைகள் விரும்பப்படுவது அறிந்த ஒன்றுதான். ஆனால், கருவைக் குழந்தையிலேயே ஆணா பெண்ணா என்றறிந்து அழிப்பதை தடுக்கும் சட்டத்தின்படி Pre Conception and Pre Natal Diagnostic Technique Actன் கீழ் 600 வழக்குகள்தான் 2003ம் வருடத்திலிருந்து 2010 வரை பதிவு செய்யப்பட்டது. வெறும் 20 வழக்குகளில் தான் தண்டனை வழங்கப்பட்டிருக்கிறது என்று இந்திய பொதுச் சுகாதார அமைப்பின் அறிக்கை ஒன்று சொல்கிறது.

வல்லுநர்கள் சட்டத்தை செயல்படுத்தும் அதிகாரிகளை மற்றும் செயல்படாத ஆலோசனை கழங்களை மற்றும் சட்டம் செயலாற்றும் வழிமுறைகளே காரணமென்று சொல்கிறார்கள். “பெரும்பாலான வழக்குகள் (இந்த சட்டத்தின்படி) பதிவேடுகள் பராமரிக்கப்படாதது மற்றும் பதிவே செய்யப்படாதது பற்றியதுதான். மொத்தத்தில் மருத்துவர்கள் தண்டிக்கப்படாமல் தப்பிவிடுகிறார்கள். மருத்துவக் கழகங்களும் தவறு செய்யும் தங்கள் அங்கத்தினர்கள் மீது நடவடிக்கை ஏதும் எடுப்பதில்லை” என்று சுகாதாரம் மற்றும் பிற கொள்கைகளில் விசாரணை மையத்தின் இணை ஒருங்கிணைப்பாளரான சானா கான்டிராக்டர் கூறுகிறார்.

ஹைதராபாத்திலுள்ள மாவட்ட ஆட்சியர் சட்டப்பூர்வமில்லாத ஆணா பெண்ணா என மையங்களை நடவடிக்கை எடுத்த அரவிந்த் குமார் கூறுவதாவது “ஒவ்வொரு மையமும் ஒரு பதிவேடு ஒன்றை பராமரித்தாக வேண்டும். அதில் பல விவரங்கள் கருவின் வயது போன்றவை எழுதப்பட்டிருக்க வேண்டும் என் பதவிக் காலத்தில் இந்த மையங்களில் வாரம் ஒரு முறை நான் பார்வையிட்டிருக்கிறேன். பாரங்கள் பூர்த்தி செய்யப்படாமலோ அல்லது 12 வாரங்களுக்கு மேற்பட்ட கருக்களை ஸ்கேன் செய்திருந்தாலோ சட்ட நடவடிக்கை எடுத்திருக்கிறோம். 15 நாட்களுக்குள் பதிலளிக்கவில்லையெனில் அந்த கருவிகள் பறிமுதல் செய்யப்பட்டு மூடி முத்திரை வைக்கப்படும்.

“முதன்மை சுகாதார அதிகாரிதான் இந்த சட்டத்தை அமல்படுத்த அதிகாரம் பெற்றவராவர் அவருக்கு அதற்கு தேவையான அவகாசமும் சட்ட நடைமுறையும் இல்லாதிருந்திருக்கலாம். ஆணா பெண்ணா என்று கண்டறியும் வழக்குகளில் சாட்சியங்கள் பலமானவையாக இருக்க வேண்டும். அவ்வாறு கிடைப்பது மிகவும் கடினமான ஒன்றாகும்” என்று கூறுகிறார் குஜராத்தில் ஆண், பெண் சமத்துவத்துக்காகப் பணி செய்யும் சுவாதி என்ற நிறுவனத்தின் இயக்குநரான பூணம் கத்தூரியா என்பவர்.

பிளாஸ்டிக் பை ஒன்றில் கிடந்தது. எனவே உடனே ஒரு வழக்கை பதிவு செய்துவிட்டேன். இவர் விசாரித்தபோது மகாராஷ்டிராவில் அதிக அளவில் கருக்கலைப்பு மருந்துகளை வாங்கியவர் சூடம்தான் என்று தெரிய வந்துள்ளது.

கணேஷ் மருந்துக்கடை முண்டே மருத்துவமனைக்குள்ளேயே அமைந்து உள்ளது. இது 2790 விக்ரிடில் எனும் ஊசி மருந்து குப்பிகளை வாங்கியுள்ளது. பயணியர் டிஸ்டிரிபியூட்டர் என்னும் மருந்து சப்ளை செய்யும் கம்பெனியிடமிருந்து அந்த மருந்து வாங்கப்பட்டுள்ளது. இம்மருந்துதான் கருக்கலைப்புக்கு பெரும்பாலும் பயன்படுத்தப்படுவது ஆகும். மரத்துவாடா பகுதியில் இதுதான் மிகப்பெரிய விற்பனை ஆகும். இந்த விசாரணைக்குப் பின் கணேஷ் மருந்துக் கடையின் உரிமம் ரத்துச் செய்யப்பட்டது. டாக்டர் தம்பதிகள் பிரிவு 318ன் கீழ் (பிறப்பை தவிர்த்து பிணத்தை மறைவாக அழித்து விடுதல்) மற்றும் 34ன் கீழ் (பல நபர்கள் ஒரு பொதுவான நோக்கத்துடன் குற்றமிழைத்தல் எனும் பிரிவுகளில் கைது செய்யப்பட்டாலும் இருவரும் 48 மணி நேரத்தில் ஜாமீனில் வெளிவந்துவிட்டனர்.

THE WEEK பத்திரிகையிலிருந்து முண்டே மருத்துவமனையை பார்வையிட்டபோது கணேஷ் மருந்துக்கடை இருந்த இடத்தில் அஸ்டவிநாயகா மருந்துக்கடை இருந்தது.

விஜயமாலாவில் சாவுக்குப்பின் சமூக செயல்பாட்டாளர்கள் தேஷ்பாண்டே தலைமையில் மருத்துவமனைக்குச் சென்றபோது பலநூறு மக்கள் அங்கே திரண்டனர். ஒரு நாளுக்கு 40 கருக்கலைப்பு வீதம் நடைபெற்றபோது கடந்த வருடமே அவர்கள் கைது செய்யப்பட்டிருந்தால் ஏறத்தாழ 14400 பெண் குழந்தைகளை காப்பாற்றி இருக்கலாம் என்று கூறுகிறார் லூங்கெரெ. சுகாதார அமைச்சர் சுரேஷ் ஷெட்டி CID விசாரணை ஒன்று ஏற்பாடு செய்யப்படும் என்றார். கோச்சே கருதுவது என்னவென்றால் சூடும் டாக்டருக்கு மனவியல் நிபுணர் உதவி தேவை என்று கூறுகிறார்.

பீடு பகுதியில் டாக்டர் சூடம்–ன் மருத்துவமனை போன்று இன்னும் பல உள்ளன. பீடு நகரில் மட்டும் 44 சேனோகிராபிக் மையங்கள் உள்ளன. 2011ம் வருட கணக்கெடுப்பின்படி 1000 ஆண் குழந்தைகளுக்கு 801 பெண் குழந்தைகள் தான் (6 வயதுக்குட்டோர்) உள்ளனர். இதுவே 2001ம் வருட கணக்கெடுப்பில் 1000க்கு 894 என்ற விகிதத்தில் இருந்தது. அப்படியென்றால் ஒவ்வொரு 1000 ஆண் குழந்தைகளுக்கும் 93 பெண் குழந்தைகள் அம்மாவட்டத்தில் மறைந்துபோய் இருக்கின்றனர்.

பெண் செயல்பாட்டாளர்கள் கூறுகின்றனர், கர்நாடகா மற்றும் ஆந்திராவிலிருந்து கூட பெண்கள் இங்குள்ள கிளினிக்குகளுக்கு வருகின்றனர். ஏனென்றால் இங்கு வசூலிக்கப்படும் கட்டணம் மிக மிக குறைவு “பெண்களுக்கு ஆண் குழந்தைகள் பெற்றுக் கொடுக்க வேண்டுமென்ற நிர்பந்தம் மிக மிக அதிகம். பெண் குழந்தைகள் பிறந்தால்

அவர்கள் சித்ரவதைதான் அனுபவிக்கின்றனர், என்கிறார் மனிஷா டோக்லீ.

“பல இடங்களில் பெண் குழந்தைகள் பிறந்தால் கணவன்மார்கள் கொஞ்சமும் யோசிக்காமல் இரண்டாம் திருமணம் செய்கிறார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் பெண்களுக்கு வேறு வழி தோன்றாமல் கருவில் இருப்பது, ஆணா பெண்ணா என்று கண்டறியப் புறப்பட்டு விடுகிறார்கள்”. பிரச்சனைக்கு வழி கண்டு பிடிப்பது அவ்வளவு சுலபமானதல்ல ஒரு அதிர்ச்சி ஏற்பட்டவுடன் கருக்கலைப்பு பக்கம் அவர்கள் கவனம் திரும்பி விடுகின்றது. கருக்கலைப்பு என்பது ஒவ்வொரு பெண்ணின் உரிமையாகும். கருக்கலைப்பு எங்களது பிரச்சனை அல்ல, கருவில் உள்ளதை ஆணா பெண்ணா என்று கண்டறிவதுதான் எங்கள் பிரச்சனை என்று சொல்கிறார் சானா கான்ட்டிராக்டர், சுகாதாரம் மற்றும் இணைந்த விசயங்களில் சமத்துவம் காணும் மையத்தின் இணை ஒருங்கிணைப்பாளர் இவர். குடும்பக் கட்டுப்பாட்டுக்காக அரசு ஊக்கப்படுத்துவது ஒரு பெண் குழந்தை ஒரு ஆண் குழந்தை என்று. எனவே, ஒரு தம்பதிக்கு முதல் குழந்தை பெண்ணாக இருந்தால் அடுத்து பையனாக கருத்தரிக்கும் வரை கருக்கலைப்பு செய்து கொண்டேதான் இருக்கிறார்கள். குடும்பக் கட்டுப்பாடு இந்த தருணத்தில் எப்படி இருக்க வேண்டும் என யோசித்து செயல்படுத்தப்பட வேண்டும் என்கிறார் தேஷ்பாண்டே. எல்லாவற்றுக்கும் மூல காரணம் நம் சமூகத்தில் நிலவும் பெண் வெறுப்புதான். அவர்கள் பெண்களை பொருளாதாரச் சுமையாகத்தான் பார்க்கிறார்கள். “நம்முடைய ஆணாதிக்க கலாச்சாரத்தில் பெண்களைவிட ஆண்கள்தான் வரவேற்கப்படுகிறார்கள். பெண்கள் என்பது சுமையாக பார்க்கப்படுவது ஏனென்றால் அவர்களை படிக்க வைக்க வேண்டும் திருமணம் செய்து தரவேண்டும், அதிலும் பெரிய

## எல்லா பிரச்சனைகளுக்கும் தாய்:

அர்ஜுன்சிங் நிறைய மக்கள் மகன் பிறந்ததை ஒரு கல்யாண விழா போல கொண்டாடுவதை பார்த்திருக்கிறார். அதேபோல மக்கள் அல்ட்ரா ஸ்கேன் சென்று பின் குற்ற உணர்வு கிஞ்சித்தும் இல்லாமல் பெண் கருவை அழித்துவிடுவதையும் பார்த்திருக்கிறார். தற்போது பெண்கள் குறைவான எண்ணிக்கையில் இருப்பதால் பெண்களுக்காக தேடி தேடி அலைவதையும் தற்போது கவனித்து வருகிறார். 25 வருடங்களுக்கு முன்பு குழந்தைகள் பெண் என்பதால் கருவிலேயே அழிக்கப்பட்டனர். அதன் விளைவாக இன்று திருமண வயதில் பெண்களே இல்லை. இந்த 10 வருடங்களாக எல்லா பிரச்சனைக்கும் இதுதான் தாய் என்கிறார். பஞ்சாப் மாநிலத்தில் ரோபார் மாவட்டத்திலுள்ள கன்சால் கிராமத்து முன்னாள் தலைவரான இவர்.

“இப்போது நிலைமை மிக மிக மோசமாக மாறிவிட்டது. ஏனென்றால் பெண் குழந்தை என்றால் மக்கள் கொன்று போட்டனர். என் வீட்டுக்கு ஓட்டு கேட்க வரும் ஒவ்வொரு வேட்பாளரையும் என் பையன்களுக்கு திருமணம் செய்ய பெண் பார்த்துக்கொடுங்கள் என்றுதான் கேட்கிறேன் என்கிறார். நான்கு மகன்களுக்கு தாயான நான்கி கவுர். இவருக்கு 24 முதல் 30 வயதுக்கு இடையிலான 4 மகன்கள். இவருடைய பிரச்சனை என்னவென்றால் பொறுப்புள்ள மகனாக இருக்க மனைவி குழந்தைகளை கவனிக்க வேண்டிய இவருடைய மகன்கள் கொஞ்சமும் பொறுப்பில்லாமல் வெட்டித் தனமாக சுற்றிக் கொண்டிருப்பதோடு தவறான செயல்களிலும் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். இருவரை போலீஸ் காவலில் இருந்து மீட்டு வந்திருக்கிறார். பெண் குழந்தைகளை கொன்றவர்களை செருப்பை எடுத்து அடிக்க வேண்டும். சமுதாயத்திற்கு அவ்வளவு பெரிய கேடு செய்திருப்பதால் என்று சொல்லும் இவர்தான் எதுவும் செய்திடவில்லை. ஆண் குழந்தைகளாக வேண்டுமென்பதாக என்றும் சொல்கிறார்.

ஊரக மக்கள் கல்யாணத்துக்கும் பெண்கள் கிடைக்காமல் போகும்போது அதற்கு காரணம் பெண் குழந்தைகளை அழித்துவிடுவது என்று நினைக்கிறார்கள். அர்ஜுன் சிங் மிகுந்த அளவிலான மக்கள் தம் தலைவர்கள் தம் பையன்களுக்கு வேலை வாங்கித் தருவதைவிட பெண்கள் பார்த்துத் தர வேண்டும் என்றுதான் எதிர்பார்க்கிறார்கள். பல பெற்றோர் தம் பெண்களை மணமுடிக்க விரும்பும்போது தம் மாப்பிள்ளைகள் தம் சகோதரிகளை தம் பையன்களுக்கு தந்தால்தான் மணமுடிக்க விரும்புகிறார்கள். பல குடும்பங்கள் பெண்களை தேடி வெகுதூரம் சென்று “வாங்குகிறார்கள்”. ஆனால், உள்ளூர் பெண்களுக்கு கிராக்கி அதிகம். நல்ல துணிமணிகள் வசதிகள் அவர்களுக்கு கிடைக்கும். வெளியிலிருந்து அவர்களை தாழ்ந்த ஜாதிப் பெண்கள் மற்றும் வெகுதூரத்தில் இருந்து வரும் பெண்களை வீட்டுக்கு வெளியிலுள்ள வீடுகளிலும், சில சமயம் மாட்டுக் கொட்டாயிலும்தான் தங்க வைக்கிறார்கள். தம் வீட்டு ஆண்களிடம் உடல் இச்சை தேவைக்காகவும் வாரிசுகளை உருவாக்கவும் இவர்கள் தேவை. வெளிநாடுகளிலிருந்து வறிய குடும்பத்து பெண்கள் பஞ்சாபிலுள்ள கிராமங்களில் வீடு உருவாக்கி கொள்கிறார்கள். ஏனென்றால்,

ஆண்கள் நல்ல திடகாத்திரமாகவும் உடல்நலத்தோடும் இருக்கிறார்கள்.

பிற்போக்கு தனமான வகுப்பினர் இதை விரும்புவதில்லை. இரத்தவழியை அசுத்தப்படுத்துவதாக நினைப்பதால் நடுத்தரத்திற்கும்கீழ் உள்ள வகுப்பு மக்களிடையேயும் எல்லைப் பகுதியில் வசிப்பவர்களிடையேயும் தான் இப்பழக்கம் இருக்கிறதென்று ஹரியானவின் ஆய்வாளர், CID ஆக உள்ள ராஜ்பீர் தேஷ்வால் கூறுகிறார். தான் அம்பாலா மாவட்டத்தில் பணி செய்தபோது குழந்தைக் கரு அழிப்பதை கண்டுகொள்ளாமல் மக்கள் இருந்ததாகவும் கூறகிறார்.

கிருஷ்ணகுமார் பஞ்சாபிலுள்ள நவான் சகார் மாவட்டத்தில் உதவி கமிஷனராக இருந்தபோது கர்ப்பமாக இருந்த ஒவ்வொரு பெண்ணையும் கவனமாக கண்காணித்து வந்ததாகவும் சில இளைஞர்களை இதற்காக உருவாக்கி வைத்திருந்ததாகவும் கூறுகிறார். டாக்டர்களை பின் தொடர்ந்து வரவேண்டும். இந்தக் குற்றத்தில் அவர்கள் பங்கு முக்கியமானது என்று கூறும் டாக்டர் தகியா முன்னர் சுகாதார இயக்குநராக இருந்தார். கருவை கண்டறியும் சட்டம் இயற்றப்பட்டு 2002ல் திருத்தம் கொண்டு வரப்பட்டது. இவரின் வழிதான் நாடு செல்ல வேண்டிய வழியாகும்.

பெண் குழந்தைகள் கருவிலேயே அழிக்கப்படுவது பற்றி இருபது வருடங்களுக்கு முன்பே "கருவறைதான் அவர்களின் கல்லறை" என்ற தலைப்பில் நான் எழுதியபோது (THE WEEK – ஆகஸ்டு 1, 1993) 2025ம் வருடத்தில் எப்படி இருக்கக்கூடும் என்று எழுதினோம். மணப் பெண்கள் கிடைக்காமல் போதல், விலை பொருளாகும் பெண்கள், ஆண்கள் வீணாகிப் போகுதல், வரதட்சணைக்கு மாற்று என ஏதுமிருக்காது சமுதாயப் போக்கு கீழ் நோக்கி தடம் மாறிப் பயணித்தல் போன்றன நடக்கும் என்று எழுதினோம். ஆனால், புது மில்லியனியம் வருடம் பிறக்குமுன்னே, நாங்கள் எழுத வேண்டியதாகிவிட்டது "மணப் பெண்கள் விற்பனைக்கு" என்ற தலைப்பில் எழுத வேண்டி (நவம்பர் 5, 2000) வந்தது. அது நவான் சஹாரில் எப்படி வெகு தூரத்திலிருந்து வந்து வாழ்கிறார்கள் என்பது பற்றியது. எல்லாப் பெண் குழந்தைகளும் எங்கே போனார்கள்" (ஜுலை 7, 2002) என்ற தலைப்பில் ஹரியானாவில் நடக்கும் மணப்பெண் வேட்டை பற்றி எழுதப்பட்டது.

"தேவை: மணப்பெண்கள்" என்ற தலைப்பில் எழுதப்பட்ட கட்டுரையில் (ஏப்ரல் 3, 2005) ஆண்கள் வெகுதூரம் மற்றும் வெளிநாடுகளுக்குச் சென்று மணப்பெண் தேடி அலையும் அவதி நிலை ஏற்பட்டிருக்காது. அவர்கள் பெண் குழந்தைகளை பிறக்குமுன்பே அழிக்காமல் இருந்திருந்தால்..... என்று எழுதியிருந்தோம்.

தொகை வரதட்சணையாக தந்துதான். பெண்களுக்கு திருமணம் ஆனபின்பு கூட ஆண் குழந்தைகளை பெற்றுத்தர முடிந்தால்தான் அவர்களுக்கு மதிப்பு" என்கிறார் செயல்பாட்டாளர் வித்யாபாய். "முதலில் மனநிலை அல்லது மனோபாவம் மாறினால்தான் இந்த கொடிய பழக்கங்கள் எல்லாம் நிற்கும் என்கிறார் சோனா கன்டிராக்டர். இல்லையென்றால் புதிய தொழில் நுட்பங்கள் மற்றும் நடவடிக்கைகள் கண்டுபிடிக்கப்பட்டு பின்பற்றப்படும். மக்கள் சட்டத்தை சுற்றி வளைத்து தங்களுக்குச் சாதகமாக பயன்படுத்தத்தான் முனைவார்கள்" என்று மேலும் கூறினார்.

பெண்கள் கருவுற்றதை கலைப்பதற்கான உரிமைச் சட்டம் பெண்களின் நன்மைக்காக உருவாக்கப்பட்டது. தற்போதோ தவறாகப் பயன்படுத்தப்படுகிறது. அது பெண்களுக்கு எதிராகவும் அவர்களின் சுகாதாரக் கேட்டிற்காக பயன்படுத்தப்படுகிறது. நல வாழ்வுக்கெனவுள்ள மருத்துவ இனங்களுக்கும் பெண் குழந்தைகள் கொல்லப்படுவதற்கும் மிகத் தெளிவான தொடர்பிருக்கிறது என்று சொல்கிறார். நீலம் கொர்ஹி என்னும் சட்டமன்ற உறுப்பினர் மற்றும் சிவ சேனாவின் கொள்கைப் பரப்பும் செயலாளர்; ஒவ்வொரு முறையும் முண்டே தம்பதிகளுக்கு ஜாமீன் கிடைப்பதுதற்காக எப்படி சாட்சியங்கள் சேகரிக்கப்படுகின்றன. எப்படி வழக்கில் விசாரணை மேற்கொள்ளப்படுகிறது என்பதில் பெரும்பகுதி சார்ந்துள்ளது. "PCPNDT சட்டத்தின் மூலம் மூன்று வருட தண்டனையும் ரூ.10000 அபராதமும் முதல் முறை தண்டிக்கப்படும்போது வழங்கப்படும். எனவே ஜாமீன் கிடைப்பது எளிதானதாக இருக்கிறது. தண்டனை அதிகமாக்கப்பட்டால் சட்டமும் இன்னும் வலுவானதாக இருக்கும்" என்கிறார் வழக்கறிஞர் கருணா டக்சல். கோர்கி சொல்வது என்னவென்றால் சாட்சியங்கள் வலுவானதாக சேகரிக்கப்படுமானால் டாக்டர் தம்பதிகள் தண்டிக்கப்பட்டு இருக்கலாம். "அதிகாரிகள் கருக்கலைப்பு செய்து கொண்ட பெண்களின் நம்பிக்கைக்கு பாத்திரமானவர்களாக நடந்து கொண்டால் வழக்கை நன்றாக கொண்டு செல்ல முடியும்." "நாங்கள் விரைவாக சிறப்பாக நடக்கும் நீதிமன்றங்கள். அவை இதுபோன்ற வழக்குகளை மட்டும் எடுத்துக் கொண்டு நீதி வழங்க விரைவாக வழக்கை முடிக்க முடியுமானால் இதுபோன்ற மருத்துவர்கள் தங்கள் இஷ்டம் போல் திரிந்து பணம் சம்பாதிக்க வழி இல்லாமல் போகும்".

**– ஆதாரம்:**
THE WEEK, JUNE 10, 2012

# சேலம் மாவட்டம் பனைமரத்துப்பட்டியிலுள்ள அரசு மேல்நிலைப் பள்ளியில் +2 படித்த மாணவன் சீனிவாசன் தற்கொலை செய்து கொண்ட சம்பவம் குறித்த உண்மை அறியும் குழுவின் அறிக்கை

**அறிமுகம் :**

சேலம் மாவட்டம், பனைமரத்துப்பட்டியில் உள்ள அரசுமேனிலைப் பள்ளியில் எஸ்.சீனிவாசன் எனும் 18 வயது மாணவன் தற்கொலை செய்து கொண்டான் என ஜுன் 20, 21 2011 தேதிகளில் ஊடகசெய்திகள் வந்தன. 2011 ஜுன் 18 அன்று தனது வீட்டில் சீனிவாசன் தூக்குப் போட்டு தற்கொலை செய்துகொண்டதாக செய்திகள் தெரிவித்தன. சீனிவாசனும் அவனது வகுப்புத் தோழர்களும் கணிதப் பாடம் சரியாக கற்றுக்கொடுக்காதது பற்றி தலைமையாசிரியரிடம் புகார் கொடுக்கதயாராகி வந்தனர் என்பதற்காக, அவனைமட்டும் தனிமைப்படுத்தி கணித ஆசிரியர் திரு.செந்தில்குமார் (32), வேதியியல் ஆசிரியர் இளங்கோவன் (48), இயற்பியல் ஆசிரியர் மணிவண்ணன் மற்றும் தமிழ் ஆசிரியர் ராமமூர்த்தி (52), ஆகியோர் தரக்குறைவான வார்த்தைகளால் திட்டி மிரட்டப்பட்டுள்ளனர்.

தமிழ்நாடு குழந்தை உரிமைகள் பாதுகாப்பு கூட்டமைப்பு ஒரு 18 வயது மாணவன் திடீரென தற்கொலை செய்துகொள்ளும் அளவுக்குப் போனதன் காரணங்கள் பற்றி ஆராய்வதற்காக ஒரு உண்மை அறியும் குழுவை அமைத்து களஆய்வில் ஈடுபட்டது.

**ஆய்வின் நோக்கங்கள்:**

- பெற்றோர், மாணவர்கள், ஆசிரியர்கள், பள்ளிநிர்வாகிகளை நேர்காணல் நடத்திமாணவன் சீனிவாசனின் மரணத்திற்கான காரணங்களை பரிசோதித்தல்.
- மாணவனின் தற்கொலைக்கு காரணமாக இருக்கக்கூடிய பள்ளியின் நிலை மற்றும் சுற்றுப்புறத்தை ஆய்வு செய்தல்.
- பள்ளியில் நடந்துள்ள குழந்தை உரிமைகள் மற்றும் மனித உரிமை மீறல்களை ஆய்வு செய்தல். குறிப்பான முடிவுகளுக்குச் செல்லுதல்.
- இந்த சம்பவத்திற்கு காரணமானவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவும், பள்ளிகளில் சித்ரவதை (உடல் ரீதியான தண்டனை) மற்றும் பாகுபாடான , தரக்குறைவான மற்றும் கொடூரமான வடிவங்களில் உள்ள அணுகுமுறைகளை ஒழித்திடக் கோரி அரசாங்கத்தின் கவனத்தை ஈர்த்தல்.

**உண்மையறியும் குழுவின் உறுப்பினர்கள் :**

திருமிகு. V. இந்திரா, மையக்குழு உறுப்பினர் – TNCRPN

திருமிகு. T. ராஜ், இயக்குநர், குழந்தைகள் கண்காணிப்பகம்

திருமிகு. C. ராமு, ஒருங்கிணைப்பாளர்– VRDP

திருமிகு. M. தனலட்சுமி, ஒருங்கிணைப்பாளர் –CASSA

திருமிகு. பட்டாபிராஜா , உறுப்பினர் –CACL TN & Py

திருமிகு. செல்வராணி, ஒருங்கிணைப்பாளர் – LAW TRUST

திருமிகு. தமிழரசி, ஒருங்கிணைப்பாளர் – HRF

உண்மை அறியும் குழு 28.6.2011 மற்றும் 29.6.2011 ஆகிய தேதிகளில் சேலம் நிலவரைப்பட்டியில் விசாரணைகளை நடத்தியது.

**உண்மைகளும் வழக்கின் தொடர் சம்பவங்களும் :**

- எம்.சேகர் மற்றும் எஸ்.விமலா ஆகியோரின் மகனான எஸ்.சீனிவாசன் பனைமரத்துப்பட்டி, சேலம் அரசுமேனிலைப் பள்ளியில் +2 வகுப்பில் சி பிரிவில் படித்தான். சேலம், நிலவரப்பட்டியில் வசித்து வந்தான். 2011, ஜுன் 18 அன்று அவனது வீட்டில் அம்மாவின் சேலையில் தூக்குப்போட்டுக் கொண்டு தற்கொலை செய்து கொண்டான்.
- 15 நாட்களுக்கு முன்பாக 15.06.2011 அன்று கோடைவிடுமுறை முடிந்துபனைமரத்துப்பட்டி அரசுமேனிலைப்பள்ளி திறக்கப்பட்டுள்ளது. கணித ஆசிரியர் செந்தில்குமார் கரும்பலகையில் சில கணிதங்களைப் போட்டு அப்படியே அதைகாப்பி அடித்துக்கொள்ளச் சொல்லியிருக்கிறார்.
- மறுநாள் 16.06.2011 யாரும் வீட்டுப்பாடம் செய்து எடுத்து வரவில்லை. யாருக்கும் புரிந்துகொள்ள முடியவில்லை. சீனிவாசனும் அவனது நண்பன் ராகுலும் (பெயர் மாற்றப்பட்டுள்ளது) இவ்வளவு வேகமாக பாடத்தைக் கொண்டு செல்லாதீர்கள். எங்களால் புரிந்துகொள்ள முடியவில்லை என்று தெரிவித்துள்ளனர். அவர்களின் வார்த்தைகளை காதில் வாங்கிக் கொள்ளாத கணித ஆசிரியர் அதே போக்கில் பாடத்தை நடத்தினர். வகுப்பு முடிந்ததும், சீனிவாசனும், ராகுலும், மற்றமாணவர்களும் சேர்ந்து

தலைமை ஆசிரியருக்கு ஒரு புகார் கடிதம் தயாரித்தனர். கையெழுத்துக்களை சேகரித்தனர். பள்ளிநேரம் முடிந்தவுடன் வேதியியல் ஆசிரியர் இளங்கோவன் புகார் சம்பந்தமாக சீனிவாசன் மற்றும் ராகுலிடம் விசாரித்துள்ளார். மிரட்டியும் உள்ளார்.

- அன்று மாலையில் சீனிவாசன் தனது அப்பாவிடம் கணித ஆசிரியர் பாடத்தை சரியாக நடத்தவில்லை என்று தெரிவித்தார். உடனே சீனிவாசனின் தந்தை அவனை ஆறுதல் படுத்தியுள்ளார். டியூசன் வைத்துக்கொள்ளலாம், அங்கே சந்தேகங்களை தீர்த்து வைப்பார்கள் என்றும் கூறியுள்ளார். எனது சந்தேகங்கள் தீர்ந்து விடும், ஆனால் மற்ற மாணவர்கள் என்ன செய்வார்கள் என்று கேட்டுள்ளார். அதன்பிறகு செவ்வாய்ப்பேட்டை சென்று புத்தகங்களுக்கு அட்டைபோட பிரவுன் பேப்பர் போன்ற பொருள்கள் வாங்க சென்றுள்ளார்.

- மறுநாள் (17.6.2011) மதிய நேரத்துக்கு பிறகு சீனிவாசனின் கணினி ஆசிரியர் கடிதம் பற்றி விசாரித்துள்ளார். அதே நேரத்தில் தமிழ், இயற்பியல் ஆசிரியர்களும் வந்தனர். அனைவரும் மரியாதையற்ற முறையில் கடுமையாக அவனை திட்டியுள்ளனர். உதைத்து பள்ளியைவிட்டு துரத்துவோம் என மிரட்டியுள்ளனர். அவனது பிராக்டிகல் எக்சாம், மாற்று சான்றிதழ் நல்லபடியாக தரமாட்டோம் என தெரிவித்ததாகவும் தெரிகிறது. இதுபற்றி மாணவர்கள் கேட்டபோது அவன் எதையும் பேச மறுத்துள்ளான். பிறகு அவன் தலைமை ஆசிரியர் அறைக்கு சென்று அனுமதி பெற்றுக்கொண்டு அவனது பையை எடுத்துக்கொண்டு வீட்டுக்கு 3.10க்கு சென்றுவிட்டான். வீட்டுக்கு வந்த பிறகு வீட்டின் முன்பாக அமர்ந்து ஒரு கடிதத்தை எழுதிவிட்டு பிறகு அறைக்கு சென்று தூங்கிவிட்டான். மாலையில் அவனது அம்மா தேநீரை கொண்டு வந்து அருந்தும்படி கூறியதற்கு, வைத்துவிட்டு போகுமாறு அம்மாவிடம் சொல்லியிருக்கிறான். அவன் அப்பா வரும்வரை தூங்கிக்கொண்டிருக்கிறான். இரவு சாப்பாட்டுக்காக அவனது அப்பா அவனை எழுப்பினார். சாப்பிட்ட பிறகு டிவி பார்த்துட்டு தூங்கப்போய்விட்டான்.

- அடுத்த நாளில் (18.6.2011) அவன் காலை 8.30 மணிக்குதான் எழுந்தான். அவனது அப்பா அவனை எழுப்பி பள்ளி செல்லவில்லையா? என கேட்டதற்கு இன்று லீவுதான் என்று சொல்லியிருக்கிறான். எனவே அவனது அப்பா அவனை வீட்டுப்பாடம் செய்ய சொல்லிவிட்டு வேலைக்கு போய்விட்டார்.

- காலை 11 மணி அளவில் பக்கத்து வீட்டுக்காரர்களின் சகோதரி அவனை தண்ணீர் தூக்கிப் போகும்போது பார்த்துள்ளார். அவர்தான் அவனை உயிரோடு கடைசியாக பார்த்த ஆள்.

- மதியம் 2 மணிக்கு அவனது அம்மா வீட்டுக்கு வந்தார். மகனை தேடினார். சேவையிலே தூக்கிப் போட்டுக் கொண்டு அவன் தொங்குவதை அவர் பார்த்து அதிர்ச்சியடைந்தார். சப்தம் போட்டார். சீனிவாசனின் மாமா மற்றும் பக்கத்து வீட்டார்கள் வந்து அவனை இறக்கினார்கள். அவனது அப்பாவுக்கு தகவல் சொன்னார்கள். நெருங்கிய உறவினர்களுக்கு தகவல் சொல்லிவிட்டு அதேநாள் மாலை 5 மணி அளவிலேயே அவனது உடலை மயானத்தில் எரித்துவிட்டனர்.

- மறுநாள் (19.6.2011) காலை, சில சடங்குகளுக்காக சிலர் மயானம் சென்றனர். மூத்த சகோதரன் சத்யமூர்த்தி, தம்பி சீனிவாசனின் அறையை சுத்தம் செய்து கொண்டிருந்தான். அப்போது பள்ளிக்கூட பையில் இருந்து ஒரு கடிதத்தை அவன் எடுத்தான். பள்ளி ஆசிரியர்கள் திட்டியதால்தான் தான் தற்கொலை செய்துகொண்டதாக அதில் உள்ளது. பத்திரிகைகளுக்கு அதை கொடுத்துள்ளனர். பத்திரிகையாளர்களுக்கு பிறகு காவல்துறையினரும் வந்துள்ளனர். இயற்பியல் ஆசிரியர் மணிவண்ணன் தனது அனுதாபத்தை தெரிவிக்க வீட்டுக்கு வந்துள்ளார். அவரிடம் சீனிவாசனின் தற்கொலை குறிப்பை அவரது மூத்த சகோதரன் காண்பித்துள்ளான்.

- அதை படித்த மணிவண்ணன், “சீனிவாசன் எனது பெயரையும் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளான். ஆனால், நான் காரணம் அல்ல. தயவு செய்து எனது பெயரை அழித்துவிடுங்கள். நான் மற்றவர்களையும் அழைத்துவருகிறேன். இதை பெரிய பிரச்சனை ஆக்காதீர்கள்” என்றார்.

- அதன்பிறகு இயற்பியல் ஆசிரியர் அவரது மனைவியோடு வந்தார். அவரது மனைவி “எனது கணவர் இதுபோல செய்யமாட்டார். அவரது பெயரை அழித்துவிடுங்கள்” என கேட்டுக் கொண்டார். அதன்பிறகு சீனிவாசன் அப்பாவும் சொந்தக்காரர்களும் காவல் நிலையம் சென்றனர். ஆசிரியர்கள் மீது புகார் கொடுத்தனர். புகாரை பதிவு செய்யும் முன் “தற்கொலையாக இருந்தால் அதை எங்களுக்கு தெரிவிக்காமல் ஏன் எரித்தீர்கள்? என காவல்துறையினர் கேட்டனர். அதன்பிறகுதான் IPC 306ல் பதிவு செய்யப்பட்டது. தற்கொலைக்கு தூண்டியதாக ஆசிரியர்கள் மீது புகார் பதியப்பட்டது.

- அடுத்த நாளில் (20.6.2011) பள்ளி மாணவர்கள் சீனிவாசனின் சாவுக்கு காரணமான ஆசிரியர்கள் மீது நடவடிக்கை கோரி போராட்டம் நடத்தினர். காவல்துறை மாணவர்களிடம் குற்றம் சாட்டப்பட்டவர்களை கைது செய்வதாக உறுதி அளித்தது. பிறகு மாணவர்கள் பள்ளி திரும்பினர்.

- சீனிவாசனின் பெற்றோர் பள்ளிக்குள் என்ன நடக்கிறது என்று காண சென்றனர். போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டு இருந்ததால் பள்ளிக்குள் போக முடியாமல் திரும்பினர். கணித ஆசிரியர் கைது செய்யப்பட்டார். சேலம் சிறையில் உள்ளார். மற்ற மூன்று ஆசிரியர்களும் உயர்நீதிமன்றத்திலிருந்து முன்பிணை பெற்றுள்ளனர்.

**பாதிக்கப்பட்டோர் மற்றும் நேரில் பார்த்தோர் சாட்சியங்கள்:**

திருமதி. விமலா. சீனிவாசனின் தாயார்.
திரு. எம். சேகர். சீனிவாசனின் அப்பா
திரு. எஸ். சத்யமூர்த்தி சீனிவாசனின் அண்ணன்.
திரு. விஸ்வநாதன் – பெற்றோர் ஆசிரியர்கள் தலைவர்
திரு. ரவிச்சந்திரன் – காவல்துறை ஆய்வாளர், மல்லூர்
திரு. எம். ராகுல் (பெயர்மாற்றப்பட்டுள்ளது) சீனிவாசனின் நண்பன்
திரு. ராஜராஜன் – CEO சேலம் மாவட்டம்
திரு. மகரபூசணம் – ஐஏஎஸ், மாவட்ட ஆட்சியர், சேலம்
திரு. ராமமூர்த்தி தமிழ் ஆசிரியர், அரசு மேல்நிலைப்பள்ளி, பனைமரத்துபட்டி,

**விமலா, சீனிவாசனின் அம்மா:**

என் பெயர் விமலா. எனது கணவர் பெயர் எம்.சேகர் நாங்கள் நிலவரப்பட்டியில் வசிக்கிறோம். எனக்கு மூன்று குழந்தைகள். மூத்தவள் பெயர் சங்கீதா. மூன்று வருடங்களுக்கு முன்பாக திருமணமாகி மும்பையில் இருக்கிறாள். அடுத்த பையன் பெயர் சத்யமூர்த்தி. ஒரு ஆட்டோ மொபைல் கம்பெனியில் மெக்கானிக்காக இருக்கிறார். மூன்றாவது பையன்தான் சீனிவாசன். பனைமரத்துபட்டி மேல்நிலைப் பள்ளியில் +2 படித்து வந்தான். அவன் இப்போது இல்லை. அவனுக்கு 18 வயது. அவன் சாவுக்கு காரணம் வாத்தியார்கள்தான். அவமானப்படுத்தி மனம் காயம்படும்படி வாத்தியார்கள் நடந்து கொண்டுள்ளனர். சீனிவாசன் அறிவான பையன். குடும்ப கஷ்டம் தெரிந்து நடந்துகொள்வான். கோடை விடுமுறைகளில் முத்தையாம்மாள் பாலிடெக்னிக்கில் நிறைய போட்டிகள் பயிற்சிகளில் அவன் பங்கேற்றுள்ளான். அவன் ஒரு நிமிடம் கூட வீணாக்கமாட்டான். 10வது வரை தாசநாயக்கன்பட்டியில் படித்தான். 10வது வகுப்பில் 409 மதிப்பெண் எடுத்தான்.

+2வில் நல்ல மதிப்பெண் கிடைக்கிற பள்ளி என சொல்லித்தான் பனைமரத்துபட்டி பள்ளியில் சேர்ந்தான். அங்கே சேர்ந்தும் எனது கணவருக்கு ஒரு விபத்து நடந்தது. அதனால் அவன் பள்ளியில் இடையில் நின்றுவிட்டு வேலைக்கு போனான். பிறகு மறுபடி பள்ளிக்கு போயி நன்றாக படித்தான். 15.6.2012 அன்று விடுமுறைக்கு பிறகு திறக்கப்பட்டது. 15 மற்றும் 16.6.2011 இரு நாட்கள் அவன் சகஜமாக பள்ளி சென்று வந்தான். 17.6.2011 வெள்ளிக்கிழமை மாலை 4 மணி அளவில் வந்தான். எதையோ எழுதினான். எனக்கு படிக்க தெரியாது. எனவே, நான் அதை தெரிந்து கொள்ளவில்லை. அதன்பிறகு அவன் தூங்கிவிட்டான். மாலையில் தேநீர் கொடுக்கச் சென்றுபோது அதை வைத்துவிட்டு போகச் சொல்லிவிட்டான். இரவு 8 மணி அளவில் அவனது அப்பா வந்தார். அவனை எழுப்பி சாப்பிட வைத்தார். அவன் பெயருக்கு ஏதோ சாப்பிட்டான். பிறகு போய் தூங்கிவிட்டான். காலையில் நான் வேலைக்கு போய்விட்டேன். மதியம் 2 மணி அளவில் வீடு திரும்பினேன். என் மகனை தேடினேன். அவன் எனது சேலையை எடுத்து வீட்டுக்கூரையில் இருந்த மூங்கிலில் கட்டி தூக்கில் தொங்கினான். நான் அதிர்ச்சியில் கத்தி கதறி மயக்கமாகிவிட்டேன். அதை கேட்டு பக்கத்து வீட்டுக்காரர்களும் எனது உறவினரும் வந்தனர். அவனை கீழே இறக்கினர். அவனது அப்பாவுக்கும் அண்ணனுக்கு செய்தி அனுப்பினர். மற்ற சொந்தக்காரர்களுக்கும் சொல்லி அனுப்பிவிட்டு மாலை 5 மணி அளவில் அவனது உடலை எரித்துவிட்டனர்.

மறுநாள் தற்கொலை குறிப்பு ஏதாவது இருக்கா என தேடினோம். ஆசிரியர்கள் மீது புகார் எழுதிய கடிதம் கிடைத்தது. அதனை பத்திரிகையாளர்களிடம் தெரிவித்தோம். இதை கேள்விபட்டு வந்த காவல்துறையினர் ஆசிரியர்களையும் எங்களையும் விசாரித்தனர். சும்மா ஒரு சந்தேகம் கேட்டதுக்காக, எனது பையன் ஆசிரியர்கள் வகையில்லாத வார்த்தைகளால் திட்டியுள்ளனர். அவனது சாவுக்கு என்ன காரணம்.

மறுநாள் 18.6.2011 நாங்கள் அவனது தற்கொலை குறிப்பை பார்த்ததும், அதற்பிறகுதான் சீனிவாசனின் தற்கொலைக்கு ஆசிரியர்கள் தான் காரணம் என்பது தெரியவந்து. அதன்பிறகு நாங்கள் அதனை ஊடகங்களுக்கு தெரிவித்தோம். அதன்பிறகு காவல்துறையினர் வந்து எங்களையும் ஆசிரியர்களையும் விசாரித்தனர். அதேநாளில் நானும் எனது நெருங்கிய சொந்தக்காரர்களும் மல்லூர் காவல்நிலையம் சென்று ஆசிரியர்கள் மீது புகார் அளித்தோம். (கணிதம், இயற்பியல், தமிழ் மற்றும் வேதியியல் ஆசிரியர்கள்) 27.6.2011 அன்று முதலமைச்சருக்கும் நாங்கள் புகார் கடிதத்தை அனுப்பினோம்

**திரு. விஸ்வநாதன் (பெற்றோர் – ஆசிரியர்களின் தலைவர்)**

எனது பெயர் விஸ்வநாதன். நான் பனைமரத்துபட்டி அரசினர் பள்ளியின் பெற்றோர் – ஆசிரியர் சங்கத்தின் முன்னாள் தலைவர், செய்தித்தாள்களில் இந்த செய்திகளை படித்ததும் நான் தலைமை ஆசிரியரை தொடர்பு கொண்டு விசாரித்தேன். தேவைப்பட்டால்

அவ்வப்போது நாங்கள் கூட்டம் நடத்துவோம். தற்போது அரசியல் கட்சி ஆட்சி மாறிவிட்டதால் நான் பள்ளி விவகாரங்களில் தலையிடுவதில்லை. நான் தலைவராக இருந்தபோது சைக்கிள் ஸ்டாண்டும், பல வகுப்பறைகளும் கட்டினேன். அந்த கணித ஆசிரியரைப் பற்றி நிறைய புகார்கள் என்னிடமும் வந்தன.

**ராகுல் (சீனிவாசனின் நண்பன்)** (பெயர் மாற்றப்பட்டுள்ளது)

என் பெயர் ராகுல் நான் பனைமரத்துபட்டி அரசினர் மேல்நிலைப் பள்ளியில் +2 படிக்கிறேன். சீனிவாசன் எனது நெருங்கிய நண்பன். 16.6.2011 அன்று எவ்வித விளக்கமும் தராமல் கணித ஆசிரியர் போர்டில் ஒரு கணிதத்தை எழுதி அது 6 மார்க் கேள்விக்கு வரக்கூடியது. எனவே அதை காப்பி எடுத்துக் கொள்ளுங்கள் என்றார். சீனிவாசன், ''அந்த கணிதத்தை புரிந்து கொள்ள இயலவில்லை. அதை விளக்குங்கள் என கேட்டதற்கு அவனைதிட்டினார். ''நான் சொல்வதை மட்டும் செய்'' என்றார். அவர் வகுப்பறையில் விட்டு போனதும் மற்ற மாணவர்களும் தங்களுக்கு புரியவில்லை என்றனர். எனவே, வகுப்பு மாணவர்களும் எல்லோரும் கையெழுத்து போட்டு ஒரு புகார் மனுவை தலைமை ஆசிரியரிடம் தர தயார் செய்தோம். மறுநாள் நாங்கள் இயற்பியல் தேர்வு எழுதிக் கொண்டு இருந்தபோது சீனிவாசனை ஆசிரியர்கள் அழைத்து வரச் சொல்லியிருந்தார்கள். நான் திரும்ப வகுப்புக்கு வந்தபோது ஆசிரியர்கள் என்ன சொன்னார்கள் என கேட்டோம். சீனிவாசன் ''என்னை தொந்தரவு செய்யாதீர்கள்'' என்றான். தலைமை ஆசிரியரிடம் அனுமதி பெற்றுக்கொண்டு மாலை 4 மணி அளவிலேயே வீட்டுக்கு போய்விட்டான்.

**திரு. ராமமூர்த்தி, தமிழாசிரியர், பனைமரத்துபட்டி மேல்நிலைப் பள்ளி**

நான் இந்தப் பள்ளியில்தான் படித்தேன். இதிலேயே ஆசிரியராக பணிபுரிகிறேன். சீனிவாசனின் தற்கொலை என்னை மிகவும் அதிர்ச்சி அடைய வைத்தது. என்னை பொறுத்தவரை நான் எந்த தவறும் செய்யவில்லை. நான் எந்த மாணவனையும் திட்டவில்லை. மாவட்ட கல்வி அதிகாரி என்னிடம் விசாரணை நடத்தினார். அவரிடம் நான் எல்லா விளக்கங்களையும் சொல்லிவிட்டேன். இந்த சம்பவம் பற்றி நான் எதுவும் உங்களிடம் சொல்ல விரும்பவில்லை.

## அதிகாரிகளின் கருத்து:

**திரு. ராஜராஜன், முதன்மை கல்வி அலுவலர், சேலம்:**

ஜூன் 20, 2011 அன்றைய நாளிதழ்களில்தான் நான் இந்த சம்பவத்தை பார்த்தேன். உடனே பள்ளிக்குச் சென்று விசாரணை நடத்தினேன். தலைமை ஆசிரியர், ஆசிரியர்கள், சில மாணவர்களை தனித்தனியாக விசாரித்தேன். தலைமை ஆசிரியர், அவரிடம் கணித ஆசிரியர் பற்றி சில மாணவர்கள், புகார் தந்து இருப்பதாக கூறினார். இதில் கணித ஆசிரியர் செந்தில்குமாரின் பாடம் நடத்தும் முறை மோசமாக இருப்பதாக புகார் இருப்பதாக சொன்னார். மாணவர்களை சமாதானப்படுத்தி வகுப்பறைக்கு அனுப்பியதாகவும் 17.6.2011 அன்று மாலை 3 மணி அளவில் சீனிவாசன் அனுமதி பெற்று முன்னதாகவே பள்ளியைவிட்டு போய்விட்டதாகவும் சொன்னார். சனிக்கிழமை, ஞாயிறுக்கிழமை இரு நாட்கள் விடுமுறை என்பதால் அவனது தற்கொலை செய்தியை உடனே தெரிந்து கொள்ள முடியவில்லை. 20.6.2011 திங்கள்கிழமை செய்தித்தாள் மூலமாகத்தான் செய்தியை தெரிந்து கொண்டதாக அவர் தெரிவித்தார்.

நான் போனபோது சம்மந்தப்பட்ட 3 ஆசிரியர்களும் பள்ளிக்கு வரவில்லை. மற்ற ஆசிரியர்களை நான் விசாரித்தேன். அந்த விசாரணை அறிக்கையை பள்ளிக்கல்வி இயக்குனருக்கு அனுப்பி வைத்தேன். இது சம்மந்தமாக நான் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் அனைத்தையும் எடுத்துவிட்டேன். கணித ஆசிரியர் செந்தில்குமார் தற்காலிக பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார். மற்ற மூன்று ஆசிரியர்களும் உயர்நீதிமன்றத்தில் பிணை பெற்றுள்ளனர். மாணவர்களை எவ்வாறு ஆசிரியர்கள் கையாள வேண்டும் என்பதற்கான சுற்றறிக்கையை சேலம் முழுவதும் அனுப்புவதற்காக தயார் செய்துள்ளேன்.

**திரு. பிரசன்ன குமார் RDO:**

நான் செய்தித்தாளின் மூலம்தான் இதை தெரிந்துகொண்டேன். இந்த விவகாரத்தை விசாரிக்குமாறு கேட்டுக்கொள்ளும் எந்தவித குறிப்பும் காவல்துறையிடம் இருந்து எனக்கு வரவில்லை. எனது மேல் அதிகாரிகளும் இதனை விசாரிக்குமாறு என்னை கேட்டுக்கொள்ளவில்லை. எனக்கு தெரிந்தவரை குற்றவியல் சட்ட எண் 174ன்கீழ் இந்த வழக்குப்பதிவு செய்யப்படவில்லை. எனவே, நான் இதனை விசாரிக்கவில்லை.

**கிராம நிர்வாக அதிகாரி VAO:**

இந்த இடத்தில் நான் ஒன்றரை வருடகாலமாக வேலை செய்கிறேன். இந்த விவகாரம் தனக்கு காவல்துறையினர் மூலமாக தெரியவந்தது. அந்த மாணவன் சனிக்கிழமை (18.6.2011) அன்று தற்கொலை செய்துள்ளான். யாருக்கும் தெரிவிக்காமல் அவனது பெற்றோர் உடலை எரித்துவிட்டனர். மறுநாள் (19.6.2011) அவனது பள்ளிக்கூட பையில் தற்கொலை குறிப்பு இருந்துள்ளது. அதில் தனது சாவுக்குக் காரணம் ஆசிரியர்கள்தான் என

அவன் எழுதி இருந்தான். உடனே அவர்கள் புகார் கொடுக்க காவல் நிலையம் போனார்கள். காவல் நிலையத்தில் இருந்து எனக்கு போன் செய்து அவர்கள் வர உள்ளதை தெரிவித்தனர். நாங்கள் போய் அவன் தற்கொலை செய்து கொண்ட இடம், எரிக்கப்பட்ட இடம் எல்லாவற்றையும் பார்த்தோம். கிராம அதிகாரி என்ற முறையில் என்னிடமிருந்து ஒரு புகாரை காவல்துறையினர் கேட்டனர். நான் "அந்த மாணவன் இறந்த நாள், நேரம், அவர்கள் எனக்கு கூட தெரிவிக்காமல் எரித்துவிட்டது உள்ளிட்ட விவரங்களை எழுதி நான் ஒரு அறிக்கையை காவல்துறைக்கு கொடுத்தேன். அதற்கு பிறகு நடந்ததை செய்திதாள்களில் அறிவீர்கள்.

### திரு. ரவிச்சந்திரன், மல்லூர் காவல்நிலைய ஆய்வாளர்:

தற்கொலை செய்து சீனிவாசனின் தந்தை சேகர் 19.6.2011 அன்று காவல்நிலையத்துக்கு சீனிவாசனின் தற்கொலை கடிதத்தோடு வந்து புகார் தந்தார். சீனிவாசனின் கடிதத்தில் தனது சாவுக்கு காரணம் என ஆசிரியர்கள் நான்கு பேரின் பெயரை குறிப்பிட்டு இருந்தான். இதன் அடிப்படையில் நாங்கள் விசாரித்தோம். சீனிவாசனின் உடல் எரிக்கப்பட்டுவிட்டதால் அதை போஸ்ட் மார்ட்டம் செய்ய முடியவில்லை. பள்ளியில் விசாரித்தவரையில், 2008–09ல் அவன் பள்ளியில் +1 சேர்ந்துள்ளான். பிறகு கொஞ்ச நாள் இடையில் நின்றுள்ளான். பிறகு மீண்டும் 2009–10ல் சேர்ந்துள்ளான். அவன் எளிதில் உணர்ச்சி வசப்படுவான், ஆனால், நல்லா படிப்பான்.

இந்த வழக்கு JM6 சேலம் மாவட்ட நீதிமன்றத்தில் உள்ளது. தற்கொலை செய்து கொண்ட மாணவனை தனக்கு தெரிவிக்காமல் எரித்துவிட்டார்கள் என VAO சீனிவாசனின் பெற்றோர் மீது புகார் கொடுத்துள்ளார். கணித ஆசிரியர் செந்தில்குமார் சேலம் சிறையில் உள்ளார். மற்ற இரு ஆசிரியர்கள் உயர்நீதிமன்ற முன்ஜாமீன் பெற்றுள்ளனர். ஒரு தலைமறைவாக உள்ளார்.

### திரு. மகர பூசணம்: மாவட்ட ஆட்சித் தலைவர் சேலம்

செய்தி தாள்கள் மூலமாகவே இந்த சம்பவத்தை அறிந்தேன். மாவட்ட கல்வி அதிகாரி மூலம் எல்லா விவரங்களையும் சேகரித்தேன். இப்போதெல்லாம் மாணவர்களை எதுவும் செய்ய முடியவில்லை. மாணவர்களின் நல்வாழ்வுபற்றி ஆசிரியர்களும் கவலைப்படுவதில்லை. நான் கூட ஆசிரியராக இருந்தவன்தான். தற்போது மாவட்ட ஆட்சியராக உள்ளேன். இந்த விவகாரம் தொடர்பாக ஒரு மாவட்ட ஆட்சியராக என்ன செய்ய வேண்டுமோ அதையெல்லாம் செய்துள்ளேன்.

### கண்டறிந்தவை:

- உண்மை அறியும் குழு தான் சேகரித்த முக்கிய தகவல்களில் இருந்து பனைமரப்பட்டி அரசு மேல்நிலைப் பள்ளி மாணவன் சீனிவாசன் 18.6.2011 அன்று ஆசிரியர்களால் தரக்குறைவான முறையில் திட்டப்பட்டு படுமோசமாக மிரட்டப்பட்டுள்ளார். என முடிவுக்கு வருகிறது.
- சீனிவாசன் திறமையானவன். பல போட்டிகளில் பங்கேற்று பரிசுகள் வென்றுள்ளான்.
- கணிதம், இயற்பியல், தமிழ், வேதியியல் ஆசிரியர்கள் சீனிவாசனின் தற்கொலை முடிவுக்கு நேரடி காரணமாக இருந்துள்ளார்கள். அவர்கள் மீது இந்திய தண்டனைச் சட்டம் 306 (தற்கொலைக்கு தூண்டுதலின்)கீழ் மல்லூர் காவல்நிலைய ஆய்வாளர் ரவிச்சந்தரனால் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.
- கணித ஆசிரியர் செந்தில்குமார் சேலம் 6வது நீதிமன்ற ஒருவர் முன் ஆஜர்படுத்தப்பட்டு உள்ளார். சேலம் மத்திய சிறையில் 15 நாட்களுக்கு அடைக்கப்பட்டுள்ளார்.
- பெற்றோர் – ஆசிரியர் சங்க கூட்டங்கள் முறையாக பனைமரத்துபட்டி மேல்நிலைப்பள்ளியில் நடக்கவில்லை. பெற்றோர் ஆசிரியர் சங்க முன்னாள் தலைவர் வாக்குமூலம்படி, கணித ஆசிரியர் மீது தற்கொலை பல புகார்கள் தெரிவிக்கப்பட்டு உள்ளன.

### முடிவுகள்:

இந்திய உச்சநீதிமன்றம் 2001ல் பள்ளிகளில் உடல் மற்றும் மன ரீதியான எவ்வித தண்டனைகளும் இருக்கக்கூடாது என தடை செய்துள்ளது. ஆனால், அது இன்னமும் நடைமுறையில் உள்ளது. இந்திய பள்ளிகளில் உடல் மற்றும் மனரீதியான தண்டனை என்பது பொதுவானதாக இருக்கிறது. சமீப ஆண்டுகளில், உடல் மற்றும் மனரீதியாக தண்டனை கொடுத்த பல வேதனையான சம்பவங்கள் பெற்றுள்ளன.

உடல் மற்றும் மன ரீதியான வேதனைகளால் குழந்தைகள் அலறும் சம்பவங்கள் இருக்கின்றன. பெரும்பாலான குழந்தைகள் பள்ளிகளில் இருப்பதே அதிருஷ்ட வசமானதாக இருக்கிறது. அவர்களை பள்ளியைவிட்டு துரத்தும் விதமாக அன்றாட நிகழ்வு இருப்பது என்பது துரதிருஷ்ட வசமானது. உடல் ரீதியான தண்டனை மட்டும் அல்ல. வார்த்தைகளால் அவமானப்படுத்துவதும் இழிவுபடுத்துவதும், சுயமரியாதையை கெடுப்பதும்

வன்முறையான நடவடிக்கையே என இந்த நடைமுறைக்கு எதிராக குரல் எழுப்புபவர்களால் நிரூபிக்கப்பட்டு உள்ளது.

## பரிந்துரைகள்

- இந்திய தண்டனைச் சட்டம் (IPC) பிரிவு 305, 323, 109 ன் படி சீனிவாசனைத் தற்கொலைக்கு தூண்டிய குற்றத்திற்காக மற்ற ஆசிரியர்களும் உடனடியாக கைது செய்யப்பட்டு அவர்கள் மீது தகுந்த குற்ற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
- சீனிவாசனின் இழப்பிற்காக அவனின் குடும்பத்தாருக்கு தமிழக அரசு உடனடியாக 10 லட்சம் ரூபாய் இழப்பீடு வழங்க வேண்டும்.
- பள்ளிகளில் குழந்தைகளை இழிவாக நடத்துதல், கொடூரமான தண்டனைகளுக்கு உட்படுத்தப்படுதல் மற்றும் சந்தேகப்படும்படியான காரணங்களால் பள்ளியில் நிகழும் ஒவ்வொரு குழந்தையின் மரணத்திற்கும் பள்ளி கல்வித் துறை முழு பொறுப்புடையதாகும். எனவே பள்ளிக் கல்வித் துறை, சுயநிதி, தனியார் பள்ளிகள் உட்பட அனைத்துப் பள்ளிகளிலும் நடைபெறும் மனித உரிமை மீறல்களை கண்காணித்து அவ்வாறு நடைபெறும் பள்ளி நிர்வாகத்தின் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும்.
- தமிழக அரசு உடனடியாக வழக்கறிஞர்கள், மனித உரிமை செயல்பாட்டாளர்கள், பெற்றோர்கள் மற்றும் பள்ளிக் கல்வித்துறையில் உள்ள அரசு அலுவலர்கள் அடங்கிய மனித உரிமை பாதுகாப்புக் குழுவை பள்ளிகளில் அமைத்து அங்கு நடைபெறும் வன்முறைகளை கண்காணித்து குழந்தைகளின் உரிமைகள் பாதுகாக்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும்.
- அனைத்து பள்ளிகளின் பாடத்திட்டத்திலும் குழந்தை உரிமை மீறல்கள் குறித்த செய்முறைப் பாடத்திட்டத்தோடு மனித உரிமை பற்றிய ஒரு பாடப்பிரிவு இணைக்கப்பட வேண்டும். அனைத்து ஆசிரியர்களும் மனித உரிமைகள் குறித்த விழிப்புணர்வைப் பெற்றிருக்க வேண்டும். மேலும் ஆசிரியர் பயிற்சி மையங்களிலும் இப்பாடத்திட்டம் உள்ளடக்கப்பட வேண்டும்.
- பள்ளி வளாகத்திற்குள்ளோ அல்லது பள்ளியின் சுற்றுப்புறத்திலோ நடைபெறும் எந்த ஒரு குழந்தையின் மரணமோ அல்லது தற்கொலையோ சந்தேகத்திற்குரிய மரணமாக கருதப்பட்டு அதன்படியே விசாரணை நடத்தப்பட வேண்டும். இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 306ன் படி சம்பந்தப்பட்ட பள்ளியின் ஆசிரியர் மற்றும் தலைமை ஆசிரியர் மீது குழந்தையின் மரணம்/ தற்கொலைக்கு தூண்டிய காரணத்திற்காக சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
- பள்ளிகளில் நடைபெறும் குழந்தை உரிமை மீறல்களை கண்காணிப்பதற்காக NCPCR, NHRC, SHRC, பெண்கள் ஆணையம் போன்றவை ஒரு தனி பிரிவை ஏற்படுத்த வேண்டும்.
- குழந்தைகள் தான் படிக்கும் பள்ளியில் ஆசிரியர்களினால் வன்முறைக்கு உள்ளாக்கப்படுவது, மரணிப்பது போன்றவற்றைத் தடுக்க அனைத்துப் பள்ளிகளிலும் பயிற்சி பெற்ற குழந்தை நல ஆலோசகர்கள் (Counsellors) நியமிக்கப்படவேண்டும். அவர்கள் குழந்தை உரிமைப் பாதுகாவலர்களாகவும் இருக்க வேண்டும்.
- குழந்தைகளுக்கு எதிரான பெரும்பான்மையான வன்முறைகள் பள்ளி வளாகத்திலும் பள்ளி ஆசிரியர்களாலுமே நடைபெறுகிறது. பள்ளி கல்வித் துறை எப்பொழுதெல்லாம் குழந்தைகள் மீதான வன்முறைகள் நடைபெறுகிறதோ உடனே குற்றவாளிகள் மீது சட்டரீதியாகவும் நிர்வாக ரீதியாகவும் நடவடிக்கை எடுப்பதுடன் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு தகுந்த ஆலோசனையும் மறுவாழ்விற்கான வழியையும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.
- குழந்தைகள் மீதான துன்புறுத்தல் மற்றும் பாலியல் ரீதியான வன்முறைகளை குழந்தைகள் உடனடியாக வெளிப்படுத்த பள்ளி வளாகத்திற்குள்ளோ அல்லது வெளியிலோ குறைதீர்ப்பு மையத்தை ஏற்படுத்த வேண்டும். மனித உரிமை ஆணையமும் குழந்தை உரிமை மீறல்களை கண்காணிக்க ஒத்த அமைப்பை ஏற்படுத்தி அதன்மூலம் பாதிக்கப்பட்ட குழந்தைகள் ஆணையத்தின்முன் தங்களுக்கேற்பட்ட பாதிப்பை வெளிப்படுத்த அனுமதியளிக்கப்பட வேண்டும்.
- குழந்தைகள் மீதான கல்விச் சுமைகளைக் குறைக்க பல்வேறு குழுக்கள், ஆணையங்கள் அளித்த பரிந்துரைகளை அனைத்துப் பள்ளிகளிலும் உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டும்.
- அனைத்துப் பள்ளிகளும் பெற்றோர் ஆசிரியர் கூட்டத்தை தவறாமல் கூட்ட வேண்டும். மேலும் பெற்றோர் ஆசிரியர் குழுவில் உள்ள உறுப்பினர்கள் குழந்தைகள் மற்றும் ஆசிரியர்களின் நடவடிக்கைகளை கவனித்து தகுந்த மாற்றங்களைச் செய்யவேண்டும்.

**– இக்கள ஆய்வு TNCRPN, HRF, Children Watch, CASSA, LAW TRUST, VRDP, CACL TN & Py ஆகிய தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் இணைந்து நடத்தப்பட்டது.**

# ‘‘மோதல் சாவு’’களும் குழந்தைகளின் மௌனம் சொல்வதும்

–ப்பாரா பரூக்கி

டில்லியிலுள்ள பாட்லா ஹவுஸ் பகுதியில் வாழும் சிறுபான்மை இனத்து குழந்தைகளிடம் ஒரு நேர்காணல் தொகுப்பு நடத்தப்பட்டது. செப்டம்பர் 2008ல் இதன் மூலம் பெருமளவில் தள்ளி வைக்கப்படுதல், பயம் மற்றும் குழப்பம் போன்றவைகள் குழந்தைகளிடம் வெளிப்பட்டுத் தெரிந்தன. இவை மேலும் குறிப்பிட்டு தெரிவிப்பதென்னவென்றால் நம் பாடப்புத்தகங்கள் மற்றும் பாடத்திட்டங்களில் நம் நாட்டின் பல்வேறுபட்ட கலாச்சார மற்றும் சமய வேறுபாடுகளின் அடிப்படை உணர்வுகளை நுணுக்கமாக புரிந்துகொண்டு, அவை உருவாக்கப்படுவதன் மூலம் குழந்தைகள் மற்றும் அவர்தம் ஆசிரியர்களின் உறவு பள்ளிகளில் மேம்படலாம்.

செப்டம்பர் 2008ல் ஜாமியா நகர், முஸ்லீம்கள் அதிகமாக வாழும் டில்லியிலுள்ள ஒரு பகுதியில் இரண்டு முஸ்லீம் மாணவர்கள் ‘‘தீவிரவாதிகள்’’ என்று குற்றஞ் சாட்டப்பட்டதன் அடிப்படையில் போலீசால் கொல்லப்பட்டதோடு போலீஸ்களுடன் நடந்த ‘‘மோதல்சாவு’’ தன்னில் ஒரு சிலர் கைது செய்யப்பட்டனர். இது முஸ்லீம் வகுப்பு மக்களால் அநீதியாகக் கருதபட்டதுடன் அவர்களைக் குறிவைத்துத் தாக்கும், பிற மதத்தினர் செய்கையாகவும் கருதப்படுகிறது. அப்பகுதி மக்களிடம் காணப்படும் பயம் எளிதில் புரிந்து கொள்ளக் கூடியதாய் இருக்கிறது. அங்குள்ள குழந்தைகள் எக்கச்சக்கமான பயம் மற்றும் மிகு துக்கத்தால் சொல்ல முடியாமல் அல்லாடுகின்றனர். பதினைந்து வயதுப் பெண்ணொருத்தி அன்னே பிராங்கஸ் நாட்குறிப்பு (Anee Franks Diary) புத்தகத்தைப் படித்துவிட்டு மனமுடைந்த நிலையில் கூறினார்; ‘‘முஸ்லீம்கள் தற்போதெல்லாம் நாஜிக்களிடம் யூதர்கள் ஒளிந்து வாழ்ந்ததைப் போல ஒளிந்து வாழத்தான் வேண்டும்போலிருக்கிறது’’ என்று.

வரலாற்று ஆசிரியர்கள், சமூகவியாலாளர்கள் மற்றும் கல்வியாளர்கள் சமூக அறிவியல் துறையை விரிவான பார்வையுடன் நோக்கியும் கூட சிறுபான்மையினர் அல்லது ஒதுக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்தம் குழந்தைகள், இப்படிப்பட்ட நிகழ்வுகளில் எப்படி நடந்து கொள்கிறார்கள் அல்லது தம்மை வெளிப்படுத்திக் கொள்கிறார்கள் என்பதுபற்றி எனக்குத் தெரிந்த அளவில் மிகக் குறைவாகத்தான் ஆய்வு செய்திருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். எனவே, பாட்லா ஹவுஸ் ‘‘மோதல் சாவு’’ மற்ற குழந்தைகள் என்ன நினைக்கிறார்கள் என்பதை என் கட்டுரையான இதன் முதல் பகுதியில் பதிவு செய்திருக்கிறேன். அதில் குழந்தைகள், பள்ளிகள், பாடத்திட்டங்கள் பள்ளி நடைமுறைகள் குழந்தைகளின் மனதை பாதித்து சிந்திக்க வைத்து தம் எதிர்காலத்தை கணிக்கச் செய்கின்றது என்பதையும் ஆய்வு செய்திருக்கிறேன். இரண்டாம் பகுதி பள்ளிகளைப் பற்றியும் அவை பாடத்திட்டம் கற்பிக்கும் முறை பள்ளிகளின் தினசரி நடைமுறை போன்றவை எப்படி ஒன்றுக் கொன்று தொடர்புடையதாய் இருக்கின்றன என்பதையும் அவை எங்ஙனம் முஸ்லீம் குழந்தைகளை தள்ளி வைக்கக்கூடும் என்பதனை பற்றியும் எழுதியிருக்கிறேன். நம் பள்ளிகள் எப்படி ஒரே மாதிரியாய் நடைபெறுவதன் மூலம் முஸ்லீம் குழந்தைகளை யோசிக்க வைக்கின்றது, நம் கலாச்சார சிந்தனைகள் வேடிக்கைப் பொருளாய் மாறிவிடுகின்றன என்று பார்க்கப்படுகிறது. இதில் குழந்தைகள் பெரிய மனிதர்களைப் போலவே தம் அன்றாட வாழ்வு நடைமுறைகள் தரும் அனுபவங்கள் என்னும் கண்ணாடி வழியாகவே தாம் காணும் பெரிய நிகழ்ச்சிகளை அல்லது சமூக நிகழ்வுகளைப் பார்க்கின்றனர் என்று தெரிகின்றது.

மூன்றாவது பிரிவு இதற்கான தீர்வுகளை ஆய்வு செய்கிறது. பொதுநல அல்லது மக்கள் மன்றங்கள் அல்லது ‘‘பொதுவிசாரணை’’ எப்படி குழந்தைகளின் அனுபவ பங்கேற்பு மனங்களில் நீதி கிடைக்கும் எனும் நம்பிக்கையை விதைக்கின்றன என்பதையும் குழந்தைகள் எப்படி அரசியலமைப்புச் சட்டம் அவர்கள் வாழ்க்கை, மோதல் சாவுகள் போன்றவற்றை இணைத்துப் பார்க்கின்றனர் என்பதை தெளிவுபடுத்தப் பார்க்கின்றது. எனவே, குழந்தைகள் காக்கும் மௌனம், அவர்களைப் பேச வைத்தல் என்னும் நிகழ்வுப் போக்கின் வழியாய் ஒரு தனி நிகழ்வு எப்படி வாழ்வின் நிதர்சனங்களாகி கருத்துருக்களை வடிவங்களாக வைக்கிறதென்பதைக் காணலாம். கல்வி என்னும் அரசியல் நிலைப்பாட்டை ஆய்வு செய்வதன் மூலம் தினசரி அரசியலை கல்வியின் வாய்ப்பாகவும் பார்க்கப்படுகின்றது.

### 1) குழந்தைகள் கூறுவதை கவனித்தல்:

அந்த நிகழ்வு மற்றும் அது தொடர்ந்த பிரச்சனைகள் போன்றவற்றை குழந்தைகள் எப்படி நினைத்து கொண்டிருக்கிறார்கள் என்பதை புரிந்துகொள்ள முஸ்லீம்

ஆண் குழந்தைகள் மற்றும் பெண் குழந்தைகள் என 26 குழந்தைகளுடன் கலந்துரையாடினேன். இவர்கள் அனைவரும் டில்லியிலுள்ள ஜாமியா நகர் மற்றும் அதற்கு பக்கத்தில் வசிப்பவர்கள், இந்தக் கலந்துரையாடல் இருவர், மூவர் மற்றும் நால்வர்கள் அடங்கிய குழுக்களில் நடந்தது. இரு குழுக்களில் பேசிய இருவர் மற்றும் மூவர் குழு குழந்தைகள் ஜாமியா நகரிலிருந்து 10 கி.மீ. தொலைவிலுள்ள கான்பூர் என்னுமிடத்தில் வசிப்பவர்கள்.

தேசிய கல்விக்கான ஆய்வு மற்றும் பயிற்சிக்குழு (National Council of Educational Research and Training NCERT)வின் மூலம் பாடப் புத்தகங்கள் தயாரிக்கும்போது 2005–2008ம் வருடங்களில் பல முறை இக்குழந்தைகளை நான் பேட்டி கண்டிருக்கிறேன். அதன் மூலம் அவர்களின் அறிவியல் மற்றும் சமூக அறிவியல் கொள்கைகள் பற்றித் தெரிந்து கொள்ள பல முறை சந்தித்து உரையாடிய பொழுதெல்லாம் எந்தவித தயக்கமும் இன்றி என்னிடம் பேசியிருக்கிறார்கள். கேள்விகள் கேட்டிருக்கிறார்கள்.

ஆனால், இந்த ஆய்வுக்காக அவர்களிடம் பேசியபோது அந்த ‘‘மோதல் சாவு’’ நடந்து ஏறத்தாழ மூன்று மாதகாலம் ஆகியிருந்தது. இவர்கள் அனைவரும் ஆறு முதல் பத்து வகுப்பு ‘‘ஒரு பெரிய புகழ் வாய்ந்த’’ பள்ளியில் படிப்பவர்கள். பத்து முதல் பதினாறு வயதுக்குட்பட்டவர்கள். இவர்களை சிறு சிறு குழுவாக வைத்துதான் பேட்டி கண்டேன். தங்கள் வயதொத்தவர்கள் உடனிருக்கும்போது தைரியமாகப் பேசுவார்கள். ஒருவருக்கொருவர் விவாதித்துக் கொள்வார்கள். சவால் விட்டுக் கொள்வார்கள் என்றும் நினைத்தேன். இந்தக் கட்டுரையின் முதல் பகுதியில் குழந்தைகளின் வெளிப்பாடுகளாக வந்துள்ளவை அனைத்தும் அனைத்துக் குழந்தைகளின் அதாவது 26 குழந்தைகளினுடையது ஆகும். ஒன்றிரண்டு மட்டுமே நேரடியாகச் சொன்னதை மேற்கோள் காட்டப்பட்டிருந்தாலும் கூட குழந்தைகள் இந்துஸ்தானி மற்றும் ஆங்கிலம் கலந்த மொழியில் என்னிடம் பேசினர். இங்கு அவை மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

இந்த கட்டுரைக்காக ஒவ்வொரு குழந்தைக்கும் ஒரு எண் கொடுக்கப்பட்டது. இந்தக் கட்டுரைக்காக குழந்தைகள் வழி புள்ளி விவரங்கள் யாவும் குழந்தைகளின் கருத்து மேம்பாடு மற்றும் வளர்ச்சியைக் குறிக்கிறது என்பது குறிப்பிட்டுச் சொல்லவேண்டிய ஒன்றாகும். இரண்டு பங்கேற்பாளர்கள் அதாவது குழந்தை 1 மற்றும் 9 பேசியவைகள் இக்கட்டுரை முழுவதிலும் மேற்கோள் காட்டப்பட்டு எடுத்தாளப்பட்டுள்ளன. ஏனெனில், அவை மாற்றங்கள் பற்றி சுட்டிக்காட்டுகின்றன என்பதால்.

**பயம், பாதுகாப்பற்ற உணர்வு மற்றும் அவநம்பிக்கை:**

குாந்தைகள் அந்த நிகழ்ச்சியைப் பற்றி நினைக்கும்போது முஸ்லீம்களின் மீது குறி வைத்து நடத்தப்பட்ட அநீதியாகத்தான் அவர்களுக்குத் தோன்றுகிறது. அவர்கள் கூறியது ‘‘ஓ! அந்த ‘‘மோதல் சாவு’’ என்பது உண்மையான ஒன்றல்ல அப்பட்டமான நிச்சயமான பொய்’’ என்பதாகும். இறந்து போன போலீஸ் அதிகாரி பலரால் தியாகி என்று திரித்து சொல்லப்பட்டாலும் அந்தப் பகுதி மக்களும் குழந்தைகளும் அவரை குற்றவாளி என்றுதான் கருதுகின்றனர். தீவிரவாதிகள் என்று சொல்லப்பட்டவர்கள்தான் பாதிக்கப்பட்டவர்கள். குழந்தைகள் கருத்துக்கள் யாவும் முஸ்லீம் அல்லது பிறமக்கள், நண்பர்கள், ஆசிரியர்கள், ஊடகங்கள் சித்தரித்ததற்கு நேர் எதிரானதாக இருந்தது. குழந்தைகளைப் பொறுத்தவரை இவர்களெல்லாம் அரசாங்கம் மற்றும் தேசத்தின் பிரதிநிதிகள். இதுபோன்ற விழிப்புணர்வும் அருகாமையும் ஒருவித அச்சத்தையும் கலவர உணர்வையும் ஏற்படுத்தி உள்ளது. நடக்கக் கூடாதது எது நடந்தாலும் முஸ்லீம்கள் மீது தவறாகத்தான் சந்தேகம் கொள்கிறார்கள் இவர்கள் என்று வருத்தப்படுகின்றனர்.

அவர்கள் பயன்படுத்தும் வார்த்தைகளான எங்களை, நாங்கள் என்பது அவர்கள் சார்ந்துள்ள குழுவினரை சுட்டுவதாய் மட்டுமல்லாது அந்த குழுவினரின் விதியுடன் தம்முடைய எதிர்காலமும் கட்டப்பட்டுள்ளதாக நினைக்கிறார்கள். ஆல்போர்ட் (Allport 1954) கூறுவது போல ‘‘துயரங்களுக்கான வலி நிவாரணி என்பது தம்மைப் போல் துயரப்படும் மக்களோடு தங்களை இணைத்து கொள்வதாகும். அச்சுறுத்தல் என்பது தம்மைப் போன்றவர்களோடு ஒன்றிணைத்துக் கொள்வதன் மூலம் அகலும்’’ குழந்தைகள் நினைக்கிறார்கள், குண்டு வெடிப்பு போன்றவை நிகழும்போது தாங்கள் பலிகடா ஆக்கப்படுவோமோ என்று. அவர்களுடைய கற்பனை பயங்கள் உண்மையான பயங்களோடு சேர்ந்து அவர்களுடைய பதற்றத்தை அதிகரிக்கச் செய்கின்றதெனலாம். ஜாமியா நகரிலிருந்து தூரத்தில் வசிக்கும் இரு குழந்தைகள் குழுவினராலும் அவ்வாறுதான் நினைக்க முடிகின்றது. நிகழ்வு நடந்த இடத்துக்கு மிக அருகிலுள்ளவர்கள் பதற்றமோ மிக அதிகமானதாகும். ஆனால், நிகழ்விடம் என்பது தூரமா அருகிலா என்பது ஒன்றும் பதற்றத்தை நிர்ணயிப்பவைகளாக இல்லை. நிகழ்வு பற்றி வெளியாகும் ஒலி மற்றும் ஒளிபரப்புகள மனஇயல் ரீதியாக பாதிப்பை அதிகமாக்கவோ அல்லது குறைக்கவோ செய்கின்றதெனலாம்.

குழந்தைகள் தங்கள் அனுபவங்கள் மற்றும் கலாச்சார காரணங்களின் அடிப்படையில் "மோதல்சாவு" உண்மையானதல்ல என்பதை விளக்க முற்படுகிறார்கள்.

குழந்தைகள் கூறும் விளக்கங்கள் அவர்களுடைய வாழ்க்கை அனுபவத்தின் அடிப்படையில் மட்டும் அமைந்ததில்லை. அவர்கள் கூறும் வேறு நிகழ்வுகளும் அவர்களுக்கு அதை உறுதிப்படுத்துகின்றன. அவை 2002ம் வருடம் குஜராத்தில் நடந்த கலவரம் மற்றும் பலருக்குத் தெரியாத புதுடில்லியில் அன்சா பிளாசா வழக்கு போன்றனவாகும்.

அவர்களுக்கு காவல்துறை, அரசாங்கம் மற்றும் நீதித்துறை போன்றவற்றின் மீது அவர்களுக்கு அவநம்பிக்கை ஏற்படக் காரணம் அவைகள் யாவும் ஒன்றுமறியா முஸ்லீம்களை கண்ணி வைத்துப் பிடிப்பதாக நினைப்பதால்தான்.

இந்தக் குழந்தைகளின் எண்ணங்கள் பெரிதும் ஊடகங்களின் சித்தரிப்பு காரணமாக பாதிப்படைகின்றன. இரு வேறு குழுக்களைச் சேர்ந்த மூன்று குழந்தைகள் கூட்டமாக வந்து தங்கள் மீது தாக்குதல் நடந்தால் தங்களை எப்படிக் காப்பாற்றிக் கொள்வார்கள் என கதை புனைந்து வைத்திருந்தார்கள். இது எந்த அளவுக்கு அவர்கள் மனதில் பயம் ஆக்ரமித்திருக்கிறது என்பதைக் காட்டுகிறது. குழந்தைகள் முழுதாக இதனை வெளிப்படுத்தா–விட்டாலும் அவர்களின் உள்மன பயம் மெல்லிய சவ்வு போட்டு மூடப்பட்டுள்ளதெனலாம்.

### பாகுபாடு மற்றும் வெவ்வேறு விதமாக நடத்தப்படுவது பற்றி அவர்களின் கருத்துக்கள்:

பாகுபாடு காட்டப்படுவது பற்றி குழந்தைகள் கூறும்போது தங்கள் பள்ளி அனுபவங்களை உதாரணமாகக் காட்டி பேசினார்கள். அவர்களைப் பொறுத்தவரை பள்ளிகளில் கூட பாகுபாடு காட்டப்படுகிறது என்றால் வேறிடங்களில் காட்டப்படுவதற்கு ஆச்சரியப்பட ஒன்றுமில்லை. அங்கேயும் கூட என்ற வார்த்தைகளை அவர்கள் பயன்படுத்தியது, நியாயமாய் இருக்க வேண்டிய பள்ளிகளே இப்படி என்றால் எப்படி என்றும், ஆசிரியர்கள் கூடத்தான் பாகுபாடு செய்கிறார்கள் என்றும், கலந்துரையாடலில் கூறினர். மதம் சார்ந்த அடையாளத்தில் தங்கள் அனுபவங்கள் வாயிலாக எப்படி பாகுபாடு பற்றி உணர்கிறார்கள் என்பதை கீழ்வரும் அவர்களின் உரையாடலே விளக்கிவிடும். ஒவ்வொரு நாளும் பள்ளி நடைமுறையில் அவர்கள் காணும் பாகுபாடு தற்போது இந்த மோதல் சாவு மூலம் உறுபடுத்தப்படுகிறது. அவர்கள் முஸ்லீம்களாக இருப்பதனாலேயே அவர்களிடம் வேறுவிதமாக ஆசிரியர்கள் நடந்து கொள்வதாக உணர்கிறார்கள். இந்த மோதல் சாவு நிகழ்ச்சி அவர்கள் உணர்ந்த முஸ்லீம் என்பதால் தீவிரப் பாகுபாட்டின் விரிவாக்கமே பெரிய சதித்திட்டமே என்கின்றனர். ஒரு வேளை இந்த நிகழ்ச்சி இவர்களின் மென்மையுணர்வை மிகவுணர்வாய் காட்டி மற்றவர்களின் நடத்தைகளை அந்தப் பின்னணியில் பார்க்க வைத்திருக்கலாம். அத்தோடு பிற்காலத்தில் தாமும் ஏதேனும் ஒருவிதத்தில் தாக்கப்படக் கூடும். பாகுபடுத்தப்படும் காரணத்தால் என்று எண்ண வைத்திருக்கலாம் கீழ்கண்ட உரையாடலை கேட்போம்.

ஒரு பிரச்சனை என்று இந்தக் குழந்தைகள் கருதுவதென்னவென்றால் எல்லா ஊடகங்களும் இவர்கள் வாழும் பகுதியை பயங்கரவாதப் பகுதி என சொல்லி வருவதைத்தான். அதாவது அந்தப் பகுதிக்கும் பயங்கரவாதத்துக்கும் தொடர்பிருக்கிறது என்று சொல்லிவருகின்றன. இது காரணமாக தங்களின் பெயர்கள் கெட்டுப் போகின்றது என்று பயப்படுகிறார்கள். தங்களோடு படிக்கும் குழந்தைகள் தங்களை கீழ்கண்டவாறு கேட்கும்போது தர்மசங்கடமாய் இருப்பதாகக் கூறுகிறார்கள்.

இந்தக் குழந்தைகளின் பயம் அனைத்தும் அடிப்படையில்லாதது, காரணமில்லாதது என்று சொல்லிவிட முடியாது. அந்தப் பகுதியைச் சுற்றி வாழும் பல நண்பர்களும் அவ்வாறே பெரியவர்களைக் கேட்கிறார்கள் என்று சொல்லக் கேட்டிருக்கிறேன். இந்தப் பகுதிக்குச் செல்வதற்கு ஆட்டோக்கள் கிடைப்பது முன்னெல்லாம் கடினமானதுதான். இப்போதோ முடியாததாகவே ஆகிவிட்டது. இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு ஸ்டப் (Staub – 1996) கூறுவது என்னவென்றால் இதுபோல ஒட்டுமொத்தப் பகுதி மக்களையும் பெயரிட்டழைப்பது (Branding Names) அந்தப் பகுதியில் மொத்தமாக வன்முறை நடக்க வழி வகுத்துவிடுகின்றதென்று.

எனக்குமே நன்றாக நினைவிருக்கிறது. டில்லி பல்கலைக் கழகத்தை சார்ந்த ஒரு புகழ் பெற்ற கல்லூரி மாணவர்கள் தங்கள் படிப்புக்கான கள ஆய்வுக்கு ப்பைசாபாத் (Faizabad) பகுதிக்கு 2010ல் செல்ல மறுத்துவிட்டார்கள். இந்த கள ஆய்வுப் படிப்பு அவர்கள் பாடத்திட்டத்தின் ஒரு முக்கியமான அம்சமாக இருந்தும் கூட மறுத்துவிட்டார்கள். 1992–ல் நடந்த மசூதி இடிப்பு சம்பவம் அதையொட்டி நடந்த வன்முறை ஆகியவைகளை 2010ம் வருட இறுதியில் கூட மக்கள் மனதை கலங்கடித்ததை மறக்க முடியவில்லை.

ஜாமியா நகர்க் குழந்தைகளுக்கு உதவி தேவைப்படுகின்றது. அது என்னவென்றால் தனி மனிதர்கள் மற்றும் குழுவாய் உள்ள மனிதர்களுக்கு பலவித அடையாளங்கள் இருக்கிறதென்பதைப் புரிந்து கொள்வதற்கு தங்களுடைய மத அடையாளங்களினால் திணறிப் போய் இருக்கும் இவர்கள் சல்மான்கான் மற்றும் ஷாருக்கான் போன்ற திரைப்பட நடிகர்களுக்கும் பயங்கரவாதத்தில் பங்கு இருக்கிறது என்று பள்ளியில் உடன்படிப்பவர்கள் சொல்கிறார்களாம். "சல்மானுக்கும் பயங்கரவாதத்தில் இரகசிய தொடர்பிருக்கிறது" என்கிறார்களாம். இந்தக் குழந்தைகளுக்கு "பகுதி" சமயம் அல்லது மதம் "மதவாதம்" போன்ற வார்த்தைகளுக்குள் இருக்கும் வித்தியாசங்கள் பற்றி தெரிந்திருக்கவில்லை என்பது மட்டுமில்லை குழம்பிப் போய் இருக்கிறார்கள் என்று கூடக் கூறலாம்.

இவர்கள் தங்களுடைய விதியை தங்கள் மதம் நிர்ணயிப்பதாகவும் நினைத்து தடங்கலாக அமைந்துவிட்டதாகவும் எண்ணிக் கலங்குகிறார்கள். உரையாடும்போது பாகிஸ்தான் பற்றிக்கூறி இந்தியாவுக்குள்ள உறவு பற்றிக் கூறினார்கள். இது எப்படி அவர்களை இந்திய சமுதாயத்தில் அவர்களின் வாழ்வு பாழாகுவதை, அதாவது அந்த சமுதாய மக்கள் அப்படித்தான் என்று பட்டங்கட்டப்பட்டுவிடுகிறார்கள் என்று கூறினார்கள். இது காரணமாக வரலாற்றுப்பூர்வமான மற்றும் அரசியல் பூர்வமான பக்குவப்பட்ட புரிதல் இல்லாமல் செய்துவிடுகின்றது என்பதை அவர்கள் வெளிப்படுத்துகின்றார்கள்.

**எதிர்கால வாய்ப்புகள் பற்றிய கவலை:**

இந்தக் குழந்தைகளில் ஆறு குழந்தைகளின் பெற்றோரோடு பேசும் வாய்ப்பு கிடைத்தது. இவர்கள் வீடுகளில் பாட்லா ஹவுஸ் சம்பவம் பற்றி வெளிப்படையாக ஏதும் விவாதித்துக் கொள்ளவில்லை. இவர்களின் பெற்றோர்கள் அது பற்றிப் பெரிதாக நினைத்துக் கொள்ளவோ பயப்படவோ ஒன்றுமில்லை என்பதுபோல் எங்கள் குழந்தைகளிடம் நடிக்க வேண்டியிருந்தது. ஏற்கெனவே பயந்து போயிருக்கும் தங்கள் குழந்தைகள் தங்கள் எதிர்காலம் பற்றி மிக மிக பயந்து போய்விடுவார்கள் என்ற காரணத்தாலேயே தாங்கள் அதுபற்றிப் பேசிக் கொள்வதை தவிர்த்ததாகக் கூறினார்கள். திரும்ப திரும்ப குழந்தைகள் கேள்வி கேட்டபோது அதுபற்றி விரிவாக வெளியில் விவாதிக்கக் கூடாது என்று சொல்லி எச்சரித்து வைத்ததாகவும் அதிலும் முக்கியமாக பள்ளியில் பேசக்கூடாது என்று சொன்னோம். ஏனென்றால், அது அவர்களின் பள்ளிப் படிப்பை பாதிக்கும் எதிர் விளைவுகளை உண்டாக்கி பள்ளியில் படிப்பு தொடர்வதும் கடினம் என்று நினைக்கிறார்கள்.

பெற்றோர் நினைப்பது என்னவென்றால் ஏற்கெனவே சமுதாயத்தில் முஸ்லீம்களைப் பற்றி குறைவான மதிப்பீடும் "முரட்டுத்தனமான"வர்கள் என்றும் நினைக்கப்படுவதால் குழந்தைகளுக்கு நல்லவிதமாக நடந்து கொள்ளவும் பண்பாகப் பழகவும் சொல்லி தரவேண்டும் என்று. இது உலகத்தில் முஸ்லீம்களைப் பற்றி உயர்வாகக் கருத இடமளிக்கும் என்று நம்புகிறார்கள். மூன்று பெற்றோர் தம் குழந்தைகள் தம்முடைய உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்திக் கொள்ள பழகிக் கொள்ள வேண்டும். பிறர் தூண்டிவிட்டாலும் இது அவசியம் என்கின்றனர். ஏனென்றால், இதுபோன்ற விசயங்களை பெரும்பாலான மக்கள் பேசிப் பேசி சிக்கலான சூழ்நிலையை உருவாக்கி விட்டுவிடுகிறார்கள். ஆனால், இதில் இறுதியாகப் பாதிப்படைவதோ முஸ்லீம் மக்கள்தான் என்று சொல்கிறார்கள்.

சிறுபான்மை மக்கள் தங்கள் அந்தஸ்த்துக்கு மீறி கஷ்டப்பட்டு உழைத்தால்தான் ஏற்கெனவே தங்களுக்கு சமுதாயத்தில் உள்ள தடங்கல்களை மீறி மேலே வர முடியும். (மேஜர் மற்றும் வித் – Major and Vick 2005)

ஒரு சில குழந்தைகளின் பதில்கள் மேலே கண்டவைகளுக்கு மாறுபட்டதாகவும் எதிர்மறை ஆற்றல் காரணமாக சோகத்தோடு தங்கள் எதிர்காலம் தங்கள் கையிலில்லை என்பது போல அமைந்திருந்தது. இவ்வாறு அவர்கள் பாதுகாப்பற்றதாய் உணர்வதற்குக் காரணம் என்னவென்று அவர்களே சொல்வதென்னவென்றால் சமத்துவமற்ற வாய்ப்புகளும் பாகுபாடு காட்டப்படுவதுதான் என்கின்றனர்:–

கலாச்சார ரீதியாகவும் மற்றும் ஓரளவு கல்வி மற்றும் படிப்பு என்ற அளவிலுள்ள முஸ்லீம் குடும்பங்களிலிருந்து வரும் குழந்தைகள் தங்களை ஓரளவுக்கு நிலைநிறுத்திக் கொள்ள இயலும். ஆனாலும் எண்ணிக்கையில் மிகப் பலவுள்ளதான இதுபோன்ற பின்னணி இல்லாத முஸ்லீம் குழந்தைகளுக்கு இந்தப் போராட்டத்தின் காரணமாக மனத்தொய்வு ஏற்பட்டு கல்வியை பொறுத்தவரையில் வெற்றி பெறவோ, கல்வியினால் உயர்வு பெற்றுவிடுவோம் என்ற நம்பிக்கை அற்றுப்போய்விடுவார்கள் (ogbu 2003). இது சாச்சார் கமிட்டி அறிக்கை 2006 கூறுவது போல குழந்தைகளின் இடைநிற்றலுக்கான காரணங்களின் ஒன்று என்னும் வகையில் இதையும் நாம் கூர்ந்து கவனிக்க வேண்டும்.

## 2: ஒதுக்கி வைத்தல் மற்றும் அந்நியமாக ஆக்குதல்:

குழந்தைகளின் பதில்கள் அவற்றில் தொனித்த பயம், பாதுகாப்பின்மை மற்றும் நம்பிக்கையின்மை உணர்வுகள், எதிர்காலம் குறித்து தெளிவின்மையால் வரும் பயம் அதன் காரணமாக சமூகத்தில் யாரோ என்ற வகையில் அந்நியமாக்கப்படுதல் மற்றும் ஒதுக்கி வைக்கப்பட்டு– விடுவோமோ என்று அஞ்சுகின்ற மனப்பான்மை போன்றவை ஒரேயொரு ஜாமியா நகர் நிகழ்வினால் மட்டும் நேர்ந்துவிட்டதாகக் கொள்ள முடியாது. இது எதைக் காட்டுகிறதென்றால் குழந்தைகள் தம் வயதொத்தவர்களிடம் பழகும்போது பள்ளி மற்றும் சமூக அடையாளங்கள் மற்றும் அந்தஸ்துக்கு ஏற்ப தம்மை புனைந்து கொள்ள விழைகிறார்கள் என்று.

## பாடத்திட்டம் பயிற்றுமுறை மற்றும் வெளித் தள்ளல்கள்:

பள்ளிப் பாடத்திட்டம் மற்றும் பாடப் புத்தகங்களின் கொள்கை மற்றும் அரசியல் பயன்பாடு என்பது பல்லாண்டுகாலமாக விவாதத்திற்குரியதாக இருந்து வருகின்றது. தேசியப் பாடத்திட்ட வரைவு 2000 (National Curriculam Frame work 2000) NCF 2000 என்பது பாரதீய ஜனதா கட்சியின் ஆதரவிலான பாரதீய ஜனதா அரசாங்கத்தினால் உருவாக்கப்பட்டது. இது மத்திய ஆலோசனை கல்விக் கழகத்தின் ஒப்புதலைப் பெறாததாலும் வரலாறு மற்றும் வகுப்புவாத செய்திகளை திரித்துப் பார்க்க முயற்சி மேற்கொண்டதாலும் பொது மக்களால் பெருத்த விமர்சனத்துக்கு உரியதானதாயிற்று. அதன்பின் காங்கிரஸ் தயவால் ஆன காங்கிரஸ் அரசாங்கத்தின் கீழ் NCF 2000 மீளாய்வு செய்யப்பட்டது. தேசிய அளவிலான கல்விக்கான ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மற்றும் தொழில்நுட்பம் (NCERT) அமைப்பினால், இதன் காரணமாக கல்விக்கான மத்திய ஆலோசனை கமிட்டி (CABE 2005) மீண்டும் உருவாக்கப்பட்டது. இதன் கீழ் ஒரு குழு (CBSE 2005) உருவாக்கப்பட்டு இது NCERT மற்றும் மாநிலப் பள்ளிகள் மற்றும் தனியார் பள்ளிகள் மதம் மற்றும் சமூக நிறுவனங்களால் நிர்வகிக்கப்படும் பள்ளிகள் போன்றவை பயன்படுத்தும் புத்தகங்களை ஆய்வு செய்தது. அந்தக் குழு பள்ளிகளில் பயன்படும் பல புத்தகங்கள் தவறான சமூக பிரச்சாரங்கள் இடம் பெற்றுள்ளதை கவனித்தது. உதாரணமாக,

''இந்தியா இரண்டாகப் பிரியக் காரணமாக முஸ்லீம்கள் இருந்ததால் முஸ்லீம்கள் சந்தேகக் கண்ணோடேயே பார்க்கப்பட்டனர். இது மட்டுமல்ல முஸ்லீம்கள் தங்களின் தனி அடையாளங்களை தக்க வைத்துக் கொள்ளவே முயற்சித்தனர். இந்துக்களுக்கும் முஸ்லீம்களுக்கு இடையில் ஏற்பட்ட சண்டை துவங்கியது எப்போதென்றால் முஸ்லீம்கள் நாட்டின் உள்ளே குடியேறியதோடு வலுக்கட்டாயமாக இங்கே வசித்து வந்தவர்களை இஸ்லாம் மதத்துக்கு மதமாற்றம் செய்வித்ததால்'' (இந்தியிலிருந்து மொழி பெயர்க்கப்பட்டுள்ளது).

தற்போதைய நிலவரங்களை இந்தப் புத்தகம் நியாயப்படுத்திடுவதோடு அவர்களை அதாவது முஸ்லீம்களை வந்தேறிகள் மற்றும் துரோகிகள் அல்லது காட்டிக்கொடுப்பவர்கள் என்பது போல் சித்தரிக்கின்றது. இரண்டு மதத்தைச் சேர்ந்த மக்கள் எப்போதும் முரண்பாடு கொண்டு ஆதி முதல் இன்று வரை சண்டையிட்டுக் கொண்டே இருப்பதைப் போல் அதில் தொனிக்குமாறு எழுதப்பட்டுள்ளது. இப்படி இந்தப் புத்தகம் சொல்ல வருவதென்னவென்றால் ஆதிக்க சமூகத்தினர் ஏதோ அமைதிவிரும்பிகள் மற்றும் சகிப்புத் தன்மையர் போலவும் பாராட்டப்படுகின்றனர்.

சண்டைக்கு காரணம் முஸ்லீம்கள்தான் என்பது போல் திறமையாகத் திரித்து கூறி முஸ்லீம்கள் வரலாற்றின் இடைக்காலத்தின் நாட்டின் படையெடுத்து வந்து கொள்ளையடித்த ஆட்சியர்களின் பிரதிநிதிகளாக இன்னும் செயல்படுவதாக சொல்கின்றது. இவ்வாறாக முஸ்லீம்கள் அனைவரும் ஒரே மாதிரியான பயங்கரவாதிகள், சகிப்பு தன்மையற்றவர்கள் வன்முறையாளர்கள் என குற்றஞ்சாட்டப்படுகின்றனர். இது காரணமாகத்தான் அவர்கள் ஒதுக்கி வைக்கப்படுவதாகவும் குறைந்த அந்தஸ்து உள்ளவர்களாகவும் இருப்பதுபோல் நியாயப்படுத்தப்படுகின்றனர். அதேசமயம் ஆதிக்க சமூகத்தினரை உயர்த்தி பேசி அவர்களின் கலாச்சாரம் மற்றும் மதிப்பீடுகளுக்கு பெரிய இடம் பெற்றிட முயற்சிக்கப்படுகிறது (Joffe 2007).

சமீபத்திய நிகழ்வுகளாக கார்கில் போர் நாட்டு எல்லையை கடந்து உள்புகுதல் போன்றவை இந்தப் பிரச்சாரத்துக்கு உதவி செய்கின்றன. மேலும் மும்பையில் நடந்த தாக்குதல் போன்றவை பழைய கதைகளுடன் இணைத்து பின்னப்படுகின்றன. சினிமாக்களிலும் இந்தியர்கள் பாகிஸ்தானியர்கள் என்பதற்கு பதிலாக இந்துக்கள் முஸ்லீம்கள் என்பதாக வருகின்றது (அக்தார் 2007) சமூகத்தைப் பற்றி அதன் உள்கூறுகள் இந்திய சுதந்திரப் போராட்டம் போன்ற ஆய்வுகள் கனமிழந்து முஸ்லீம் இந்து போராட்டமாக மாறித் தோற்றம் தருகின்றது. ஒரு முஸ்லீம் குழந்தை பாகிஸ்தான் கொடியை வரையும்போது பிறைநிலாவையும் நட்சத்திரத்தையும் எங்கே வரைவது என்று யோசிக்கும்போது அதன் தோழியாகிய முஸ்லீம்

அல்லாத குழந்தை இதைப் பார்த்துவிட்டு ஓ பாகிஸ்தானியான உனக்கு உங்கள் சொந்த கொடியை கூடத் தெரியவில்லையா" என்று கேட்கின்றது.

இந்த ஆய்வுக் கட்டுரையின் ஆசிரியர் ப்பாரா பரூக்கி (Farah farooqui) ஜாமியா மில்லியா இஸ்லாமியா, புதுடில்லியின் கல்வித்துறையில் பணியாற்றி வருகிறார். அவரின் மின் அஞ்சல் முகவரி
farah.faroogi@rediffmail.com

**இதன் தொடர்ச்சி அடுத்த இதழ் எண்.65ல்...**

**REFERENCES**

Allport, GW (1954): *The Nature of Prejudice* (Cambridge, MA: Perseus Books).

Apple, MW and James A Beane (2006): *Democratic Schools: Lessons from the Chalk Face*, Eklavya Publications

Aboud, FE (2005): "The Development of Prejudice in Childhood and Adolescence" in J F Dovidioet al (ed.), *On the nature of Prejudice: Fifty Years After Allport,* Blackwell Publishing.

Akhtar, A (2007): "The Syntax of Secularism in Hindi Cinema" in B Chandra and S.Mahajan (ed.), *Composite Culture in a Multicultural Society,* Pearson Education and NBT Publication.

Bhattacharya, Neeladri (1991): "Myth, History and Politics of Ramjanmbhumi" in Sarvapalli Gopal (ed.), *Anatomy of a Confrontation: The Babri Masjid-Ramjambhumi Issue,* Viking Penguin India.

Bhatti, G (1999): *Asian Children at Home and at School; An Ethnographic Study,* Routledge.

Bigler, R S, L C Jones, D B Lobliner (1997): "Social Categorisation and Formation of Intergroup Attitudes in Children", *Child Development.* Vol 68, pp 530-616.

Bigler, R C, C S Brown, M Markell (2001): "When Groups Are Not Created Equal: Effects of Group Status on Formation of Intergroup Attitudes in Children", *Child Development*, Vol 72, No 4, pp 1151-62.

Brown, C S and R S Bigler (2002): "Effects of Minority Status in the Classroom on Children's Intergroup Attitudes", *Journal of Experimental Child Psychology,* Vol 83, pp 77-10.

Crocker, J and B Major (1989): "Social Stigma and Self-esteem. The Self-Protective Properties of Stigma", *Psychological Review,* Vol 96, pp 608-30.

Camicia, P (2007): "Prejudice Reduction through Multicultural Education: Connecting Multiple Literatures", *Social Studies Research and Practice,* Vol 2, No 2.

Committee of the Central Advisory Board of Education (2005): "Regulatory Mechanisms for Textbooks and Parallel Textbooks Taught in Schools Outside the Government System: A Report".

Engineer, AA (2006): "Hindu-Muslim Relations Before and After 1947" in *Sarvapalli Gopal (ed.), Anatomy of a Confrontation: The Babri Masjid-Ramjanmbhumi Issue,* Viking Penguin India.

Fine, M (1993): "You can't Just Say That the Only Ones who Can Speak Are Those Who Agree with Your Position: Political Discourse in the Classroom", *Harvard Educational Review,* Vol 63, No 4.

Freire, P and P D Macedo (1995): "A Dialogue: Culture, Language and Race", *Harvard Educational Review,* Vol 65, No.3, pp 377-402.

Gillborn, David (2008): *Conspiracy, Racism and Education,* Routledge.

Gupta, L (2008): "Growing up Hindu and Muslims: How Early Does It Happen?", *Economic & Political Weekly,* February issue.

– **ஆதாரம் :** ECONOMIC & POLITICAL WEEKLY
Vol - XLVII No. 20, May 19, 2012

# மாற்று வழியைத் தேடி

–ரிச்சொர்ட் மஹாபத்ரா

**கிராமப்பகுதிகளில் பணிபுரிய மருத்துவர்கள் தயாராக இல்லை என்பதால் பிரச்சனைக்கான தீர்வு ஊரக சுகாதார பணியாளர்களை வலுப்படுத்துவதில் இருக்கக் கூடும்.**

சிசு மரண விகிதத்தை சமாளிப்பது என்பது எளிதானது அல்ல. புதிதாகப் பிறந்த ஒரு குழந்தை தாக்குப்பிடித்து உயிர்வாழ்வது பல்வேறு அம்சங்களைச் சார்ந்திருக்கிறது. தாயின் வயது, அவரது உடல்நலம், ஊட்டச்சத்து நிலை, உடல்நல கவனிப்புகள் கிடைக்கத்தக்க வகையில் முந்தைய குழந்தைக்கும் இந்தக் குழந்தைக்குமான இடைவெளி, வயிற்றுப்போக்கு, ரத்தம் விஷமாகுதல் போன்ற நோய்களிலிருந்து குழந்தைக்குக் கிடைக்கும் பாதுகாப்பு என இதில் பல்வேறு அம்சங்கள் உள்ளன.

அநேகமாக இந்தக் காரணத்திற்காகத்தான், அரசாங்கத்தில் சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகம் மகளிர் மற்றும் குழந்தை மேம்பாட்டு அமைச்சகங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இந்த இரண்டு அமைச்சகங்களும் கர்ப்பகால ஆரோக்கியத்தையும் குழந்தை நலனையும் மேம்படுத்த பல்வேறு திட்டங்களை வகுத்துள்ளன, பல வழிகளில் தலையிடுகின்றன. மத்திய சுகாதார அமைச்சகத்தின்கீழ் செயல்படுத்தப்படும் தேசிய ஊரக சுகாதாரத் திட்டம் (என்ஆர்எச்எம்) அநேகமாக இதுதொடர்பாக இதுவரையில் கொண்டுவரப்பட்ட திட்டங்களிலேயே மிகப்பெரிய, ஒருங்கிணைந்த திட்டமாக இருக்கக்கூடும். 2005ல் இந்தத் திட்டம் கொண்டுவரப்பட்டதைத் தொடர்ந்து, நாட்டின் ஊரகப் பகுதிகளில் சுகாதாரத்தை மேம்படுத்த இதுவரையில் அரசாங்கம் சுமார் 45 ஆயிரம் கோடி ரூபாய் வரையில் செலவிட்டுள்ளது. இந்த அளவிற்கு பெரும் பணம் முதலீடு செய்யப்பட்டுள்ள போதிலும் கூட, 11வது ஐந்தாண்டு திட்டத்தில் நிர்ணயிக்கப்பட்ட 30 என்ற சிசு மரண விகித (ஐஎம்ஆர்) இலக்கை இந்தியாவால் இன்னும் எட்ட முடியவில்லை. இப்போது, ஏப்ரலில் இருந்து தொடங்குகிற 12வது ஐந்தாண்டு திட்ட காலகட்டத்தில் 28 என்ற ஐஎம்ஆர் இலக்கை இந்தியா தீர்மானித்துள்ளது. ஐக்கியநாடுகள் அமைப்பின் 1000 ஆண்டு வளர்ச்சி இலக்குகளில் ஒன்றாக 2015ம் ஆண்டில் ஐஎம்ஆர் விகிதத்தை 27ஆக குறைக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அதற்கு நெருக்கமாக வருகிற ஒரு இலக்கை இந்தியா தீர்மானித்துள்ளது. இந்த இலக்குகளை எப்படி எட்டிப்பிடிப்பது ?

இந்த கேள்விக்கான விடை சுத்ரபிரெயாக், கோட்டா, பிளாஸ்பூர், ஹமீர்பூர் ஆகிய மாவட்டங்களின் வெற்றிக் கதைகளிலும், ஷ்ராவஸ்தி, பலாங்கீர் மாவட்டங்களின் தோல்விக் கதைகளிலும் இருக்கிறது. வெற்றி பெற்ற மாவட்டங்கள் எப்படி குறைவான சிசு மரண விகிதத்தை எட்டிப்பிடித்தன என்பதை மதிப்பிடுவது கடினம்தான். இருந்தபோதிலும், இந்தப் பகுதிகளில், தொலைதூரத்தில் உள்ள கிராமங்களில் கூட, சுகாதாரப் பணியாளர்கள் இருக்கிறார்கள் என்பது பலனளித்துள்ளது என்பதைக் காணமுடிகிறது.

### திறமையை அங்கீகரித்தல்

பிளாஸ்பூர், மீர்பூர் மாவட்டங்களில் மிடானின், ஆஷா போன்ற சமூக சுகாதாரப் பணியாளர்களின் பங்களிப்பு சிசு மரண விகிதம் குறைவதற்கு இட்டுச்சென்றுள்ளது. இதனை மாநில சுகாதாரத் துறை அதிகாரிகள் ஒப்புக்கொள்கிறார்கள். ஆயினும், இந்த சமூக சுகாதாரப் பணியாளர்களின் பங்களிப்புக்கு உரிய அங்கீகாரம் கிடைக்கவில்லை. ஒரு ஆஷா சுமார் 1000 பேருக்குக்கான சுகாதார நலன்களை கவனித்துக்கொள்கிறார். இளம் தாய்கள், குழந்தைகள் ஆகியோரின் உடல்நல நிலைமைகளைப் பதிவு செய்கிறார், மருத்துவமனையில் பிரசவம் நடப்பதையும் நோய்தடுப்பு மருந்துகள் வழங்கப்படுவதையும் உறுதிப்படுத்துகிறார். ஊட்டச்சத்து கிடைக்கச் செய்வதற்காகவும் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவும் அங்கன்வாடி பணியாளர்களுடன் ஒருங்கிணைந்து செயல்படுகிறார். இத்தனைப் பணிகளைச் செய்தாலும் அவருக்குக் கிடைக்கிற ஊதியம் என்பது, ஒரு மருத்துவமனை பிரசவத்திற்கு ஏற்பாடு செய்தால் வெறும் ரூ.200 மட்டுமே. ஒரு குழந்தைக்கு தடுப்பு மருந்து விடுவதற்கு இவருக்கு மாதம் ரூ.50 கிடைக்கிறது. சத்திஸ்கர் மாநில சுகாதாரத்துறை மேற்கொண்ட ஒரு மதிப்பீட்டின்படி, ஒரு மிடானின் பணியாளருக்கு ஒரு மாதத்தில் கிடைக்கிற ஊக்கத் தொகை என்பது ரூ.200 மட்டுமே. கோட்டா மாவட்டத்தில் பணிபுரியும் ஆஷா சஹயோகினிகள் கொஞ்சம் அதிர்ஷ்டசாலிகள். ஆஷா பணியாளர்களாக மாற்றப்படுவதற்கு முன்பு அங்கன்வாடி ஊழியர்களாக இருந்தவர்களான இவர்களுக்கு மத்திய குழந்தை மேம்பாட்டு அமைச்சகம் தொடர்ந்து ரூ.1000 வழங்கிவருகிறது.

உத்தரபிரதேசத்தின் ஹமீர்பூர் மாவட்டத்தில், கர்ப்பிணிப் பெண்களுக்கான இலவச பேருந்து திட்டம் இன்னும்

கொண்டுவரப்படவில்லை. இந்த நிலையில் ஆஷாக்களுக்கு போக்குவரத்துப்படியாக மாதம் ரூ. 250 வழங்கப்படுகிறது. இது மிகவும் சொற்பமான தொகை என்று அவர்கள் கூறுகிறார்கள். மிக அருகில் உள்ள ஒரு ஆரம்ப சுகாதார மையத்திற்கு சென்றுவந்தால் கூட குறைந்தது ரூ.500 செலவாகிவிடுகிறது என்று அவர்கள் கூறுகிறார்கள். இந்தப் போக்குவரத்துப் படியை ஆஷாக்கள் எடுத்துக்கொள்கிறார்கள், கர்ப்பிணிப் பெண்ணின் குடும்பத்தினர்தான் போக்குவரத்து செலவை ஏற்க வேண்டும் என்று கட்டாயப்படுத்துகிறார்கள் என்று மக்களில் சிலர் கூறுகிறார்கள்.

தில்லியில் பொது சுகாதார ஆதாரங்கள் கூட்டமைப்பின் தேசிய அமைப்பாளரும், தேசிய ஆஷா பராமரிப்பு குழுவில் ஒரு அங்கத்தினருமான வந்தனா பிரசாத், ஆஷாக்களுக்கு ஊக்கத் தொகைகளுடன் கூடிய ஒரு அடிப்படை ஊதியம் வழங்கப்பட வேண்டும் என்று வலியுறுத்துகிறார். சுகாதாரப் பணிகளில் உள்ள வேலைச் சுமையை குறைப்பதும் கூட சிசு மரண விகிதத்தை கட்டுப்படுத்த உதவும் என்கிறார். சத்திஸ்கர் மாநிலத்தில் 277 பேருக்கு ஒரு சுகாதாரப் பணியாளரை அரசாங்கம் நியமிக்கிறது. உத்தர்கன் மாநிலத்தில் 569 பேருக்கு ஒரு சுகாதாரப் பணியாளர் நியமிக்கப்படுகிறார். இந்த மாநிலங்களிலும் சுகாதாரப் பணியாளர்களுக்கான பணி இடங்கள் அனைத்தும் நிரப்பப்பட்டுள்ளன. இந்த இரண்டு மாநிலங்களிலும் சிசு மரண விகிதம் குறைவாக இருப்பதற்கு இது ஒரு காரணமாக இருக்கக் கூடும்.

''ஆஷாக்கள் செய்கிற பணிகளுக்கு அரசாங்கம் உரிய அங்கீகாரம் வழங்குவதும், அவர்களுக்கு முறையான ஊதியம் வழங்குவதும் முக்கியமானத் தேவையாகும்,'' என்று கூறுகிறார் ஜவஹர்லால் நேரு பல்கலைக் கழகத்தின் சமூக அறிவியல் பிரிவு பேராசிரியர் ஜெயதி கோஷ்.

**ஊரக சுகாதார பயிற்சிக்கான தருணம்**

சிசு மரண விகிதத்தை குறைக்கிற பொறுப்பு சுகாதாரப் பணியாளர்களின் தோள்களில்தான் பெருமளவு இருக்கிறது. ஆனால், மருத்துவர்கள் கிராமப் பகுதிகளில் பணியாற்ற விரும்புவதில்லை. இதற்கான சரியான எடுத்துக்காட்டு ஷ்ராவஸ்தி மாவட்டம்தான் (இங்கு சிசு மரண விகிதம் 1000 சிசுக்களுக்கு 103 என்ற அளவில் இருக்கிறது). சத்திஸ்கர் மாநிலத்தில், மருத்துவ அலுவலர்களின் பணியிடங்களை ஈடுகட்டுகிற ஒரு முயற்சியாக ஊரக மருத்துவ உதவியாளர்கள் (ஆர்எம்ஏஎஸ்) நியமிக்கப்பட்டுள்ளனர். இதன் மூலம், எம்பிபிஎஸ் பட்டம் பெற்ற மருத்துவர்களுக்கு வழங்கப்படும் ஊதியத்தில் பாதித் தொகையை அரசாங்கம் மிச்சப்படுத்த முடிகிறது. ஆனால், மருத்துவர்களின் எதிர்ப்பைத் தொடர்ந்து ஊரக சுகாதாரப் பயிற்சித் திட்டத்தை மாநில அரசு விலக்கிக்கொண்டுவிட்டது.

''மருந்துகள் வழங்குவதற்காக குறுகிய கால பயிற்சி எதுவும் கொண்டுவரப்படுமானால் அதை நாங்கள் அனுமதிக்க மாட்டோம்'' என்று இந்திய மருத்துவ சங்க (ஐஎம்ஏ) தலைவர் ஜி.கே. ராமசந்திரப்பா கூறுகிறார். இத்தகைய பயிற்சித் திட்டங்களால் தரக்குறைவான மருத்துவர்கள்தான் உருவாக்கப்படுவார்கள் என்று இந்த சங்கம் கூறுகிறது. கிராமப் பகுதிகளில் பணியாற்ற மருத்துவர்கள் ஒப்புக்கொள்வார்களா என்று கேட்கப்பட்டபோது, அவர் ''அரசு மருத்துவமனை மருத்துவர்கள் மிகக் குறைவாகவே ஊதியம் பெறுகின்றனர். அடிக்கடி இடம் மாறுதலுக்கு உள்ளாகிறார்கள். அவர்களது குழந்தைகள் படிப்பதற்கு கிராமங்களில் வசதி இல்லை. அவர்களால் எப்படி இதுபோன்ற நிலைமைகளில் பணியாற்ற முடியும்,'' என்று திருப்பிக் கேட்கிறார்.

எனினும், இந்திய மருத்துவர் சங்கத்தின் இந்த கண்ணோட்டத்தை தில்லியைச் சேர்ந்த இந்திய பொது சுகாதார அறக்கட்டளை அமைப்பு மேற்கொண்ட ஆய்வு நிராகரிக்கிறது. சத்திஸ்கர் மாநிலத்தின் ஊரக மருத்துவ உதவியாளர்கள், மருத்துவர்களைப் போலவே பிரச்சனைகளை எதிர்கொள்வதற்கான பயிற்சிகளைப் பெற்றுள்ளனர். பாரம்பரிய பரம்பரை மருத்துவ முறைகளில் பயிற்சி பெற்ற ஆயுஷ் மருத்துவ அலுவலர்களை அரசு ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கிறது. எனினும், அவர்கள் எம்பிபிஎஸ் மருத்துவர்களையும் ஊரக மருத்துவ உதவியாளர்களைவிட திறமை குறைவானவர்தான் என்று அந்த ஆய்வு சுட்டிக்காட்டுகிறது.

ஒரு கிராமத்தில் பல்லாண்டு காலமாக சுகாதார பராமரிப்புகள் புறக்கணிக்கப்பட்டு வந்ததால் வேதனை அடைந்த மீனாட்சி கவுதம் என்பவர் ஒரு பொது நல வழக்கை தில்லி உயர்நீதிமன்றத்தில் 2009ம் ஆண்டு பதிவு செய்துள்ளார். நெதர்லாந்து நாட்டின் எராஸ்முஸ் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த சுகாதாரக் கொள்கை மற்றும் நிர்வாக நிறுவனத்தின் மருத்துவ முதுகலைப் படிப்பு படித்து வருபவராவார். அவரது மனுவில், 2007ம் ஆண்டில் மருத்துவ கல்வி தொடர்பாக அமைக்கப்பட்ட ஒரு நடவடிக்கைக் குழுவின் அறிக்கை இணைக்கப்பட்டுள்ளது. அதில் கிராமப் பகுதிகளில் தகுதி உள்ள சுகாதாரப் பணியாளர்களுக்கான தேவையை ஈடுகட்ட மாவட்ட அளவில் மூன்றாண்டு மருத்துவ பயிற்சி ஒன்றை கொண்டு வர வேண்டும் என பரிந்துரைக்கப்பட்டுள்ளது. அந்த மனுவை

## சுகாதாரத்திற்கான திட்டங்கள்

**தேசிய ஊரக சுகாதார திட்டம்**

**சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகம்**

**ஜனனி சுரக்ஷா யோஜனா**

மருத்துவமனை பிரசவங்களை ஊக்குவிப்பதற்கான திட்டம். கிராமங்களைச் சேர்ந்த பெண்களுக்கு இத்திட்டத்தின்கீழ் பணமாக ஊக்கத்தொகை அளிக்கப்படுகிறது. கர்ப்ப காலத்திலும் பிரசவத்திற்குப் பிறகும் தடுப்பு, நோய்தடுப்பு மருந்து, ஊட்டச்சத்து போன்ற கவனிப்புகளை ஆஷா பணியாளர்கள் மேற்கொள்கிறார்கள்.

**ஜனனி சிசு சுரக்ஷா கார்யக்ராம்**

இலவச போக்குவரத்து, பிரசவம், மருந்துகள், உணவு. புதிதாகப் பிறந்த குழந்தைகளுக்கு பிறந்த 30 நாட்கள் வரையில் நோய்களுக்கான இலவச சிகிச்சை.

**புதிதாக பிறந்த குழந்தைகளுக்கான வசதிகள் அடிப்படையிலான கவனிப்புகள்**

புதிதாக பிறந்த குழந்தைகளுக்கான சிறப்பு பராமரிப்பு பிரிவுகளை ஏற்படுத்துதல், அக்குழந்தைகள் உறுதிப்படுவதற்கான பிரிவுகளையும், புதிதாகப் பிறந்த குழந்தைகளுக்கான வெதுவெதுப்பு கருவிகளையும் வழங்குதல்.

**சிசுக்கள் மற்றும் இளம் குழந்தைகளுக்கான உணவுத் திட்டம்**

குழந்தை பிறந்ததும் தொடக்க நிலையில் தாய்ப்பால் வழங்குவதையும், முதல் ஆறு மாதங்களுக்கு தொடர்ந்து தாய்ப்பால் வழங்குவதையும் ஊக்குவித்தல். இரண்டு ஆண்டுகள் வரையில் தாய்ப்பாலுடன் இணைந்த துணை உணவுகளை தொடர்ந்து வழங்குதல்

**ஊட்டச்சத்து மறுவாழ்வு மையங்கள்**

கடுமையான அளவிற்கு ஊட்டச்சத்து குறைந்த குழந்தைகளுக்கு உள்நோயாளிகளாக சிகிச்சை அளிப்பதற்கான சுகாதார வசதிகளை ஏற்படுத்துதல் தாய்மார்களுக்கு ஆலோசனைகள் வழங்குதல்.

**கடுமையான சுவாசக் கோளாறுகள், வயிற்றுப் போக்குடன் இணைந்த நோய்கள் காரணமாக ஏற்படும் கடுமையான உடல்நிலை சரிவுகளையும் சிசு மரணத்தையும் குறைப்பதற்கான திட்டம்**

வயிற்றுப் போக்குடன் இணைந்த நோய்களுக்கும் கடுமையான சுவாசக் கோளாறுகளுக்கும், சர்க்கரையும் உப்பும் கலந்த நீர் (ஓஆர்எஸ்) வழங்குதல் போன்ற உலக சுகாதார நிறுவன வழிகாட்டல்களை அரசாங்கம் பின்பற்றுகிறது.

**நுண் ஊட்டச்சத்து மாற்று உணவுகள்**

வைட்டமின் ஏ, இரும்புச் சத்து, ஃபோலிக் அமிலம் ஆகியவற்றை வழங்குதல்.

**சீரான நோய்தடுப்பு திட்டம்**

காசநோய், டிப்தீரியா, பெர்டுசிஸ், போலியோ, பெட்டனஸ், ஹெப்பாடிடீஸ் பி, அம்மை போன்ற தடுக்கக்கூடிய நோய்களுக்கான தடுப்பு மருந்துகளால் குழந்தைகளுக்கு நோய் தடுப்பு ஆற்றலை மேம்படுத்துதல்.

**1980 முதல் சிசு மரண நிலவரம்**

**ஒருங்கிணைந்த குழந்தை மேம்பாட்டு சேவைகள் திட்டம், மகளிர் மற்றும் குழந்தை மேம்பாட்டு அமைச்சகம்**

**ஊட்டச்சத்துக்கான துணை உணவுத் திட்டம்**

ஊட்டச்சத்துள்ள உணவுகளை வழங்குதல். வைட்டமின் ஏ பற்றாக்குறை, ரத்த சோகை நிலைமைகளை கண்காணித்தல்

**சுகாதார பரிசோதனை**

பிரசவரத்திற்கு முன்பும் பின்பும் இளம் தாய்மார்களுக்கான கவனிப்பு, வயிற்றுப்போக்கு, புழுக்கள், இதர நோய்களுக்கான சிகிச்சை அளித்தல்

ஏற்றுக்கொண்ட தில்லி உயர்நீதிமன்றம் மத்திய அரசு அப்படிப்பட்ட ஒரு பயிற்சியை தொடங்குவது குறித்து பரிசீலிக்குமாறு மத்திய அரசுக்கு பரிந்துரை செய்தது. 2010 நவம்பர் மாதம் இந்திய மருத்துவ மன்றம், நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவில், ஊரக சுகாதார இளநிலை பயிற்சித் திட்டம் ஒன்றை இரண்டு மாத காலங்களில் தொடங்குவது குறித்து முடிவு செய்யப்படும் என்றும், அதன்பிறகு அரசாங்கம் அதற்கான செயல் நடவடிக்கையை மேற்கொள்ளும் என்றும் கூறியது. எனினும், இந்த பயிற்சித் திட்டம் குறித்து தெளிவான நிலைபாடு எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. இதற்கான பயிற்சித் திட்டம் காலாவதியாவதற்கு ஒரு மாதத்திற்கு முன்பாக, இதை உறுதிப்படுத்துவதற்கு இந்திய மருத்துவக் கழக ஆளுநர்கள் அமைப்பு திட்டமிட்டிருப்பதாக கூறப்படுகிறது. இதில் ஏற்படக் கூடிய தாமதம் என்பது இந்த திட்டத்தை பரணில் தூக்கிப் போடுவதாகிவிடும்.

### உள்கட்டுமான தடைக்கற்கள்

சுகாதாரப் பணியாளர்களால் சிசு மரண விகிதத்தை ஓரளவுக்குத்தான் கீழிறக்க முடியும். நிலைமையில் மேலும் முன்னேற்றம் ஏற்பட வேண்டுமானால், உள்கட்டுமானங்களும் ஊட்டச்சத்து வாய்ப்புகளும் சிறப்பானதாக இருந்தாக வேண்டும். என்கிறார் சமீர் கார்க். ராய்பூர் நகரில் உள்ள மாநில சுகாதார ஆய்வு மையத்தின் மூத்த திட்ட ஒருங்கிணைப்பாளராக இருப்பவர் இவர். ஆசிய பசிபிக் பகுதிகளுக்கான 1000 ஆண்டு மேம்பாட்டு திட்ட இலக்கு தொடர்பாக ஐக்கிய நாடுகள் அமைப்பு வெளியிட்டுள்ள ஒரு அறிக்கையில்,

மருத்துவமனைகளுக்கு செல்வதற்கான முறையான நல்ல சாலைகள் இருக்குமானால், சிகிச்சையை சிறப்பாக மேற்கொள்வதற்கு வசதியாக சீரான மின்சார விநியோகம் இருக்குமானால், இப்பகுதிகளில் பிரசவ கால மரணங்களும் சிசு மரணங்களும் கணிசமாகக் குறையும் என்று கூறப்பட்டுள்ளது. நோய்த்தடுப்பு திட்டங்களை பயனுள்ள முறையில் செயல்படுத்த வேண்டுமானால் செயலூக்கமுள்ள போக்குவரத்து ஏற்பாடுகள் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்று அந்த அறிக்கை கூறுகிறது.

பயனுள்ள போக்குவரத்து அமைப்பு என்பது உதாரணமாக ஆம்புலன்ஸ் திட்டம் என்பது சுகாதாரப் பணியாளர்களின் அடித்தளப் பணிகளுக்கு பேருதவியாக அமைகிறது. பொதுத்துறை – தனியார் துறை கூட்டு என்ற அடிப்படையில் மாநில அரசுகளால் கொண்டுவரப்பட்ட இலவச ஆம்புலன்ஸ் சேவைக்கான '108' தொலைபேசி எண் திட்டம் உத்தர்கண்ட், ராஜஸ்தான், சத்திஸ்கர் ஆகிய மாநிலங்களின் சுகாதார கவனிப்பிற்கு ஒரு முதுகெலும்பாக அமைந்திருக்கிறது. இதை மேலும் மேம்படுத்த வேண்டுமானால் சுகாதார மையங்களும் மாவட்ட மருத்துவமனைகளும், சிக்கலான சிகிச்சைகளை மேற்கொள்ளத் தோதாக போதிய வசதிகளைப் பெற்றிருக்க வேண்டும். ருத்ரபிரயாக் மாவட்டத்தில் சிக்கலான பிரச்சனைகள் வருகிறபோது நோயாளிகள் 30கி.மீட்டர் தொலைவில் உள்ள ஸ்ரீநகர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்குத்தான் அனுப்பப்படுகிறார்கள். ஏனென்றால், இந்த மாவட்டத்தின் எந்த ஒரு ஆரம்ப சுகாதார நிலையத்திலும் அல்லது மாவட்ட மருத்துவமனையிலும் போதுமான வசதிகள் இல்லை. புதிதாகப் பிறக்கும் குழந்தைக்கு தேவையான அடிப்படை வசதிகள் குறித்து தேசிய ஊரக சுகாதாரத் திட்டத்தில் (என் ஆர் எச் எம்) உறுதியளிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், எல்லா முக்கிய மருத்துவமனைகளிலும் அந்த வசதிகள் ஏற்படுத்தப்படவில்லை. ஹமீர்பூர் நகரில் உள்ள மாவட்ட மகளிர் மருத்துவமனையில் பிறந்த குழந்தையை பாதுகாப்பதற்கான இன்குபேட்டர் கருவி கிடையாது. குழந்தையை ஒரு வெதுவெதுப்பான நிலையில் வைத்திருப்பதற்கான 'பேபி கோர்னர்' கருவி மட்டுமே இங்கு இருக்கிறது. அதிலேதான் குழந்தைகளை வைத்திருக்கிறார்கள். திட்டக் குழுவுக்கான நடவடிக்கைக் குழு அறிக்கை ஒன்றில், என்ஆர்எச்எம் பற்றிய ஒரு மதிப்பீடு வைக்கப் பட்டுள்ளது. அதில் 11வது ஐந்தாண்டு திட்ட காலத்தில் மாவட்ட மருத்துவமனைகளில் செய்யப்பட்ட முதலீடுகள், ஜனனி சுரக்ஷா யோஜனா திட்டத்தின் காரணமாக மருத்துவமனைகளில் அதிகரித்துள்ள பிரசவங்களால் அதிகரித்துள்ள சுமைகளை ஈடுகட்டுவதற்கு போதுமானதாக இல்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது. 12வது ஐந்தாண்டு திட்ட காலத்தில் மருத்துவமனைகளின் படுக்கைகள் எண்ணிக்கை அதிகரிக்கப்பட வேண்டும் என்று அந்த அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

**ஊட்டச்சத்துப் புதிர்**

## சிசு மரண விகிதம் குறைப்பு
## போலியான சாதனைகளை காட்ட முடியுமா?

சிசு மரண விகிதத்தை குறைத்தாக வேண்டும் என்று நாட்டின் சுகாதாரத் துறை பணியாளர்கள் கட்டாயப்படுத்தப்படுகிறார்கள். புள்ளிவிவரங்களில் சிறு அளவுக்கு போலியான தகவல்களை சேர்த்தால் கூட காகித அளவில் இந்த விகிதத்தை குறைத்துக் காட்ட முடியும். உதாரணமாக, தாயின் உடல் இருந்து வெளியே வரும் குழந்தை அசைவு போன்ற எந்த ஒரு உயிருடன் இருப்பதற்கான அறிகுறியை வெளிப்படுத்தினால் அது உயிருடன் இருப்பதாக கருதப்படுகிறது. அந்த அறிகுறிகள் தற்காலிகமானதாக இருந்தாலும் கூட அந்தக் குழந்தை உயிருடன் இருப்பதாகவே கருதப்படும். எனவே, குழந்தை உயிருடன் பிறக்கவில்லை, இறந்த பிறகுதான் பிறந்தது என்று பதிவு செய்துவிட்டால் சிசு மரண விகிதத்தை குறைத்துவிட முடியும். உயிருடன் பிறக்கிற 500 குழந்தைகளில் 50 குழந்தைகள் மரணமடைகின்றன என்றால் உயிருடன் பிறக்கிற 1000 குழந்தைகளில் 80 குழந்தைகள் இறப்பதாக கணக்குக் காட்ட முடியும். அந்தக் குழந்தைகளில் 10 குழந்தைகள் இறந்துதான் பிறந்தன என்று பதிவு செய்தால் உயிருடன் பிறக்கிற 490 குழந்தைகளில் 30 குழந்தைகள் மட்டுமே இறப்பதாக அல்லது 61 மட்டுமே என காட்ட முடியும்.

"ஒரு குழந்தை இறந்தே பிறந்தாலும் கூட, அதற்கு மாவட்ட நிர்வாகம்தான் பொறுப்பேற்க வேண்டும். தாய்க்கு சரியான கவனிப்பு இல்லாத நிலையில் குழந்தை இறந்து பிறந்திருக்கக் கூடும்," என்கிறார் தில்லியைச் சேர்ந்த பொது சுகாதார ஆதார கூட்டமைப்பின் தேசிய அமைப்பாளரும், தேசிய ஆஷா கண்காணிப்பு அமைப்பைச் சேர்ந்தவருமான வந்தனா பிரசாத்.

சிசு மரணங்களில் 50 சதவீதத்திற்கு மேல் தாய்க்கும் குழந்தைக்கும் போதுமான ஊட்டச்சத்து இல்லை என்ற நிலைமையோடுதான் சம்மந்தப்பட்டிருக்கின்றன. எனவே, அங்கன்வாடிகள் மூலம் வழங்கப்படும் ஊட்டச்சத்து உணவு என்பது கர்ப்பகால சுகாதாரத்திலும் சிசுக்களின் சுகாதாரத்திலும் முக்கியப் பங்காற்றுகிறது. "ஆனால், அங்கன்வாடிகள் முறையாகச் செயல்படுகின்றனவா என்பது எங்களுக்கு ஒருபோதும் தெரியவராது. என்ஆர்எச்எம் திட்டத்திற்கும் ஒருங்கிணைந்த குழந்தை மேம்பாட்டுத் திட்டத்திற்கும் இடையே தொடர்பு இல்லாமல் இருக்கிறது," என்று ஹமீர்பூர் தலைமை மருத்துவ அலுவலர் ஏ.என். சித்திக் கூறுகிறார்.
'டவுன் டு எர்த்' குழுவினர் பல்வேறு மாவட்டங்களுக்கு நேரில் சென்றபோது இந்த தொடர்பின்மை என்பது

## சிறந்த பணிக்கு சீரிய எடுத்துக்காட்டு

பிளாஸ்பூர் மாவட்டத்தின் கனியாரி கிராமத்தில், ஜன் ஸ்வஸ்தியா சஹயோக் (ஜேஎஸ்எஸ்) என்ற மக்கள் சுகாதார ஆதாரவுக்குழு, மாவட்டத்தின் சிசு மரண விகிதத்தைவிட குறைவான விகிதத்தை ஏற்படுத்த முடிந்துள்ளது. கர்ப்பிணிப் பெண்களை கவனித்துக்கொள்வதற்கான பயிற்சியை கிராமப் பெண்களுக்கு வழங்கியதன் மூலம் இதனை அந்த அமைப்பு செய்துள்ளது. ரத்த அழுத்தம், ரத்த கசிவு போன்றவற்றை கவனிப்பதற்கான பயிற்சிகள் அவர்களுக்கு தரப்பட்டது. கர்ப்பிணிப் பெண்களுக்கு பூச்சிகளைத் தடுப்பதற்கான படுக்கை வலைகள் தரப்பட்டன. மலேரியாவைத் தடுப்பதற்கான க்ளோரோகுயின் மருந்து தரப்பட்டது. க்ளோரோகுயின் பயன்படுத்துவது கருக்கலைப்புக்கு இட்டுச் செல்லக் கூடும் என்று அரசு அண்மையில் எச்சரித்துள்ளது. இருந்தபோதிலும் ஒரு மாற்று ஏற்பாடு கண்டுபிடிக்கப்படும் வரையில் இது ஒரு நம்பகமான ஏற்பாடாக தொடர வேண்டிவுள்ளது என்று ஜேஎஸ்எஸ் கூறுகிறது.

சிசு மரண விகிதத்தைக் குறைக்க சில தொழில்நுட்பங்களையும் ஜேஎஸ்எஸ் அறிமுகப்படுத்தியுள்ளது. ஹைப்போ தெர்மியா (உயர் வெப்பம் பாதிப்பிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்க) ‘தூங்குவதற்கான பை’ என்பதை ஜேஎஸ்எஸ் உருவாக்கியுள்ளது. அதில் சூடுபடுத்தப்பட்ட பாமாயில் உறைகள் உள்ளன. இந்தப் பைகளை வீட்டிலும் பயன்படுத்த முடியும். பெற்றோர் தங்களது புதிய குழந்தையை சிசுக்கள் கவனிப்பு மையங்களுக்கு கொண்டு செல்ல வேண்டிய அவசியம் இல்லை. சிசுக்களுக்கு ஊட்டச்சத்து கிடைக்கச் செய்வதற்காக 72 சிசு மையங்களை (கிரஷ் அல்லது புல்வாரி) ஜேஎஸ்எஸ் நடத்துகிறது. 6 முதல் 3 வயதுள்ள குழந்தைகள் இந்த கிரஷ்களில் ஒரு பணியாளரின் பொறுப்பில் பராமரிக்கப்படுகின்றன. இதனால், அதிக செலவு ஏற்படுவதில்லை என்கிறார் ஜேஎஸ்எஸ் நிர்வாகிகளில் ஒருவரான யோகேஷ் ஜெயின். ஒவ்வொரு குழந்தைக்கும் ஒரு நாளுக்கு ரூ.12.50 மட்டுமே உணவுக்காகவும் பராமரிப்புக்காகவும் தேவைப்படுகிறது. ஒரு ஊழியர் 10 குழந்தைகளை கவனித்துக்கொள்ள முடிகிறது. 2003ல் இந்தத் திட்டம் தொடங்கப்பட்ட பிறகு கனியாரி கிராமத்தில் 86 என்ற அளவில் இருந்த சிசு மரண விகிதம் 32 என்ற அளவிற்கு குறைந்துவிட்டது என்று ஜேஎஸ்எஸ் கூறுகிறது.

சிசு மரண விசிதத்தைக் குறைக்க அரசாங்கம் தனது ஊட்டச்சத்து திட்டங்களில் புல்வாரி பாணியை சேர்க்கலாம் என்று ஜெயின் கூறுகிறார். தற்போதைய அரசாங்க திட்டத்தின்கீழ் தாய்மார்களுக்கு வீட்டுக்கு எடுத்துச் செல்லக்கூடிய உணவுப் பொருட்கள் வழங்கப்படுகின்றன. அதனால், குழந்தைகளுக்கு பலன் ஏற்படலாம், ஏற்படாமலும் போகலாம். குழந்தையை அங்கன்வாடியில் பதிவு செய்வதற்கு செய்யும் வரையில் மூன்றாண்டு காலத்திற்கு, குழந்தையின் ஊட்டச்சத்து நிலை கண்காணிக்கப்படுவது இல்லை. அதன்பிறகு ஊட்டச்சத்து குறைவை சமாளிப்பது மிக தாமதமாகிவிடுகிறது.

அப்பட்டமாகத் தெரிந்தது. ருத்ரபிராய் மாவட்டத்தின் பட்வாரி கிராமத்தில் உள்ள ஒரு அங்கன்வாடி மையத்தில் சமையலுக்கான எரிவாயுவோ, பாத்திரங்களோ கிடையாது. அங்குள்ள பணியாளர்களுக்கு கடைகளிலிருந்து வறுவல்கள் வாங்கி குழந்தைகளுக்கு விநியோகிப்பதைத் தவிர வேறு வழியில்லை. பெயர் குறிப்பிட விரும்பாத ஒரு அங்கன்வாடி ஊழியர், மாவு விநியோகிக்கிற ஒப்பந்ததாரருக்கு லஞ்சமாக ரூ.500 கொடுப்பதற்கான ஏற்பாடுகளை தாங்கள் செய்ய வேண்டியிருக்கிறது என்றார். ஹமீர்பூரில் சில அங்கன்வாடி பணியாளர்கள் ஊட்டசத்து குறைந்த குழந்தைகளைப் பற்றி பதிவு செய்வதில்லை. “அப்படிப்பட்ட குழந்தைகளுக்கு கூடுதலாக உணவுப் பொருள்களை வழங்க வேண்டும், அவர்களது வளர்ச்சியை கவனித்து வரவேண்டும் என்பதால் அவ்வாறு பதிவு செய்வது எங்களுக்கு சிக்கலாக இருக்கிறது,” என்கிறார் ஒரு ஊழியர்.

“ஊழலையும், கசிவுகளையும் குறைக்க தகவல் தொழில்நுட்பத்துடன் இணைந்த திட்டங்களை மேம்படுத்த வேண்டியுள்ளது,” என்று பன்னாட்டு சேவை அமைப்பாகிய ‘குழந்தைகளைக் காப்போம்’ நிறுவனத்தின் மூத்த ஆலோசகர் ராஜீவ் டான்டன் கூறுகிறார். அத்துடன் எழுத்தறிவை பரப்புவதில் அக்கறைக் காட்டப்பட வேண்டிவுள்ளது. விழிப்புணர்வை வளர்க்கும் திட்டங்களும் மேற்கொள்ளப்பட வேண்டிவுள்ளது. இத்தகைய அணுகுமுறைகள் மூலமே சிசு மரண விகிதத்தை குறைக்க முடியும்.

ஒரு சமூகத்தின் முன்னேற்றத்தை அளவிடுவதற்கான தனி ஒரு குறியீடாக இருப்பது சிசு மரண விகிதம்தான். 12வது ஐந்தாண்டு திட்டத்தை இறுதிப்படுத்துவதில் ஈடுகிற, கொள்கைகளை உருவாக்குகிறவர்களாக இருக்கிறவர்களின் மனங்களில், ஊரக சுகாதார பணியாளர்களை வலுப்படுத்துவதற்காக கூடுதல் பணம் செலவிடுவது என்ற நோக்கம் அழுத்தமாகப் பதிய வேண்டும்.

– **ஆதாரம்:** DOWN TO EARTH, 1 - 15 March, 2012

# பாடப்புத்தக சுமை போனாலும் நோட்டு புத்தக சுமை போகவில்லை

### தனியார் பள்ளிகளுக்கு தமிழக அரசு எச்சரிக்கை

தனியார் பள்ளிகள், தேவையில்லாத நோட்டுப் புத்தகங்களை மாணவர்கள் கொண்டுவர நிர்பந்தம் செய்யாமல், தேவையானவற்றை மட்டுமே கொண்டுவர, பள்ளி நிர்வாகங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என, பள்ளிக் கல்வித்துறை செயலர் சபிதா உத்தரவிட்டார். இளம் வயதிலேயே, அதிகமான புத்தகங்கள் மற்றும் நோட்டுகளை சுமப்பதால், மாணவ, மாணவியர், முதுகு தண்டுவடம் பாதிப்பு உள்ளிட்ட பல்வேறு பிரச்சனைகளை எதிர்கொள்கின்றனர்.

### முப்பருவ கல்வித்திட்டம்

இந்தப் பிரச்சனை குறித்து ஆய்வு செய்த தமிழக அரசு, புத்தகச் சுமையை குறைத்து, அவர்களின் கற்கும் திறனை மேம்படுத்தவும்; ஒட்டுமொத்த கல்வித்தரத்தை அதிகரிக்கும் வகையிலும், முப்பருவ கல்வி திட்டத்தை அமல்படுத்தியது. ஜூன் மாதம் முதல், ஒன்று முதல் எட்டாம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கு, இத்திட்டம் அமலுக்கு வந்தது. ஆனால், அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் பள்ளி மாணவ, மாணவியர் மட்டுமே பலன் பெற்று, எடைகுறைந்த புத்தகப் பையை எடுத்துச் செல்கின்றனர்.

அதேசமயம், மெட்ரிகுலேஷன் மற்றும் ஆங்கிலோ இந்தியப் பள்ளிகளில், படிக்கும் மாணவர்களுக்கு, புத்தகச் சுமை குறைந்தாலும், நோட்டுப் புத்தகச் சுமை குறையவில்லை. பள்ளி நிர்வாகங்கள் தரும் நோட்டுப் புத்தகங்களில், 60 சதவீதம் மட்டுமே பயன்படுகிறது. மீதமுள்ள 40 சதவீத நோட்டுப் புத்தகங்களை, மாணவர்கள் பயன்படுத்துவதில்லை.

### ஆய்வில் வெட்ட வெளிச்சம்

மெட்ரிக்குலேஷன் பள்ளிகளின் இணை இயக்குனர் கார்மேகம், சமீபத்தில் ராமநாதபுரத்தில், மெட்ரிகுலேஷன் பள்ளி ஒன்றில் ஆய்வு நடத்தியபோது, 30 கிலோ எடையுள்ள மாணவனின் பையில், 10 கிலோ எடையுள்ள நோட்டுப் புத்தகங்கள் இருந்தன.

அன்றைய நாளுக்கு தேவையான நோட்டுப் புத்தகங்கள் தானா என, ஆய்வு செய்ததில், பாதி நோட்டுப் புத்தகங்கள் தேவையற்றது என தெரிய வந்தது. அதே பள்ளியில் பணிபுரியும் ஆசிரியருடைய, பிள்ளையின் பையை, இணை இயக்குநர் சோதனையிட்டபோது, அன்றைய பாட வேளைகளுக்கு தேவையான நோட்டுப் புத்தகங்கள் மட்டும் இருந்தன. அவற்றின் எடை, 3.5 கிலோ இருந்தது.

இதுகுறித்து விசாரித்ததில், அந்த ஆசிரியர், தினமும் காலையில், தேவையான நோட்டுப் புத்தகங்களை மட்டும் வைப்பது தெரியவந்தது.

இதையடுத்து, தேவையற்ற நோட்டுப் புத்தகங்களை கொண்டு வருமாறு மாணவர்களை நிர்ப்பந்தம் செய்யக் கூடாது என, பள்ளி நிர்வாகத்திடம் இணை இயக்குநர் கண்டிப்புடன் கூறினார்.

### விரைவில் சுற்றறிக்கை

பள்ளிக் கல்வித்துறை செயலர் சபிதாவிடம் கேட்டபோது, “தேவையில்லாத நோட்டுப் புத்தகங்களை கொண்டு வருமாறு, தனியார் பள்ளி நிர்வாகங்கள் நிர்ப்பந்தம் செய்வதாக தகவல்கள் வருகின்றன.

**பாடப்புத்தகங்களின் எடை – முழு விவரம்**

| வகுப்பு | மாணவர்களின் சராசரி எடை | | புத்தகப்பை எடை | |
|---|---|---|---|---|
| | மாணவர் மாணவியர் (எடை கிலோவில்) | | பழையது | முப்பருவ கல்வி முறை |
| 1 | 15 | 12 | 3 | 1.50 |
| 2 | 18 | 14 | 3 | 1.50 |
| 3 | 19 | 17 | 4 | 2.00 |
| 4 | 19 | 17 | 4 | 2.00 |
| 5 | 27 | 25 | 5 | 2.50 |
| 6 | 31 | 29 | 7 | 3.25 |
| 7 | 33 | 31 | 7 | 3.35 |
| 8 | 37 | 35 | 7 | 3.75 |

அரசுப் பள்ளி மாணவ, மாணவியர் எடுத்துச் செல்வது போல், தேவையான நோட்டுப் புத்தகங்களை மட்டும் கொண்டு வருமாறு பள்ளி நிர்வாகங்கள் கூற வேண்டும். இதுகுறித்து, அனைத்து தனியார் பள்ளிகளுக்கும் விரைவில் சுற்றறிக்கை அனுப்பப்படும்,'' என்றார்.

– **ஆதாரம்:** தினமலர், 29.7.2012

ஊராட்சி ஒன்றியப்பள்ளியின் மதிய உணவை மட்டுமே நம்பியுள்ள
பூம் பூம் மாட்டுக்கார சமூகத்தைச்சேர்ந்த குழந்தை



சென்னை மாநகராட்சிப் பள்ளிகளில் மாணவர்கள் பயன்படுத்த முடியாத நிலையிலுள்ள கழிவறைகள்



*Education Material Published on behalf of*

**Tamil Nadu Child Rights Protection Network by**
**Human Rights Advocacy and Research Foundation (HRF)**

*# 10, LDG Road, Little Mount, Saidapet, Chennai - 600 015, India.*
*☎ 22353503, 22351919 Fax : 22355905,*
*E-mail : humanrightsadvocacyandresearch@gmail.com*
*website : www.humanrightsadvocacyandresearchfoundation.org*